# அறவாணர் ஆய்வில் அறம்



ஆசிரியர்

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

# அறவாணர் ஆய்வில் அறம்

ஆசிரியர்
இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

# நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **அறவாணர் ஆய்வில் அறம்** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரன்** |
| முதற்பதிப்பு | 2007 |
| தாள் | 11.6 கி. ஒயிட் மேப்லித்தோ |
| அளவு | கிரௌன் 1/8 |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 128 |
| நூல் கட்டமைப்பு | இயல்பு (சாதாரணம்) |
| விலை | உருபா. **40/-** |
| படிகள் | 1000 |
| நூலாக்கம் | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| நூல் வடிவமைப்பு | செல்வி வ. மலர் |
| அச்சிட்டோர் | ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் 620 101<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

# அறவாணரும் அறமும்

நுண்மாண் நுழைபுலமிக்க அறிஞர் க.ப. அறவாணர் அண்மையில் வள்ளுவப் பெயரால் ஒரு பெருநூல் வெளியிட்டுள்ளார்.

வெளியீட்டுச் சிறப்பும் பரப்புதல் சிறப்பும் இதழ் களில் சிறந்து விளங்கின.

அரிய பெரிய கொடையாக ஆய்வு வளமாகத் திகழும் என ஒரு நிறைவு இருந்தது.

ஏனெனில், திருக்குறள் அவையங்களில் மேதக இருந்து மாந்தரியம் வரலாற்றியம் வாழ்வியம் தமிழர்பால் கொண்ட அக்கறை என்பவற்றை எல்லாம் புலப்படுத்தும் புலமைத் தோன்றலாகத் திகழ்ந்து வருபவர்.

ஓயாக் கல்வியும் ஒழியா ஆய்வும் தொடர் எழுத்தும் கொண்டவர்.

ஆதலால், அவர் ஆக்கிய வள்ளுவத்தை ஆர்வத்தாற் கற்க உந்துதலாயது.

அவ்வெதிர்பார்ப்பும் ஆர்வமும் கூட்ட வள்ளுவ முகப்பைத் திருப்பிய முதற்பக்கத்திலேயே, முதற்பாவலர்

பற்றியும் முப்பால் பற்றியும் அவர் முன்வைத்த கருத்துகள் முகத்தைச் சுருங்க வைத்தன.

ஆயினும், நெஞ்சம் நைந்தாலும் நேயம் கருதியும் நிறை நோக்குக் கருதியும் தொடர்ந்து ஓதினேன். முதற்பகுதி இரண்டாம் பகுதி என இருபகுதிகளாக அமைந்த அந்நூலின் முற்பகுதியை மூன்று மணிப்பொழுதுள் படித்து முடித்தேன்.

மோதியும் முட்டியும், முனைவர் ஆய்வு முரண் களும் முடிவுகளும் அலைத்துக் குலைத்தன!

தொல்பழஞ் செவ்வியல் மொழி என்பதற்குச் சீரிய சான்றுகளாகத் திகழ்வனவற்றுள் தலைப்பட்டு நிற்கும் வள்ளுவம், இவ்வாறு செவ்வியல் சீரழிவுக்கு ஆட்பட்டு உள்ளதே என்னும் ஆற்றாத்துயர் கிளர்ந்தது!

மயக்கத்திற்கோ மாற்றத்திற்கோ இடமே இல்லாத இடத்தும் மயங்கியும் மாறியும் செல்லுதல் புலப்பட்டது!

உரைகண்டார் மயக்கில் உளம்பதித்து, உண்மையை - நூலாசிரியர் உளத்தைப் புரியாமல் - நூலாசிரியர் மேல் பழிசூட்டல் பளிச்சிட்டே தோன்றியது!

புதையுண்டுபோன கருத்துகளின் பொய்மையை மீளப் பொலிவாக மெய்மைப்படுத்தும் முயற்சியும் விளங்கியது!

சமயம் சார்த்திப் பார்க்கும் பார்வையும் கூட விளங்கியது!

இவையெல்லாம் ஏனெனப் புரியவில்லை! புரியா தான் புரிய நினைதலும் புலம்பலும் இயற்கை.

அவ்வகையில் புரிவான் வேண்டி எண்ணிய எண்ணத்தை அடக்கிவைத்தல் அடாத்தனம் என நெஞ்சறி சான்றாக முற்பகுதிக்கு உரிய புதிவுகளைச் செய்து முடித்தேன்.

மூலத்தைத் திரித்தலோ இடமாற்றியமைத்தலோ முழுமூலக் கேட்டுக்கு முன் அடி எடுத்துக் கொடுப்ப தாகும் என்பது என் இளமை தொட்டே ஏற்பட்டு விட்டது. மூலத்தைத் திரித்தும் இடமாற்றியும் விளையாடியவர் களை அவர் இவர் எனப் பாராமல் எவரெனினும் கண்டிக்கத் தவறுவது இல்லை என்னும் கடைப்பிடி நோன்பால் இடப் பெயர்ச்சி செய்து எண்ணிட்டு வைத்த பகுதியைத் தொட்டுப் பார்த்தலும் ஆகாது என்று, அதற்கு மறுப்பு எழுதுதல் தானும் மாணாச் செயல் என்ன முற்பகுதி ஆய்வொடு இச் சுவடி வெளியிடப்படுகின்றதாம்!

புண்படுத்தக் கூறும் வழக்கம் எனக்கு இல்லை!
பண்படுத்தக் கூறுவதைத் தவிர்வதும் இல்லை!
வருந்தக் கூறுவதை ஒருநாளும் கொண்டது இல்லை!
திருந்தக் கூறுவதை எந்நாளும் விட்டதும் இல்லை!

பேரறிஞர் நூலுக்கு, மறுப்பு எழுதும் பெருந்துயரம் போல் துயரம் எதுவும் இல்லை!

மூன்று நாள்கள், ஊண் ஒய்வு உறக்கம் என்பவற்றில் உரிய அளவு கருத்துத்தானும் கொள்ளாமல் எழுதிய எழுத்து ஈதாம்!

இரா. இளங்குமரன்

# ஓர் அறிவிக்கை

"இயல்பாக எதனை எழுத வேண்டுமோ அதனை எழுதுவது கடமை. பிறர் எழுதியதற்கு மறுப்பு எழுத வேண்டும் எனத் தொடங்கினால் பெரிதும் எழுதுவ எல்லாம் மறுப்பெழுத் தாகவே போய்விடக்கூடும்" என்ற எண்ணம் எழுதத் தொடங்கிய காலம் தொட்டே எனக்கு உண்டாயிற்று.

ஆனால், தொல்காப்பியம் முதலாய நூல்களின் உரைகளைப் பார்க்கும்போது, நூலாசிரியர் கருத்துக்கும் உலகியலுக்கும் நம் பண்பாட்டுக்கும் நம் மொழியியலுக்கும் மாறாக எழுதியுள்ளவற்றை ஏற்க இயலா இடங்களும் இருந்தன. அவ்வுரையாசிரியர்கள் அவர்களுக்கு முந்தை உரையாளர்களை மறுத்தலும் புலப் பட்டது. பொருந்தா ஒன்றை மறுத்தலும் பொருந்தியதே என்பது புலப்பட்டது.

ஆயினும், மொழி வழி இனப்பண்பாட்டுக் காவல் என்னும் பொதுமை கருதிய மறுப்பை அன்றித் தன்னைத் தனிப்பட்ட நிலையிலோ தன்ஆய்வு பற்றி இன்றி, வேறு கருத்து வகையிலோ மறுத்து எழுதுவாரைக் கண்டு கொள்ளாமலும் தன் உணர்வுக்கு இடந்தராமலும் ஒதுக்குதல் வேண்டும் என்னும் உறுதிநோக்கும் உண்டாயிற்று.

ஆதலால், பொதுநலம் காக்கவேண்டி மறுத்தலும், தன்னைப் பற்றிய மறுப்பைப் புறம்தள்ளலும் என்னும் உறுதிப்பாடுகளின் வழியே எழுதலானேன்.

பேரகத்தியத் திரட்டு என்பதொருநூல். அரிய பெரிய பதிப்புப் பணியில் ஈடுபட்ட பவானந்தரால் வெளியிடப் பட்டது.

அந்நூல் பொருட்சிறப்பிலாப் புன் நூல் என்றும், முத்துவீரியத்தை முன்வைத்துக் கொண்டு அதனினும் மிகவாக வடசொற்பெருக்கொடு செய்யப்பட்ட நூல் என்றும் கண்டு,

'பேரகத்தியப் பெரும்புரட்டு'

என மறுப்பு எழுதினேன். நூலாக்கம் பெற்றது. வெளியிட்டது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

புதுவதாக 'ஐந்திரம்' என்னும் நூல் ஒன்று வெளிப் பட்டது. சொல்லடுக் கன்றிப் பொருள்நிலை இல்லா அந்நூல் **மயன்** அருளியதென்ற புனைவொடு வெளிப்பட்டது. அதனை ஆய்ந்து,

'புதிய ஐந்திரப் பொய்மை'

என மறுப்பு எழுதினேன். கழகவழி நூலாக்கமும் பெற்றது.

இதுகால் அறவாணர் திருக்குறள் ஆய்வும், திருக்குறள் பதிப்பும் இணைந்த **வள்ளுவம்** உலாக் கொள்கின்றது. உவகை ஏற்படுத்தும் என எண்ணிய அது, உருக்குலைப்புச் செய்ததோடு ஒவ்வாமைக்கு உறைவகமாகவும் இருப்பது ஒழியாப்புண்பாடு ஆயிற்று. ஆதலால், மறுப்பு எழுதுதலே மரபு காத்தல் எனக் கொண்டு எழுதியது,

**'அறவாணர் ஆய்வில் அறம்'**

என்னும் பெயரில் நூலாக்கம் பெறுகின்றது.

தனிப்பட்ட காழ்ப்பே குறியாய் என்னைப் பற்றி எழுதும் ஓரிருவர் எழுத்தைப் பார்த்தவர், 'இப்படி இவர்' எழுதியுள்ளார் என்று என்னிடம் கூறியபோது சிறிதும் வருந்தினேன் இல்லை. ஆனால், முன்னே எழுதிய ஒருவரைப்பற்றி,

"அவர் தமிழுக்கு ஆக்கம் செய்யும் தொண்டர் அவர் தொண்டை மதித்து என்னைப் பற்றி அவர் கூறிய பொருந்தா உரையைப் பொருட்டாகக் கொள்ளமாட்டேன்" என்று கூறி அமைந்தேன்.

பின்னே ஒருவர், ஒருமுறை அன்றிச் சிலமுறை தனி வாழ்வு பற்றியும் ஆய்வு பற்றியும் எழுதுவதை நலம் செய்வார் போல என் செவிக்குச் சிலர் கொணர்ந்ததுண்டு. அவர்க்கு நான் "கட்டுக் கிடைத் தொழுவத்தில் கிடந்த எருமை தெருவுக்கு வந்தபோது, தனக்கு ஏற்பட்ட தினவால் வாலைச் சுழற்றி அடிக்கிறது. அவ்வாலின் தெறிப்பாம் அருவறுப்புக்குப் பட்டென்ன பருத்தி என்ன பழங்கந்தை என்ன எல்லாம் ஒன்றே! தினவெடுத்த எருமை விடாது என்பதற்குச், "சொறி சிறங்கன் அரிசிறங்கன் மூக்குறுஞ்சி, ஊளையன் கதையே சான்று" எனக்கூறி, அமைந்தேன்.' இதுகாறும் அவ்வெழுத்தைப் பார்த்ததும் படித்ததும் இல்லை! பரிவுமட்டும் உண்டு.

ஐம்பான் ஆண்டுகளின் முன்னர் நிகழ்ந்தது. என் மாணவன் ஒருவன் தன் திருமணத்தை வாழ்த்த வர வேண்டும் என வேண்டினான். என்னோடும் இன்னோர் ஆசிரியரையும் அழைத்திருந்தான். இருவரும் மண்டபம் சென்றோம்!. வாயில் பக்கம் நுழையுமுன் 'புகைநெடி' புரிந்தது.

அப்படியே மண்டபத்துள் நுழையாமல் முன்னே இருந்த பந்தலில் நானும் அன்பரும் அமர்ந்தோம். எங்கள் வருகை அறிந்த மாணவனாம் மணமகன், மணமாலையோடு மண இருக்கையில் இருந்து நேரே வெளியே வந்து எங்களை உள்ளே அழைத்தான். "தமிழில் திருமணம் நிகழ்கிறதா? வேதியச் சடங்கில் நிகழ்கிறதா?" என்றேன். "ஐயர் நடத்துவார்" என்றான். "ஐயர் நடத்தட்டும் ஆரும் நடத்தட்டும்; தமிழ் மந்திரம் சொல்வாரா? தீ வளர்க்கிறார் அல்லவா! வடமொழி மந்திரம் தானே சொல்வார்? என்ன சொல் கிறார் என்பது உனக்கோ உன்மனைவிக்கோ வந்தவர்க்கோ புரியுமா?" என்றேன். தலையைக் கீழே தொங்கப் போட்டான்!

"திருமணம் நடக்கட்டும். வெளியே இருந்துவிட்டுப் போய்விடுவேன்" என்றேன்.

"நீங்கள் வாழ்த்த வேண்டும் என்றுதான்... என்றான். "என் மூஞ்சியில் காறித்துப்பு! என்பிள்ளை என்மாணவன்! இவ்வளவு தான் அவன் குணம்!" என என் முகத்தைத் துடைத்துக் கொள்வோன். என் மொழியை இழிமைப் படுத்துவதைத் தீட்டு ஆக்குவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது; உள்ளே போ.." என்று சொல்லிவிட்டு, திருமணப் பண்பாட்டு நாகரிகம் கருதிப் பந்தலில் அமர்ந்திருந்து, யானும் அன்பரும் வெளியேறினோம்!

தமிழன் தமிழனாக இருந்து தமிழ் நெறியில் நடத்தாத எந்தத் திருமணத்தையும் இந்த எண்பதைத் தொடும் காலம் வரை கண்டதில்லை.

பாழும் சின்ன - சின்னத் தனத்தை ஓயாமல் ஒழியாமல் பரப்ப வென்றே கிளர்ந்துள்ள - திரையில், காட்டப்படுவதை அரிதாகப் பார்த்ததே யான், **அயல்வழி மணம் பார்த்ததாம்!**

கிறித்தவர், இசுலாமியர் திருமணம் தமிழில் நிகழ்வன எனின். வாழ்த்தியிருக்கிறேன். சமயம் சாதியற்ற திருமணங்களை வரவேற்று நெஞ்சங்கலந்த நேயர் என விருது வழங்குவதை மேற்கொண்டிருக்கிறேன்.

சில எண்ணங்களைப் பதிவாக்கல் தேவையே என்பதால் பதிவாக்கப் பட்டவை இவையாம்!

வாழிய நிலமே! வாழிய நலமே!

இரா. இளங்குமரன்

# பொருளடக்கம்

*அறவாணரும் அறமும் ........................................ 3*

*ஓர் அறிவிக்கை ................................................. 5*

*அறவாணர் ஆய்வில் அறம் ................................ 13*

*பின் இணைப்பு ..............................................121*

# அறவாணர் ஆய்வில் அறம்

தமிழுலகில் தடம் பதித்த நூல் மட்டுமன்று. தமிழ் மண்ணின் தடத்தை உலகளாவிய அளவில் பதியச் செய்த நூலும் **வள்ளுவம்** ஆகும்.

அவ்வள்ளுவமாம் திருக்குறளைக் கற்பனை அவையம் அமைத்துக் கட்டளை யாப்பால் காலம் காலம் பரப்பும் கவினமைந்த காட்சியதாய் அமைக்கப்பட்டதொரு நூற் பெயரும் **வள்ளுவம்** ஆயிற்று! "வள்ளுவம் என்பது, வள்ளுவரால் செய்யப்பட்ட நூல்" என்பதை எவரும் தெளியச் செய்தது அந்நூல். அதனை ஆக்கிய அருமைத் தோன்றல், மூதறிஞர் செம்மல் **வ.சுப. மாணிக்கனார்!.**

இந்நாளில் (2007) வள்ளுவப் பெயரால் ஒருநூல் வெளிப்பட்டு உலா வருகின்றது. இது, முனைவர் **க.ப. அறவாணரால்** ஆக்கப்பட்ட நூல்.

அறவாணர் ஆழிய சிந்தனையர்; அமைந்த சொல்லர்; கைக்குறிப்பு இல்லாமல் அவையேறாப் பொழிவர்; உலகப் பார்வை - மாந்தரியற்பார்வை என்பவற்றை ஊடகமாகக் கொண்டு உரையாற்றலும், நூல்யாத்தலும் உடையவர். அவர்

யாத்த நூல் ஒன்று, வள்ளுவ ஆய்வாகவும், வள்ளுவப் பதிப்பாகவும் இணைந்து வெளிப்பட்டுள்ளது.

தமிழர் வாழ்வின் பகுதிகளை அறுத்து அறுத்து ஆய்ந்து 'கோணல் மாணல்' நிமிர்த்தும் பொழிவும், நூல் யாப்பும் உடையவர் நூல், 'எத்தகைய செம்மையதாய் அமைந்திருக்கக் கூடும்' என எண்ணி, முன்னுரையில் படிக்கும் போதே, தமிழருக்குள்ளதாக அவர் கூறிய **'கோணல் மாணல்' அத்தனைக்கும், "தாமும் தாம் படைத்த நூலுமே" ஒட்டு மொத்தச் சான்று என்பதை நிலைநாட்டி விடுகிறார்.** "சாந்தகத்து உண்டு என்று விரலை வைத்தார், பாம்பகத்துக் கண்டாற் போன்ற" காட்சிக்கு வள்ளுவத்தை ஆக்குகிறார்.

அவருக்கு முன்னரே இத்தகைய கோணல்மாணல் உரையும் பதிப்பும் உடையார் மூவர் வள்ளுவத்தைச் சீர்குலைத்த துண்டு! ஆனால், அவர்கள், "தமிழர் கேட்டு மூலகங்கள் இவை இவை" என அறவாணர் போல் படம் பிடித்து மேடைதோறும் காட்டினவர் அல்லர்.

ஒருவர், வழக்கு வல்லார்! **சட்டப் பார்வையர், சட்டத்திருத்தப் பார்வையராகப் படிவது வழக்கே!**

மற்றொருவர், மேடைக்குத் தகக்கொள்கை மாற்றிக் கொள்ளும், குறிக்கோளிலா வாழ்வும், "மாந்தப் பிறப்பு வேடிக்கைப் பிறப்பு" என்பதை வாடிக்கையாக்கிக் கொண்டுள்ள பட்டிமன்ற - வழக்காடு மன்ற - வாழ்வர்.

இன்னொருவர் 'தமிழ்ச்சந்தி' வேண்டா வழியர்.

ஆனால், தமிழர் மேம்பாடு பற்றியே மேடையில் சுட்டும் ஆய்வர், தமிழர் மேம்பாட்டு நூலுள் மேம்பாட்டு நூலாய் இருக்கும் திருக்குறள் ஆய்வில், 'கோணல் மாணல்' விளையாட்டு விளையாடுவது அழகிதாகப் படவில்லை!

'போனால் போகட்டும்' என்று ஒப்புக்கு வைத்தது போல் ஒரங்கட்டிச் செம்மொழி இருக்கையைத் தமிழுக்குத் தந்துள்ள இப் போதில், அச் செம்மொழிக்கு மூல ஆவணமாக முதற்கண் சுட்டப்படும் நூலை, மனம் போன போக்கில் சிதைத்துச் சிதைவாவ்ணமாகக் காட்டுதல் அறவாணர், பெயர்க்குத் தகும் செயலாகக் கூடக் கொள்ள இயலாததாம்!

**அவர், திருவள்ளுவரையும், அவர் அருமைப் படைப்பாம் திருக்குறளையும் எப்படி மதிப்பிடுகிறார்?**

"திருவள்ளுவர் மக்களிடம் பழகி நடைமுறைச் சிக்கல் களை நேரில் கவனித்துத் தம் நூலுள் தெரிவித்தவராகத் தோன்றவில்லை".

- என்கிறார்.

இதில் அறவாணர் என்ன கூறுகிறார்? அவர்க்குத் திருவள்ளுவர் எப்படித் தோன்றுகிறார்?

1. திருவள்ளுவர் மக்களொடு பழகியவர் அல்லர்.
2. மக்கள்தம் நடைமுறைச் சிக்கல்களைக் கண்டவ ரல்லர்.
3. நேரில் கவனித்துக் கருத்துக் கூறாமல் தாம் கருதியவாறு கூறியவர்.

- என மூன்று குறைகளைக் குறிப்பிடுகிறார்.

"திருவள்ளுவர் ஒருவராக இருக்க முடியாது; ஏனெனில், ஒருவர் இத்தனை துறைகளில் (133 துறைகளில்) ஆழ்ந்த தேர்ச்சியுடையராக இருக்க முடியாது" என்று சொன்னார் உளர். "அவர் அறிவு மேம்பாடு மாந்தர் நிலையினும் மேம்பாடு உடையது; ஆதலால், தெய்வப் புலவர் திருவள்ளுவர் என்பேம்" என்று வழங்கினாரும் இருந்தனர், இருக்கின்றனர். ஆனால், இதுகாறும் திருக்குறளைக் கற்ற எவரும்,

**"திருவள்ளுவர் மக்களொடு பழகியறியாதவர்"** என்றார் அல்லர்.

மக்களொடு பழகும் அடிப்படை நேயம்தானும் இல்லாத ஒருவர், மக்கள் நலங்குறித்தே ஒப்பிலா ஒருநூலை இயற்றினார் என்பதனை இட்டுக் கட்டிய கதையாகக் கூட ஏற்க முடியுமா?

மக்களொடு அளவளாவவும் மாட்டாதவர் தாமா, "மக்களைத் தெய்வ நிலைக்கு ஏற்றுவேம்" எனச் சூள் இட்டுக் கொண்டு நூல் செய்வார்? மக்களொடு பழகி அவர்தம் சீர்கேடுகளை நேரில் கண்டு வீழ்ந்து கிடப்பதை எழுப்பி வீறுமிக்க விழுமிய பிறவியாக ஆக்குவேம் என மதிக்கும் நூலை யாத்திருக்க எண்ணத்தானும் செய்வரா?

**"அளவளாவு இல்லாதான் வாழ்க்கை"**

என்று சுட்டிக் காட்டுகிறாரே! அவரா 'அளவளாவு' இல்லாதவர்? அவ் வாழ்க்கைக்கு அவர் காட்டிய உவமைதான் என்ன?

வேளாண்மை வளம் கருதிக் குளம் அமைக்க முயன் றவர் குளத்துள் நீர் தங்கி நின்று, வேண்டும் போது மடைவாய் வழியே வயலின் கடைவாய் வரை சென்று உயிர் மூலமாம் உணவுக்குரிய நெல்லை - கரும்பை - வாழையை - வளமாகப் பெற யாது செய்தல் வேண்டும். குளத்திற்குக் கரையமைத்தல் கட்டாயம் அல்லவோ?

கோடாகிய கரை இல்லாக் குளம் குளமாகுமா? ஓரிடத்து வயல்பரப்பு இல்லாமல் இருந்தும் ஏரியாக்கி நீர்தேக்கி மற்றோர் ஏரிக்கு நீர்வறந்த காலத்துப் போக விடும் **'ஒட்டேரிக்குத் தானும் கரையும் காலும் கட்டாயம் வேண்டுமே'.** பழகாத வாழ்வு - அளவளாவு இல்லாத வாழ்வு - பாழ்வாழ்வு என உவமை கண்ட பெருமகனாரா, மக்களொடு பழகாதவர்?

*ஒற்று : ஒற்றருடைய பணியை - பாராட்டை - பரிசை - எத்தகைய உள்நுழைந்து நுழைந்து பார்த்த அரிய நோட்டகராக அமைந்திருக்கிறார் வள்ளுவர் என்பது புரியலாமே!'*

'ஒற்று ஒற்று உணராமை ஆள்க' 589

'சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க' 590

'ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்' 588

'வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று' 584

*தம் சுற்றம் எனினும் ஒற்றுக் குரியது என்பது எவ்வளவு பட்டறிவு!*

*"தூய்மைக்கு உறைவாகத் துலங்க வேண்டிய துறவிக் கோலத்தாலும் ஒற்று அறிக" என்பது படிப்பறிவால், நான்கு சுவர்க்குள் இருந்து கொண்டு கண்டு கொள்வதா? துறவுக் கோலத்தைக் கண்டு அறிவிலாக் கூட்டம் மொய்ப் பதையும், போலித் துறவை நம்பி மான இழப்பு - பொருள் இழப்பு அடைவதையும் காணாமல்.*

"அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்"

*(தவமாவது பொய்யாய தவக் கோலம்) என்று கூறியிருக்கப் பொதுமக்களொடு எத்தகு தொடர்பு கொண்டிருக்க வேண்டும்?.*

***சூதை எடுத்துக்கொள்க***

*சூதாடிச் சூதாடிக் கெட்டார் குடும்பங்களை ஒட்டியும் உறவாடியும் உணரா ஒருவரால் 'சூது' ஆட்டத்தை இத்தகைய நுட்பத்தொடு கூற முடியுமா?*

'ஒன்றெய்தி நூறிழக்கும் சூது' - 932

'இழத்தொறூம் காதலிக்கும் சூது' - 940

*நேரில் காணாதார் கற்பனையால் இக் காட்சிகளைக் காட்ட இயலுமா? கேட்டு எழுதுவார் இப்படிக் கெட்டொழி வாரைப் படம் பிடிக்க முடியுமா?*

***கள்ளுண்ணாமையில்,*** *கள்ளுண்பார் திருந்துவதற்காம் கடைசிக் கட்டம் ஒன்று இருத்தலை வள்ளுவர் காட்டுதல் சுவர்களுக்குள் இருந்து ஆய்பவர் காட்டும் காட்சியா?*

"கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு" 930

*- என்பது என்ன?*

*"குடிகாரன் குடித்துள்ளபோது குடியின் இழிமையை அறியான். குடித்த ஒருவன் நடந்துவரும் நடையை அவன் இடுப்பில் இழியும் உடையை, அவன் தெருவில் வீழ்ந்து கிடக்கும் கிடையை நேரில் காணச் செய்க! இவற்றைக் கண்டும் திருந்தாதவனை என்ன சொல்வது! அவனுக்கு முடிவு அதுவே தான்" என்று இரங்குகிறாரே!*

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்".

*என்று வெறுத்துரைக்க நூலறிவு மட்டும் போதுமா?* ***கயமையிலே*** *வரும் ஒரு செய்தி ஒரு நூறு பேர்களைக் கண்டு கூறிய செய்தி அல்லவா!*

***"அறைபறை அன்னர் கயவர்"***

***தமுக்கடிக்கிறான்*** *என்பது மக்கள் வழக்கு அல்லவா!*

*"கழிசடை" என்பது இந்நாளில் வழங்கும் சொல் தானே. அச் சொல்லின் பொருள் புரியாமல் வழிவழியே சொல்கிறோம்!*

"தலையின் இழிந்த மயிர் அனையர்" 964

- என்னும் உவமைக் காட்சி, அந்நாள் மக்கள் வாய்மொழிச் சாட்சியாக இருக்கக் கூடாதோ? அதுவே வள்ளுவர் வாய்மொழி ஆகியிருக்கக் கூடாதா?

"நான் சொன்னது சுட்டுவிட்டதாம்! வடுப்பட்டுப் போனாராம்; போகிறார்" என்பது அந்நாள் தெருக்குரலாக இருந்திருக்க முடியாதா? அது திருக்குறள் ஆகியிருக்காதா?

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு!" 129

என்பது நம் எண்ணத்தில் எழுமே!

"செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து" 694

என்பது கற்பனையா? கற்றோர் அவைக்கண்ணும் நாம் காணும் காட்சிகள் அல்லவா!

'நட்பு' 'வினை' என்பவை எத்தனை அதிகாரங் களைக் கொண்டவை? ஏன்?

நட்பு, நட்பு ஆராய்தல், பழைமை, தீநட்பு, கூடா நட்பு, பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை;

ஆள்வினையுடைமை, குடிசெயல்வகை, தெரிந்து செயல்வகை, தெரிந்து வினையாடல், பொருள் செயல் வகை, வினைசெயல்வகை, வினைத்திட்பம், வினைத் தூய்மை, - இனி இவற்றின் சார்பு அதிகாரங்கள் இல்லையா? வாழ்வியலில் உண்டாகும் சிக்கல்கள் எங்கெங்கு மண்டிக் கிடக்கின்றனவோ, அங்கங்குத் தீர்வு காட்டிய வகை ஈதாம், **இவை மக்களோடு மக்களாகி விட்டார்க்கன்றி மற்றை யோர்க்கு வாய்த்த லாகுமோ?**

"நன்றாற்ற லுள்ளும் தவறுண்(டு) அவரவர்
பண்பறிந் தாற்றாக்கடை" 469

*என்பது எத்தனை பேர் வாழ்வியலைக் கண்டு படம் பிடித்துக் காட்டப்பட்டதோ?*

"கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்" 796

*இக்குறள், எத்தனை எத்தனை போலி உறவினரைக் கண்ட புகைச்சலில் விளைந்த மணியாயிற்றோ!*

"கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை" 867

*மறைமுக ஆக்கம் காட்டி எத்தனைபேர் வாழ்வை மாணப் பெரியதாக்கவெளிப்பட்டதோ?*

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு" 820

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" 819

*-இக்குறள் மணிகளுக்கு, எத்தனை மாந்தப் போலிகள் மின்னலிட்டு முன்னேநின்று நடித்திருப்பரோ?*

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று" 678

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" 274

*என்பவற்றுக்கு எத்தனை வேட்டையர் தோற்றம் முன்னர் நின்றிருக்குமோ?*

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" 300

*என்றவர்,*

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" 323

- என்று மாற்றிக் கூற எத்தனைபேர் வாழ்வு வழி காட்டியாக நின்றதோ?

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" 291

என இலக்கணம் காணவும்,

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" 292

*- என மாற்று நெறி காட்டி மாந்தப் பொதுநலம் காக்கவும் முன்னின்ற காட்சிகள் எத்தனையோ?*

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்" 621

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி" 1030

*- இவை எளிய உவமைகளா? உவமையென அறியாமல் உரை காண்பார் வள்ளுவர் விரிபார்வை அறிவரோ?*

*கால் துள்ளி வரும் காளையை அடக்கித் திமிலைப் பற்றி அதன்மேல் ஏறி ஊரும், ஏறு தழுவுவார் வீறு அல்லவோ முன்னை நகுதல் காட்சி!*

*சுழற்றியடிக்கும் சூறைக் காற்றால் ஆலமரத்தின் அடி வீழ்ந்து படுங்காலும், அடுத்தடுத்துள்ள வீழ்துகள் காப்பது போலப் பெற்றோர் இன்றியும் பெரும்பாரம் தாங்கிக் குடிமை காக்கும் உரவோர் திறம் உரைத்ததல்லவோ **இடுக்கண்கால்** என்பது! எத்தனை குடும்பங்களைக் கண்டு காட்டிய காட்சி களோ இவை!*

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை" 1027

- என்பது எத்தகைய அகக்காட்சி - புறக்காட்சிகளை உட்கொண்டதோ?

உட்பகையை மட்பகைக்கு ஒப்பாகக் காட்டும் மாணறிவு, நான்கு சுவர்களுக்குள் இருந்து நூலளவில் நிற்பார் நுண்மையில் எட்டுவதோ? சுவர்களுக்குள் இருந்து மட்டுமே ஆய்வார்க்கு இக்குறளுக்கு உரைதானும் காண முடியுமோ? (883)

* * * * *

திருவள்ளுவர் காலத்திற்கு முற்பட வாழ்ந்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திலேயே திணை நிலத் தெய்வம் உருவாகி விட்டது. கொற்றவை வழிபாடு உண்டாகிவிட்டது. தேவபாணி, கடவுள்வாழ்த்து என்பவை உண்டாகி விட்டன. 'இலங்க' வழிபாடும் கிளர்ந்து. சங்கப் பாடல்களில் நீலகண்டன், தாமரைக் கண்ணான் முதலோர் வழக்குற்றனர்.

வள்ளுவர் காலத்திலேயே, வேத நெறி வேந்தர்களால் பரப்பப்பட்டது; வேள்வி பெருகிற்று. அருக சமயமும், புத்த சமயமும் தமிழகம் புகுந்தன. இம் முச் சமயங்களுக் குள்ளும் மோதல்கள் உண்டாயின. மக்கள் மதப் பெயரால் -சடங்கு முறையில் - பிளவு பட்டனர்! கடவுள் வழிபாட்டால் ஏற்பட வேண்டிய நலம் நேர்மாறாகக் குலைந்தது.

நாட்டு நிலையால் வீட்டு நிலையும் அமைதி இழந்தது; அறம் குலைந்தது. கண்ணேரில் கண்ட இக்காட்சியே, ஓர் உருவோ, ஒரு பேரோ இல்லாத பண்பாட்டியல் இறைமையைப் படைத்துக் காட்ட வள்ளுவரைத் தூண்டியது.

நிற்க: அறத்திலும் பொருளிலும் உள்ளவற்றில் 127 குறள்கள் மக்கள் தம்மொடு மக்களாகப் பழகாதாரால் எழுத இயலா அருமை உடையவையாம்.

காமத்துப்பால் நூன்முறை வழியது. அதிகாரப் பகுப்பும் கூற்றுவகையும் தொல்காப்பியக் கொடைகள். எனினும், 1099, 1110, 1158, 1192, 1260, 1274, 1285, 1299, 1306, 1326 ஆகிய குறள்கள் அகவாழ்வை அகவாழ்வாகக் கண்டு, உயிரோவியம் தீட்டிக் காட்ட வல்லார்க்கே வாய்ப்பவை, விரிவு கருதி அமைவோம்.

* * * * *

முன்னே குறித்த தோற்றத்தின் சார்பாக மற்றொரு தோற்றத்தையும் முனைவர் அறவாணர் காட்டுகிறார். "ஊன்றிக் கவனித்து உரிய தீர்வுகளைத் தொலைவில் இருந்து சொல்லும் ஒரு சிறந்த மேசைச் சிந்தனையாள ராகவே திருவள்ளுவர் தோன்றுகிறார்" என்பது. இதில்,

1. திருவள்ளுவர் ஊன்றிக் கவனிக்கிறார்
2. உரிய தீர்வு (உடனாகிச் சொல்லாமல்) தொலைவில் இருந்து சொல்கிறார்.
3. ஒரு சிறந்த மேசைச் சிந்தனையாளராகவே தோன்று கிறார்.

எனப் பகுத்துக்காண வழி கூறுகிறார்.

திருவள்ளுவர் ஊன்றிக் கவனிக்கிறார் என்பது செவ்விதே. உரிய தீர்வு சொல்கிறார்; ஆனால், உடனாகிச் சொல்லாமல் எங்கிருந்தோ எவருக்கோ கூறுவதுபோல் கூறுகிறார் என்கிறார்.

காப்பியப் படைப்பாளரே எங்கிருந்தோ எவருக்கோ கூறுவது போல் கூறுவர். அவர் தாமும், நெஞ்சில்பட நேரில்

இருந்து காட்டும் காட்சிகள் பலப்பல உள! ஆனால், வள்ளுவரோ வாழ்வார்க்கு அறங்கூறலை அறப்பணியாக அள்ளிப் போட்டுக் கொண்டு வழிகாட்டியாக அல்லர் வழிகூட்டியாக இருந்து காட்டிக் காட்டிச் கற்பிப்பவர். அவர் ஏன் தொலைவில் இருந்து உரைக்க வேண்டும். கையைத் தொட்டுத் தொட்டு, நெஞ்சில் படப்பட, நான் சொல்வது எவருக்கோ இல்லை. என் அறநூலுக்குத் தலைவன் நீயே; ஆதலால், அவர்க்கு இவர்க்கு எனத் தள்ளித் தப்பித்துக் கொள்ளாதே.' உன்னையே முன்வைத்துச் சொல்வதால் சற்றே உவப்பற்றதாகக் கூட இருக்கலாம். கைப்பாகவும் தோன்றலாம்; மூன்றாமவன் செய்தியென எண்ணி இகழ இயலாது. 'உன்னையே நீ நோக்கி உண்மை யுணர்ந்து உயர்வுற வேண்டும்' என்று சொல்பவர், எப்படித் தொலைவில் இருந்து சொல்ல முடியும்?

நம் காதோடு காதாகச் சொல்லியா நிறுத்துகிறார். காட்டுகின்ற காட்சிகள்தாம் எத்தனை? கன்னத்தில் அறையவும் செய்கிறாரே! நேயப்பெருக்கால் உரைத்தாலும் நெஞ்சில் அகலாதிருக்க ஆசான் நிலையில் ஆணையிட்டு உரைக் கின்றாரே! அயர்ந்து தளர்ந்து வீழ்தலைக் கண்டு கனிவு மிக்கோராய் எத்தனை இடங்களில் கைதூக்கிவிட்டு "பற பற மேலே மேலே" என எட்டா உயரத்துக்கு ஏற்றுகிறாரே! நீ மாந்த நிலையில் தாழாதே! தெய்வ நிலையில் ஏறப் பிறந்தவன் நீ; உலகியற்கையாம் ஊழையும் வெல்லப் பிறந்தவன் நீ! மடியைத் தொலை! குடியை உயர்த்து! உலகமாக விளங்கு! என்பவற்றைச் சொட்டச் சொட்ட உரைப்பவர், எப்படி எட்டாத் தொலைவில் இருந்து உரைப்பார்.

அவர் தமிழ் அறவர்; இல்லற வாழ்வின் நிறைவாம் துறவு நெறியைத் தம் தகவார்ந்த நூலால் காட்டியவர். பிறர் துயர் துடைக்கப் பிறந்தவர்; தமிழர் அயன்மைப்பட்டுத் தம் பிறவியைப் பாழாக்கும் போலிச்சடங்கு, பொருந்தி வாழ

விடாது காட்டுக்கு ஓட்டும் கடுந்துறவு, குகை வாழ்வு என்பவற்றை ஏற்காதவர்! வீட்டு வாழ்வில் இருந்து உலக வாழ்வாகத் திகழும் உயர்நெறியை உலகுக்குக் காட்டியவர். பிறப்பொப்பு, சிறப்பு ஒப்பு, தொழில் ஒப்பு, செல்வ ஒப்பு, கல்வி ஒப்பு, கல்விப்பயன் ஒப்பு, கொடை ஒப்பு, கோன்மை ஒப்பு, குடி ஒப்பு எனப் பன்முக ஒப்புகளும் மாந்தர் அனைவருக்கும் விலக்கில்லாமல் உண்டு என்றவர்.

ஆளும் வேந்தனே என்றாலும், அவன் தெய்வப் பிறவியன் அல்லன்! அந்தணன் என்பான் ஒரு பிரிவன் அல்லன்; முன்னவனை அடையாளம் காட்டுவது, அவன் முறைமை! பின்னவனை அடையாளம் காட்டுவது, அவன் அருள் நெறியாம் அந்தண்மை (அகம் தண்மை, அந்தண்மை)! வாணிகர் அறவோர்; சமன் கோல் சான்றர்; தமபோல் பிறவும் எண்ணிச் செய்வார்; உழவர், இரவார், இரப்பார்க்கு ஒன்று ஈவர்; கரவிலா வாழ்வர்; வழிவழியாக உலகுக்கென வாழும் மேன்மையர் என்றெல்லாம் அவரவர் தாமாகி உரைக்கும் தகைமையரா தொலைவில் நின்று கூறுபவர்.

திருவள்ளுவர் தொல்காப்பியர் வழியில் நூல்யாத்தவர். சங்கச் சான்றோர்களால் மேற்கோள் காட்டப்பட்ட மேன்மையர். ஆதலால், தொல்காப்பியருக்குப் பின்னவர்; சங்கத்தவர்க்கு முன்னவர்! அவரைக் கி.பி. இருபதாம், இருபத்தொன்றாம் நூற்றாண்டில் செந்தணப்பு அறையில் (ஏ.சி) இருந்துமேசை மேல் நூல்களைப் பரப்பி ஆய்வு செய்து கருத்து வெளியிடுபவர் போலாகக் கூறிய சிறப்பு உள்ளதே! அது, வள்ளுவர் தம் வழிமுறை மாந்தரால்கேட்கப்பட்ட தனிப்பெருந்தாலாட்டு! ஏனெனில், அன்றே அத்துணை நாகரிக ஆய்வராகக் காட்டப்பட்டுள்ளார் அல்லரோ!

* * * * *

இனிமேலே செல்லலாம் :

"திருவள்ளுவர் கூறியுள்ள அறிவுரைகள் மிகச் சிறந்த குறிக்கோள்களே எனினும், அவற்றைப் **பின்பற்றத் தகும் குறிக்கோள்கள், பின்பற்ற இயலாக் குறிக்கோள்கள்** என்று பகுத்தறிந்து பார்க்க வேண்டியிருக்கிறது" என்கிறார்.

திருவள்ளுவர் கூறியவை மிகச் சிறந்த குறிக்கோள்களாக இருந்தாலும் அவை பின்பற்றுவதற்கு முழுமையானவையாக இல்லை. சிலவற்றைப் பின்பற்ற இயலும்! சிலவற்றைப் பின்பற்ற இயலாது என்கிறார்.

**பின்பற்றுவார் தகுதியை அளவுகோலாகக் கொண்டே நூல் செய்ய வேண்டும்** என்றால், அஃது அறநூலாக இராது. ஏன் சட்ட நூலாகக் கூட இராது. ஏனெனில், சட்ட நூலிலும் மேம்பட்டதும், சட்டம் இயற்ற மூலமாக இருந்ததும் அறநூல்களும் அறவோர் எண்ணமுமேயாம்!

பொய் கூறாமையை நூற்றுக்கு நூறுபேரும் கடைப் பிடியாகக் கொள்ள முடியவில்லை. களவை முற்றாகக் கொள்ளாமல் வாழ முடியவில்லை! ஆசையை அறவே அகற்றி வாழ முடியவில்லை! ஆதலால், இவ்வதிகாரங்கள் பின்பற்ற இயலாதவை! இவற்றை விலக்கிவிட வேண்டும் என்றால், எந்தவொரு சமயநூலாவது முற்றாகக் கொள்ளத் தக்கதாக இருக்குமா?

பின்பற்ற இயலாத ஒன்று என்பது **பின்பற்றுவார் நிலையைப் பொறுத்தது** அல்லவோ! எல்லோராலும் பின்பற்ற முடியாது என்பதால் **'இன்னா செய்யாமை'** என்னும் அதிகாரம் தேவையில்லையா?

என்ன முயன்றும் என்னால் **சினத்தை அடக்க முடியாது** என்பதால் திருக்குறளில் **'வெகுளாமை'** அதிகாரம் வேண்டா என ஒருவர் முடிவெடுக்கலாமா?

"வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை" என்றது 'அவாவறுத்த' பெருநிலையர்க்கு அன்றிப் பிறர் அனைவருக்குமா?

விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்க வேண்டியது, **அந்தணர் அறிவர் உழவர்** ஆய அனைவர் தமக்குமா?

எல்லாரும் எல்லாவற்றையும் பின்பற்றுமாறு ஒரோ **ஒரு நூல் உலகில் உண்டா! உண்டாகுமா?**

சந்தைக்குப் போனால், துணிக்கடைக்குப் போனால், மருந்துக் கடைக்குப் போனால் எல்லாரும் எல்லாமுமா அள்ளிக் கொண்டு வருவர்?

இப்படியெல்லாம் சிக்கல் எழும்பும் என்பதால், இவை பின்பற்ற முடியாதவை என்பதைச் சான்றொடும் தம் ஒப்புகையை வெளிப்படுத்துகிறார் அறிஞர் அறவாணர். அவை எவை?

பின்பற்றத்தகும் குறிக்கோள்கள் பின்பற்ற இயலாக் குறிக்கோள்கள் என்று பகுத்தறிந்து பார்க்க **வீரமா முனிவரை** முன்னெடுத்துக் காட்டுகிறார்.

வீரமாமுனிவர் திருக்குறளை இலத்தீனில் மொழி பெயர்த்தவர். அவர்தம் மொழி பெயர்ப்பு வழியே நன்கு அறிய முடிகிறது (இவ்வாறு பகுத்துக் காண வேண்டிய முறை) என்கிறார்.

1. சான்றாக புலால்மறுத்தல் கொல்லாமை முதலான அதிகாரக் கருத்துகள் **அனைத்துலக அளவிலும் பின்பற்ற இயலா இலக்குகளாக இருப்பதைக் காட்டலாம்.**

2. ஊழ் அதிகாரக் கருத்து கிறித்தவ நெறிக்கும் இசுலாமிய நெறிக்கும் ஒத்துப் போகாத கருத்தாகும்.

3. பொதுவுடைமைக் கருத்துக்கும் ஒத்துப் போகாதது என்பதனாலேயே உருசிய மொழி பெயர்ப்பில் அவ்வதிகாரம் சேர்க்கப் பெறவில்லை.

4. திருமணமே செய்யாது சமயத் தொண்டும் சமுதாயத் தொண்டும் ஆற்றிய வீரமாமுனிவர், காமத்துப் பாலை இலத்தீனில் மொழி பெயர்க்க வில்லை என்கிறார்.

இக்குறிப்புகளால் புலால் மறுத்தல், கொல்லாமை, ஊழ் என்னும் அதிகாரங்களும், காமத்துப்பால் என்னும் ஒரு பாலும் அனைத்துலக அளவிலும் கொண்டு செல்ல முடியாதவை எனச் சுட்டிக் காட்டுகிறார்.

ஒரு பெரு விருந்து நிகழ்கிறது; அதில் நாம் பங்கு கொள்கிறோம்; பல்வகைப் பண்டங்கள் தொடுகறிகள் விடுகறிகள் வடை அப்பளம் கண்ணமுது (பாயசம்) எனப் பரிமாறப்படுகின்றன.

விருந்தில் அமர்வதற்கு முன்னரே உணவு வகைகள் படைக்கப்பட்டுவிட்டன. என்ன செய்வது? அவற்றில் சில ஏற்பவை இல்லை; சில நலனுக்கு ஆகாதவை என நமக்குக் கொண்டவை; சில ஒவ்வாதவை! என்ன செய்கிறோம்?

நமக்கு வேண்டுவ கொண்டு வேண்டாதவற்றை ஒதுக்குகிறோம். நாம் அமர்ந்தபின் படைக்கப்படும் உணவு வகைகளாக இருந்தால், விழிப்பாக இருப்பவர் 'இவற்றை வைக்க வேண்டா' என்றே தடுத்து விடலாம்.

திருவள்ளுவர் வாழ்வியல் விருந்து படைத்துள்ளார். தனித்தனி நாடி பிடித்துப் பார்க்க வல்லவர் அவர். அவ்வளவில் நில்லாமல் பொதுவுண்ணும் விருந்து என்பதையும் மறவாதவர்.

ஆதலால், இனிப்பு நோயர் இலையில் இனிப்புப் பண்டம் இருந்தால், அவர் நிலை கருதி அவற்றை ஒதுக்குவார். அவர் ஒதுக்கியதை உரிமை அன்பர் ஒருவர் அருகில் இருந்தால் அவர் இலையில் கூட நகர்த்தி வைத்து விடுவார்!

ஒருவர்க்கு ஊறுகாய் ஒவ்வாமை. அவர் இலையில் ஊறுகாய் வைத்தால் உடனே அறைந்து விடுவார்! ஊறுகாய் மேல் ஏற்பட்ட ஒவ்வாமை ஊறுகாய் வைத்தவன் மேல் ஏறி அறைய வைக்கின்றது!

பாவம் படைப்பவன்! அவனும் கை நீட்டினால்! சினம் எண்ணிப் பார்க்கவும் விடாத 'உயிர்கொல்லி' யாயிற்றே!

மருத்துவர் சொல்கிறார்; "நீ குடியை விடாவிட்டால் உன் நாளை எண்ண வேண்டியது தான்"; "நீ புலால் உண்ணக் கூடாது; வாழ விரும்பினால், புலால் உண்பதை ஒழி" என்கிறார்.

வாழ விரும்புவார் - குடும்பத்தை நினைப்பார் - இவற்றை விட்டொழிக்கத் தானே செய்வர்?

உடல் நல மருத்துவர் குடியை விடு என்று கூறுவது சரி; ஒப்பக் கூடியது.

புலாலை விடு என்பது சரி; ஒப்ப வேண்டுவது! இவற்றை மாந்த நேய மருத்துவராம் வள்ளுவர் - நீடுவாழ நெறி காட்டும் வள்ளுவர் - சொன்னால் உலகம் ஒப்பாப் பார்வை ஆகிவிடுமா?

புலால் உண்ணாமை என்று கூறாமல் புலால் மறுத்தல் என அதிகாரப் பெயர் சூட்டியதைக் கருதலாமே!

வீரமா மனிவர் மணவாத் துறவர்; அவர் தொண்டுக்கு உள்ள தலையாய நெறி மணவாமை! ஆதலால், அவர் அதனை விலக்குதல் அவர்தம் நிலைப்பாடு! அவர்தம் சமய

நெறிப்பாடு! ஆனால், **அவர்தம்** பெற்றோருக்குக் **காமத்துப்பால் என்பது உதவாக்கடைப் பொருளா? அப்படி இருந்தால் வீரமாமுனிவர் பிறந்து துறவுமடம் சார்ந்து துறவராகி உலக உறவராகித் திழ்ந்திருப்பாரா?**

போப்பு ஐயர், "இன்பத்துப் பாலை ஆம்! "காமத்துப் பாலை, இவ்வளவு நணிநாகரிகமாகக் கூற எவர் வல்லார்" எனப்பாராட்ட முடியுமா?

"இருநோக்கு இவள்உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கு ஒன்றுஅந்நோய் மருந்து" 1091

என்று கூறும் **காமத்துப்பால்** பாடல் ஒல்லியல் (ஓமியோ) மருத்துவ இலக்கணம் கூறுவது. "எது நோயை ஆக்குமோ அதுவே அதற்கு மருந்தும் ஆகும்" என்றது எத்தகு அருமை என்று பாராட்டுவாரா, ஒரு மருத்துவத்தோன்றல்; கிறித்தவ சமயத்தவர்.

வீரமாமுனிவர் என்ன, கோவைப் பெரியவர் **தி.சு. அவிநாசி லிங்கனார்,** பள்ளிகளில் எல்லாம், திருக்குறள் தென்றல் நடையிடச் செய்தவர். திருக்குறள் ஆய்வர்; தோய்வர்; பதிப்பர்; ஆயினும் அவர் **காமத்துப் பாலை** ஓதுவதில்லை.

திருக்குறள் நாட்குறிப்பு கழகமே வெளியிட்டது. அறத்துப்பால் பொருட்பால் இடம் பெற்ற ஆண்டு நாட் குறிப்பு மட்டுமே வாங்கிப் பயன்படுத்துவார். காமத்துப் பால் வெளிவரும் ஆண்டு நாட்குறிப்பு அவரால் ஒதுக்கப் பட்டு மற்றொன்று பயன்படுத்தப்படும்.

என் மதிப்புக்குரிய நற்றுறவர் ஒருவர்; அவர் திருக் குறள் அறம் பொருள் முற்றாக ஓதுபவர்; திருவாசகம் திரு வருட்பா என்பவை போலத் திருக்குறளும் கையோடும் பையோடும் மெய்யோடும் வைத்திருப்பவர். ஆனால், **காமத்துப்பாலைப் படித்தது இல்லை!**

இப்படி மணவாத் துறவரை எண்ணி, மணச் செய்தியையே கூறக்கூடாதா? மணந்தவரையே நோக்கித் தவம், நிலையாமை, மெய்யுணர்வு, அவாவறுத்தல் ஆகியவற்றைக் கூறியிருக்கக் கூடாதா?

இசுலாமிய நெறி, கிறித்தவ நெறி, பொதுவுடைமைக் கொள்கை ஆகியவற்றின் வாழ்வர்க்கு **'ஊழ்'** ஒத்துப் போகாததாம்! ஆம், அவர்களுக்குத் தலைவிதி, வினைப் பயன், முன்வினை, பின்வினை, இருப்பு வினை ஒப்பாதன என்பதால் என்ன? அவர்கள் நெறிக்கு ஏற்றவை எவையோ அவையே அவர்களால் மதிக்கப்படும்; ஏற்கப்படும்! இயல்பு தானே அது!

இங்கே சுட்டப்படும் **'ஊழ்'** என்பது தலைவிதியா? வள்ளுவம் சொல்கிறதா தலைவிதி என்று? உரையாசிரியர் **மயக்கத்தின்** வெளிப்பாடாக உலாவவிட்டது ஊழ் வினை (தலைவிதி) என்றால், அதனை ஆய்வுவல்லார் வள்ளுவர் தலையில் சுற்றிச் சுற்றிக் கட்டி, ஆட்டங்காட்டுவதா ஆய்வு?

பழைய உரையாசிரியர்களின் மயக்கம், புத்துரை யாளர்களையும் ஆய்வாளர்களையும் மீமயக்காய் மயக்கு தலே ஊழைத் தலைவிதிப் பொருளில் ஆக்கியது.

ஊழ் என்னும் சொல் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, திருக்குறள் ஆகிய இருபது நூல் களிலும் 96 இடங்களில் வருகின்றது.' **'ஊழ்வினை'** என்னும் பிணைப்பொடு அது வரவே இல்லை.

ஊழ்க்கும், ஊழ்ப்ப, ஊழ்ஊழ், ஊழி என்பன போன்ற வடிவில் அன்றி, **ஊழ்வினை வடிவில்** வரவே இல்லை! முதல் வரவாகியது இளங்கோவடிகளார் வழியாக 'ஊழ்

வினை' என்ற அவர்தம் சமண சமயக் கொள்கைப் பால் படுத்தப்பட்டது. **ஊழ் என்பதன் பொருள் தலைவிதி, வினைப்பயன் (கர்மா) இல்லை** என்றால், என்ன பொருள்?

ஊழின் பொருளை வள்ளுவரே கூறுகிறார். பிறகு, எவர் மாறிக் கூறினால் என்ன, எப்படி மாற்றிக் கூறினால் என்ன? **வள்ளுவர் உரையே வாய்மை உரையாம்!**

ஊழ் என்பது அறத்துப்பால் துறவறவியல் இறுதி அதிகாரம். அதனை ஓரியலாகக் கொண்டனர் உரையாளர்.

அறத்துப்பால் நிறைவு - பொருட்பால் தொடக்கம் - இரண்டன் இடையே '**அரிமா நோக்கு**' என்னும் அமைப்பு நெறியில் அமைந்த அதிகாரம் ஊழ்!

ஆசை என்பதை அறவே அகற்றி, "வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை' என்பது கண்டதே அவா அறுத்தல். அவா அறுத்தவர் அசைவு அற்றார்; நிலைபேறு பெற்றார்; நிலையில் திரியா தடங்கிய மலையினும் மாணப் பெரியர்; அவர் அடைந்த நிலை **பேராப் பெருநிலை;** இதுவே அவா அறுத்தல் இறுதிப் பாடல் பொருள்.

அடுத்து வருவது ஊழ். அதன் பொருளைத் தொடக்கம் செய்வார் போல,

> "ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
> **பேரா இயற்கை** தரும்" 380

என்றார்.

ஊழ் அதிகாரத்தில், "**இருவேறு உலகத்து இயற்கை**" என்கிறார். இருவேறு இயற்கை என்பதை, ஆகூழ், போகூழ், இழவூழ், ஆகலூழ் எனச் சுட்டுகிறார். முன்னரே இவ்வூழ் களுக்கு விளக்கம் தருவார் போல, வான்சிறப்பில் கூறினார்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்பதில், **கெடுப்பது** (போகூழ்) **எடுப்பது** (ஆகூழ்) என்றார். இவை **இருவேறு உலகத்து இயற்கை.**

"இல்லறத்தர் துறவர்க்கு மட்டும் ஊழறிவு - உலகத்து இயற்கையாம் அறிவு - இருந்தால் போதாது. நாடாள் பவர்க்கும் கட்டாயம் ஊழறிவு இருத்தல் வேண்டும்" என்பாராய்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் **உலகத்து
இயற்கை** அறிந்து செயல்" 637

என்று அமைச்சு அதிகாரத்தில் கூறினார்.

ஐம்பூதத்து (இயற்கை) மயக்கத்தால் (கலப்பால்) அமைந்தது உலகம். அவ்வியற்கை உலகியல் அறிந்து வாழ்தலும் கடமைபுரிதலும் வேண்டும் என்னும் அடிப் படையில் ஊழ் சொல்லப்படுகின்றது.

அரும்பு, முகை, மொக்கு, மலர், அலர் என ஏற்படும் **பருவமாற்றம் ஊழ்.**

துளிர் தளிர் இலை பழுப்பு சருகு இவை இலையின் **பருவமாற்ற இயற்கை.**

கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் வேனில் இவை **கால மாற்ற இயற்கை.**

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை இவை **இடமாற்ற இயற்கை.**

நீர், பள்ளம் நோக்கி ஓடுதல்
தீ, மேனோக்கி எழுதல்
காற்று, சுழல்தல்

மண், திண்ணிதாதல்
வெளி, காற்று மிலாப் பாழ்நிலை
இவை பூதத்து ஊழியல்.

திருவள்ளுவர் '**இணர் ஊழ்த்தல்**' என்கிறார்.

*பூவின் முகை விரிதல் இணர் ஊழ்த்தல். ஊழி பெயரினும் என்கிறார். இயற்கை முறையால் அமைந்த காலம் அது.*

'ஊழை வெல்லலாம்' என்கின்றார். **வெல்கிறோம்; வென்று கொண்டே இருக்கிறோம்.**

*காலில் வெப்பம் சுடாமல் இருக்க, மிதியடி அணிதல் ஊழை வெல்லுதல்.*

*மழை, வெயில் தலையை வாட்டாமல் இருக்கக், குடை பிடித்தல் ஊழை வெல்லுதல்.*

*ஓடும் நீரை நிறுத்திச் சிறையிடல் - அணை கட்டல் - மேல்நிலைத் தொட்டிக்கு ஏற்றுதல் ஊழை வெல்லுதல்.*

*கண்ணின் ஒளி குன்றுதலை அகற்றக் கண்ணாடி அணிதல்; செவியில் ஒலி குன்றுதலை அகற்றப் பொறியைக் காதில் மாட்டல்; பனிக் கடுமையை அகற்ற வெப்புடை அணிதல்; கோடைக் கொடுமை நீக்கச் செந்தணப்பு ஏற்படுத்தல் - எல்லாம் எல்லாம் ஊழை வெல்லல்!*

*வெயில் மழை இவற்றின் காப்பாக வைத்த கூரையைக் காற்றுத் தூக்கி எறிதல், ஊழ் வெல்லுதல். குடையைப் பிடிக்கக் குடையோடு ஆளையே தூக்குதல், ஊழ் வெல்லுதல். நீத்து அடித்து வெல்லப் போவான், சுழலில் மாட்டியும், உள்வாங்குமணலுள் புகுந்தும் அல்லல் படல், ஊழ் வெல்லல்! மேலே தொட்டிக்கு ஏற்றிய நீரும் ஒரு சிறு*

சிதைவால் உடைத்துக் கொண்டு போய் விடல், ஊழ் வெல்லல்! ஆக்க மூட்டிய அடுப்புத் தீ, ஊரையே அழித்தல், ஊழின் வெற்றி.

பழங்காலக் கடல்கோள், அண்மைக் கால ஆழிப் பேரலை, சூறைக்காற்று, பனிப்பொழிவு, எரிமலை கக்கல், நில்நடுக்கம் என்பவை என்ன? ஊழின் வெற்றிகள்.

ஊழ் வெல்லுதலும் உண்மை!
ஊழை வெல்லுதலும் உண்மை!
ஊழில் ஆக்கமும் உண்டு; அழிவும் உண்டு!
ஊழ் ஒருவர் பொருள் - செயல் - அளவில்
பட்டது அன்று. எவர்க்கும் எதற்கும் பொதுமையானது.
இருவகை ஊழையும் அறிந்து வாழ்தல் ஆறறிவுப்
பிறவியின் கடன் என்பதே வள்ளுவம் கண்டு காட்டிய ஊழ்'
ஊழ்வினையைத் தலைவிதி ஆக்கியமை, உரைகாரர்
மயக்கத்தின் விளைவு. பின்னூற் செய்திகொண்டு
முன்னூலுக்கு உரைகண்ட முறைகேடு அது.
ஆய்வு நோக்கர், ஆய்நெறி நோக்கலும் வேண்டுமே!

'வினை' வள்ளுவர்க்கு இல்லையா? வள்ளுவர் கூறும் வினை செயல், தொழில் என்பனவே.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" 319

என்னும் குறளில் வரும், இன்னா - இனிமையில்லாத - செயல், அடுத்த தலைமுறைக்கா? அடுத்த நாளுக்குத் தானும் கொண்டு போகப்பட்டதா?

வள்ளுவர் உள்ளம் உரை ஆகியவை உணராமல் உரைகாரர் ஊழ் என்பதற்குக் கூறிய தலைவிதி (கர்மா)ப் பொருளை முன்வைத்து ஆய்ந்தது "முதற் கோணல் முற்றும் கோணல்" ஆக்கிற்றாம்! வினை என்னும் சொல்லோடு வரும் அதிகாரப்

பெயர்களை - அவற்றில் அமைந்த குறள்களைக் கண்டால் உண்மை தானே விளங்குமே!

தொல்காப்பிய வினை இயல் பொருண்மை என்ன! தன்வினை, பிறவினை, ஏவல்வினை, செய்வினை, செயப் பாட்டுவினை, குறிப்பு வினை, தெரிநிலை வினை என்பன வெல்லாம் தலைவினையாம் 'கர்மா' வழிப்பட்டவை இல்லை என்பது எத்தகு மெய்ம்மையோ, அத்தகு மெய்ம் மையது வள்ளுவர் கண்ட 'வினை' என்க! தொழில், செயல் என்னும் பொருளில் வருவனவே அவை என்க.

* * * * *

இனித் துறவு என்பது ஒரு நிலைப்பாடு. இல்லறத்து நின்று செய்வன செய்து துறவு கொள்ளல் தமிழர் மரபு. எனினும், 'மணவாத் துறவர் இலர்' என்னலாமா?

மணவாழ்வு எப்படி அவரவர் விழைவு வழிப் பட்டதோ, அப்படி மணவாத் துறவும் அவரவர் விழைவு வழிப்பட்டதே. தமிழகத்து அறிவராம் 'சித்தர்கள்' பெரி தும் மணவாத் துறவராகவே வாழ்ந்தனர். மணவாத் துறவர் பண்டே இருந்தனர் என்பதாலும், அவர் தமக்கு வாழ்க்கைத் துணையோ நிலைபெற்ற இல்லத்து வாழ்வோ இல்லாமையாலுமே தான், இல்லறப் பொறுப்பேற்கும் தலைவனுக்குத் திருவள்ளுவர், 'துறவோர்க்குத் துணை யாக' இரு என்கிறார்.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

என்றதை எண்ணுவார் தெளிவர்.

அவர் மணந்த துறவராக இருப்பின் துவ்வாதார், இரவலர் பட்டியலுள் அடங்கியிருப்பர்.

திருமணமே செய்யாது சமயத் தொண்டும் சமுதாயத் தொண்டும் ஆற்றிய **வீரமாமுனிவர் போல்வார்,** ஒரு நாட்டளவில், ஒரு சமயத்தளவில் அடங்கிவிடும் சுருக் கத்தர் அல்லர்! மணவாத் துறவுத்தொண்டர் உலகளாவிய அளவில் என்றும் எங்கும் காணவுரியரே ஆதலால், அவர் துறவருள் தனித்து விடப்பட்டு, அற நெஞ்சத் தாரால் புறக்கணிக்கப்பட்டவர் அல்லர் எனலே சால்பாம்.

* * * * *

"**திருவள்ளுவம் சமயமாக எட்டவில்லை**" என்பது அறவாணர் குறிப்பு.

ஆம்! திருவள்ளுவம் சமயமாக எட்டாமை, அவர் காலத்தளவில் தமிழகம் புகுந்த வைதிகம், சமணம், பௌத் தம் ஆகிய முச்சமய முட்டல் மோதல் வழக்காட்டு பொய் புனைவு ஆகியவை கண்டே, தாம் ஒரு சமயம் சாராமை **மட்டுமன்று, புதுச் சமயம் ஒன்று படைக்கவும் திரு வள்ளுவர் விருப்பம் கொண்டிருக்க மாட்டார்.** அத னால் பின்னாளில் தோன்றிய சைவ சமயக் கல்லாடர் தம் நூலுள்,

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருளிது என்ற
> வள்ளுவர்"

என்று குறிப்பிட்டார்.

சமயம் மக்களை ஒப்பப்பாராமல் தனித்தனி பிரித்து வைத்தல் வெளிப்படை. சமயப் பிரிவுகளும், உட்பிரிவு களும் கூட, ஒன்றை ஒன்று ஒன்றாமல் பிரிதலும், முட்ட லும் அச் சமயத்தின் மூலவர் காலத்தை அடுத்தடுத்தே கூட உண்டாகி விட்டன. **அயற் சமயத்தைக் கூட அரவணைக்கும்**

சமயத்தார், தம் சமய உட்பிரிவை ஒதுக்கியே வைக்கிறார். ஆனால், அச்சமயத்தாரும் தம் நூலாகத் திருக்குறளைக் கூறிக் கொள்ளுதல் காணமுடிகின்றது.

திருவள்ளுவம் சமணம் சார்ந்தது என்றும், பௌத்தம் சார்ந்தது என்றும், வேத நெறியது என்றும், சிவனிய வழியது என்றும், மாலியம் தழுவியது என்றும் கூறி வந்தனராகவும், திருவள்ளுவம் கிறித்தவத்தொடு ஒத்தியல்வது என்றும் கூறுவாராயினர். சமய வாணரும் ஏற்பதாய்ச் சமயச் சார்பு இல்லாததாய் விளங்கும், 'சமயச் சால்பு' உலகிடையில் அரும்புதல் உண்டாகாமல் உலகம் நலம் எய்தாது. சமயம் சாராமையால் தனக்கென ஒரு கூட்டத்தைக் கூட்டாத - திரட்டாத திருக்குறள் தன் சமயச் சால்பால் உலகோர் தம் தனிப்பெரும் மதிப்புக்கு உரியதாக விளங்கக் கூடும். அத் தகவை எச்சமய நூலும் பெறுதற்கு, அச்சமயச் சார்பே தடையை ஆக்கிக் கொண்டு நடையிடல் வெளிப்படை. ஆதலால், திருவள்ளுவம் சமயமாக எட்டாமையால் கூட்டத்தைத் திரட்டிக் கொள்ளவில்லை எனினும் , சமயச் சிக்கலில் மாட்டிப் பழிப்புக்கும் பகைக்கும் இடமாக்காப் பீடுடன், வள்ளுவர் தம் ஆழ்ந்தகன்ற நுண்ணிய நோக்கின் விளைவாய் என்றும் விளங்கும். இது குறைவாகா நிறைவேயாம்.

அதனால்தான் பலப்பல சமயத்தரும் ஆர்வம் காட்டி எம்நூல் என்பதுடன், சமயச் சால்பிலே நின்ற வள்ளலாரையும் நம்பா மதத்தராம் பெரியார் போன்றவரையும் ஏற்றுப் போற்ற வைக்கின்றதாம்.

திருவள்ளுவம் சமயநூலாக இருந்தும் அதற்கொரு சார்புக் கூட்டம் அழுத்தமாக அமைந்தும் இன்று இருந்தால், அறவாணர் எழுதுகோல் திருவள்ளுவம் பற்றி மனம் போன

போக்கில் கீறல்களை உண்டாக்கவும் நார் நாராகக் கிழிக்கவும் கிழித்து கிழித்துக் ஒட்டுப் போட்டுத் தைக்கும் வேலை செய்யவும் இயலுமா? சமயச் சார்பார் விடுவரா? சமய நூலைத் தொட்டு ஆய்ந்தவர் இந்நாளில் இல்லாமல் இல்லையே! அவர்கள், இப்படி எழுதிய பின்னரும் பாராட்டும் கூட்டமும் பரப்பும் ஈட்டமும் கொள்ளும் நிலையிலா உளர்! சமயநூல் ஆகாமையும் ஆக்கப் படாமையும் ஆகியவற்றால் வள்ளுவம் இனியவே செய்யும் சால்பில் ஓங்கியே நிற்க வைத்துள்ளதாம்.

* * * * *

அடுத்து அறவாணர் கிளப்பது ஓர் ஐயவினா. அது, “திருவள்ளுவர் தம்சிந்தனை அளவில் தெளிந்து உரைத்த அறவியல் தீர்வுகள், நடைமுறையிலிருந்து வெகு தொலைவு விலகி இருந்தமையால், தமிழ் அரசர் களாலும் மக்களாலும் பின்பற்றப் படாமல் விடப் பட்டனவா?” என்பது.

“நேரிடையாக மக்கள் சிக்கலை அறியாமல், ஒதுங்கி ஓரிடத்து இருந்து, தம் சிந்தனையால் வழங்கிய தீர்வுகளை யுடைமையால் வள்ளுவம் பின்பற்றப்படவில்லை. மக்கள் வாழ்வியல் நடைமுறையில் இருந்து வெகு தொலைவு விலகி இருந்தமையால் பின்பற்றப் படவில்லை; அவ்வாறு பின் பற்றாதவர்கள் ஆள்வோர் மட்டுமல்லர்; மக்களும் பின் பற்றவில்லை என்று முடிவு செய்யலாமா? என வினவு கிறார். வினாவில் ஐயம் இருந்தாலும் வினாவின் விடை, அவரளவில் முடிவு செய்யப் பட்டதாகவே கொள்ள லாம். ஏனெனில், தொடக்கத்தில் வள்ளுவம் பற்றிக் கூறியவை எவையோ அவையே ஐயவினா என்னும் வடிவம் கொண்டுள்ளது என்பதால். வள்ளுவம் செய்யப்பட்ட நாளில்,

"தமிழகத்தில் என்ன நடைமுறை அறம் இருந்தது" என்பதை அறியாமல், அந்நடைமுறை அறத்தில் இருந்து வெகுதொலைவில் விலகி நின்று அவர் என்ன தீர்ப்புக் கூறினார் என்பதை அறிவது எப்படி? இது, தெளிவில்லாக் குற்றச் சாற்று எனக் கொள்ளுதலே முறைமை. ஆனால், நாம் எண்ணிப் பார்த்து அந்நாள் நடைமுறை அறத்தைக் காணலும் வேண்டுமே அல்லவோ!

தெளிவாக வள்ளுவர் நாளில் இருந்த நாட்டு நடைமுறையை அறமுறையை - பாண்பாட்டியலை அறிகருவியாக இருக்கும் ஒரோ ஒரு நூல் தொல்காப்பியமே. மற்றைப் பாட்டு, தொகை என்பனவோ வள்ளுவர் காலத்துக்கு முற்பட்டவை எனக் கூற முடியாதவை. வள்ளுவர் காலத்துக்கு முற்பட்டனவும் , காலத்தொடு பட்டனவும், காலத்திற்குப் பிற்பட்டனவுமாம் நிலையவை. இது திருக்குறளை ஏற்றுப் போற்றும் அந்நூற் பாடல்களைக் காணும் எவருக்கும் வெளிப்பட விளங்கும் சான்றாம்.

வள்ளுவர் காலம் என்னும் ஆய்வுப் பகுதியில் அவற்றைக் காண்போம். இவண் வள்ளுவர் கால நடைமுறையை அறிய முழுமையாக வாய்த்த கருவி தொல்காப்பியமும், வள்ளுவர் இயற்றிய குறளுமே யாம்.

சான்றாண்மை, திருக்குறளில் தொண்ணூற்று ஒன்பதாம் அதிகாரம். அதில் ஒன்பதாம் பாடல்,

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்" 999

என்பது.

இப்பாடலில் ஊழிப் பெயர்வைச் சுட்டுகிறார். தலையூழி, இடையூழி, கடையூழி என ஊழிகள் பற்றிய குறிப்புகள்

தமிழ்ப்பரப்பில் காணக்கூடியவை. புறநானூறு பதிற்றுப்பத்து சிலப்பதிகாரம் இறையனார் களவியல் இன்னவற்றில் காணவும் காட்டவும் இயல்வன. பரிபாடலில் பனியூழி முதலாம் ஊழிகளும் அவற்றின் பெயர்வுகளும் விளங்கக் கூறப்பட்டுள. அவ்வூழி பெயரினும் பெயராப் பெற்றிமை சான்றோர் நிலையாகச் சுட்டப்படுதல் எண்ணத்தக்கது.

ஊழ் என்பது இயற்கையாம் முறைமை. அம் முறைமை மாற்றம், ஊழ் அல்லாதது; அதாவது "ஊழல்!" ஊழ் முறையால் வரும் கால இயற்கை, ஊழி! இவ்வூழி நிகழ்வின் விளிம்பில் நின்று தப்பிய வேந்தன் நிலந்தரு திருவிற் **பாண்டியன்!** அவன் அவையத்து அரங்கேற்றப் பட்ட நூல் தொல்காப்பியம்! ஆதலால், ஊழி அலைக்கழிவு இடையேயும் உய்ந்து நமக்கு வாய்த்த ஒரு நூல் தொல்காப்பியம். அப் பழம் பாண்டி வேந்தன் பட்ட ஊழி அலைக்கழிவு - உய்வு - அவன் ஊழை வென்ற வாழ்வு என்பன பற்றிய பாடல் புறநானூற்றின் முகப்புப் பாடல்களாக உள. இவை போன்ற சில பாடல்களும் இருக்கக்கூடும். வள்ளுவர் காலப்பாடல்களும், அவர் காலத்திற்குப் பிற்பட்டோர் காலப் பாடல்களும் இடம் பெற்றிருக்கும். ஏனெனில், **தொகை நூல்** அஃதாதலால்!

திருவள்ளுவர் கால **'நடைமுறை அறவியல்'** அறிதற்கு வாய்க்கும் சான்றுகளை ஆழ்ந்தெண்ணியே காண வேண்டும். மேலோட்டச் செய்தி அன்று அது.

முதற்கண் தொல்காப்பியத்தை எண்ணுவோம்.

"அறத்தொடு நிலை" என்பதும் 1152

"அறக் கழிவுடையன" என்பதும் 1164

"அறம் முதலாகிய மும்முதற் பொருள்" என்பதும் 1369

தொல்காப்பிய ஆட்சிகள்.

வள்ளுவர் வழங்கிய நூல் "அறம்" என வழங்கப்பட்டமை புறநானூற்றில் அப்பெயரொடும், வள்ளுவர் வாய்மொழி யொடும் வெளிப்படக் கூறப்பட்டன. இந்நாளிலும் கடந்த சில நூற்றாண்டுகளின் பொது மக்கள் வாழ்விலும் வழங்க லாகிய 'அறம்' பாடுதல் என்பதும், அறம் பாடின் சொல்லியது சொன்னவாறு நிகழும் என்பதும் மக்கள் வழக்கில் ஊன்றி யிருத்தல் வேண்டும். 'அறம்' எனப் பெயர் கொண்ட வேறு நூல் ஒன்று தமிழ் நூல் பரப்பில் இல்லாமையே இதன் சான்றாம்; "வேறு அறப் பெயரால் நூல் இருந்திருக்கலாம்; இருந்து மறைந்திருக்கலாம்" என்பார் உரை, அறிந்த தொன்றிருக்கவும் அதனைச் சொல்ல ஒப்பாது தள்ளுபடி செய்யுமாறு கூறும் தகவிலர்ப் பார்வையர் வழியதாம்.

தொல்காப்பியர் 'அறம்' என ஆட்சி செய்யினும் அதன் பொருள் புலப்படும் வகையில் உரைத்தார் அல்லர். அறம் என்பதன் ஈடு இணையிலாப் பொருளை வழங்கு பவர் வள்ளுவரேயாம். அவர்,

"மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்றார். 34

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றார். 49

"அறத்தான் வருவதே இன்பம்" என்றார். 39

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை" என்றார். 32

அறம் என்னும் சொல்லை முன்னாகக் கொண்டே இருபத்து மூன்று குறள்களை யாத்தார்.

தொல்காப்பியர் வழங்கிய அறத்தொடு நிலை இலக்கிய வாணர் ஆட்சியிலும் இலக்கணவாணர் ஆட்சியிலும் இருந்திருப்பினும் பொதுமக்கள் புரிந்து கொள்ளும் புலப்பாடு

உடையதாக இல்லை. திருவள்ளுவரோ தாய்போல் தழுவி, தக்க ஆசான்போல் நெறி காட்ட வந்த அறவர். ஆதலால், அறத்தின் இலக்கணத்தை எளிமையாய் எவரும் புரிய எடுத்துரைத்தார். அது, "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்பது.

ஏனெனில், மன மாசே உலகியலில் காணும் மாசு களுக்கும் உலகியலில் வாழும் மக்கள் உளவியலில் காணும் மாசுகளுக்கும் மூலம் என்பதை உணர்ந்தே கூறினார்.

ஒரு தலைவி அறிவு அறிந்தவள்; புரிவும் அறிந்தவள்; அவள் மனத்துப் புகுந்து ஆளானான் எவனோ, அவ னையே மணந்து கொண்டு வாழுதல் உறுதிப் பிடியாம் ஒழுக்க நிலையே அறம். அதனைத் தோழிக்குக் கூறுதலே தலைவி தோழிக்கு அறத்தொடு நிலை என்பதாம். மன மாசில்லா வாழ்வின் அடிமூலமே 'அறம்' என்பது இதனை எண்ணினால் தெளிவாம்.

அவள் அறத்தொடு நிற்றல் போல அவன் நிற்க வேண்டும் அல்லவோ! அவன் அறவனா? எனின் வள்ளு வர் கண்ட தலைவன் அறவனேயாம்!

"தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர்" 1191

"வீழ்வார்க்கு வீழ்வார்" 1192

"வீழுநர் வீழப் படுவார்" 1193

"இருதலையானும் இனிது" 1196

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" 974

என்னும் குறள்களை எண்ணினால் "இருவரும் மாசிலாமனத்தர்' என்பது புலப்படும்.

"இல்லை தவறவர்க்கு ஆயினும்"

"தவறிலர் ஆயினும்"

என்னும் (1321, 1325) குறள்கள் தலைவன் தலைவியர் ஆகிய இருவர்தம் மன அறச் சிறப்பை விளக்குவன அல்லவா!

கிழமை என்பது உரிமைப் பொருட் சொல். வாழ்வியல் உரிமைத் தகுதியுடையர் என்பதால், தலைவன் தலைவி என்பார் கிழவன் கிழத்தி எனப் பட்டனர்.

நில உரிமையொடு உழவுத் தொழில்மேற் கொண்டவரைக் 'கிழவர்' என்றும் 'கிழார்' என்றும் வழங்கினர். உழவுத் தொழிலை எப்படிக் கருத்தொடுபேணிச் செய்யவும், கொண்ட பயனால் உலகோம்பவும் வேண்டும் என்பதை, உவமையால் காட்டினார் திருவள்ளுவர்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

என்கிறார். "நிலத்திற்கு உரியவன் நாள்தொறும் வேளைதொறும் நிலத்திற்குச் சென்று செய்வன செய்யாது சோம்பியிருந்தால் அந்நிலம் கணவன் பேணுதலைப் பெறாத மனையாள்போல வெறுப்புற்றுப் பயன் செய்யாது போய்விடும்" என்பது இதன் பொருளாம் (1039).

இதன் தொடர்ச்சியே போல்,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" 1040

என்கிறார்.

"யாம் எதுவும் இல்லேம்" என்று சோர்ந்து போய் இருக்கும் நில உரிமையாளரைக் கண்டால் நிலம் என்று சொல்லப்படும் நன்மகள் நகைப்பாள் என்பது இதன் பொருளாம்.

இவற்றின் பிழிவாகக் கூறுவார் போல்,

"இல்லதென் இல்லவள் மாண்பானால்'

என வாழ்க்கைத் துணைநலத்தில் கூறுகிறார் திருவள்ளுவர்.

வீட்டு நலத்திற்குக் காட்டிய இந்நெறிமுறை, நாட்டு நலத்திற்கும் கட்டாயத் தேவையுடையதே என்பதை மறவாராய்,

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்" 553

என்றும்,

"நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு" 520

என்றும் கூறுகிறார்.

வீடு நாடு ஆகிய எல்லாவற்றின் நலமும் ஒட்டு மொத்தமாகக் கண்டு உரைப்பவரை அல்லாமல் ஒதுங்கி நிற்பாரால் உணர்ந்து கூற முடியுமா இவ்வாறு!

மனத் தூய்மையில் உருவாகிய அறம், உலகளாவிய அறமாக விளக்கம் பெறுதல் வேண்டும் என்பது வள்ளுவர் வழிநோக்கு. ஆதலால், அதற்கு ஏற்ற வகையில் தம் அற நூலை இயற்றினார்.

வாழ்வு அகம், புறம் என இருகூறுபட அவர் காலத் திற்கும் முற்படவே தோன்றி விளக்கமும் பெற்றிருந்தது. அகவாழ்வு ஏழு பகுப்பாகவும் புற வாழ்வு ஏழு பகுப்பாகவும், கொள்ளப்பட்டிருந்தது. அகப் பகுப்பு ஏழு எனினும் முதற்பகுப்பும் ஏழாம் பகுப்பும் இடைநின்ற ஐம்பகுப்புள் முன் ஒட்டும் பின் ஒட்டுமாய்த் தோன்றி முடிவன ஆதலால், அவற்றைத் தனித்துக் கூறுதல் வேண்டா என விடுத்தார்.

ஆக ஐந்திணை வாழ்விலும், நடைமுறை வாழ்வும் நூன்முறை வாழ்வும் தனித்தனி இருத்தலே, பார்வை நூலும், பயன் நூலும் போல் நலம் பயக்கும் எனக் கண்டு நூலின் முற்படவும் பிற்படவும் அமைத்துக் கொண்டார். அவ்வமைப்பே அறத்துப்பாலும், காமத்துப்பாலுமாம்!

அறத்துப்பால் பயன்நூல்; காமத்துப்பால் பயன் பாட்டுக்குக் கொள்ளத்தக்க பார்வை நூல். முன்னது நடைமுறை வழக்கு! பின்னது நாடக வழக்கு என்பவை யாம். ஆதலால், அறத்துப்பால் ஆசான் அறங்கூறலாகவும், காமத்துப்பால் தலைவன் தலைவியர் கூற்றுவகையாகவும் அமைத்தார். இந்நெறி அவர் காலத்துப் போற்றப்பட்ட செந்நெறி. சான்று: தொல்காப்பியப் பொருளதிகாரம். ஆட்சிக்கு முன்னுரிமை தந்து நூலாக்குவதா, மக்கள் வாழ்வுக்கு முன்னுரிமை தந்து நூலாக்குவதா எனின், தொல் காப்பியமே வழிகாட்டியது. பொருள் அதிகாரத் தொடக்கம் அகத்திணை இயல்; அடுத்து வரும் இயல் புறத்திணை இயல்!

நாட்டு ஆட்சி என்பது தனித்தனி வீட்டு நல வாழ்வின் கூட்டமைப்பே ஆகும். வீடும் அகமே; வீட்டு வாழும் மாந்தர் உளமும் அகமே; வீட்டையும் கூட்டையும் கொண்டு அறிவுற்றமைந்த நாடும் அகமே; மண்ணும் அகமே; விண்ணும் அகமே ; நீரும் தீயும் அகமே! அகத்தின் நலவாழ்வே புறத்தில் பொலி வாழ்வு என்பதால் அறத்தை அடுத்துப் பொருட்பால் அமைந்தது. இந்நெறியும் தொன் னெறி விளக்கமே.

ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுள் இயலில்,

"அறம் முதல் ஆகிய மும்முதற் பொருள்" 366

என்றார். அவரே அகப் பொருள் அடைவில்,

"இன்பமும் பொருளும் அறமும்" 1014

என்றார். ஆதலால், அறம் கூறவந்த திருவள்ளுவர் - அறத்தின் முதன்மையும் - முப்பால் முழுமைத் தழுவலும் கருதி, அறத்தை முன்வைத்த திருவள்ளுவர் - அறத்தின் காவற் கமைந்த, 'இறைமாட்சி' தொட்டுப் பொருளைக் கூறினார்.

அறம் என்பது முதற் பகுப்பு எனினும், அதுவும் இரு கூறுபட்டு இயலலே உலக வாழ்வுக்கும் உயிர்க்கு ஊதிய மாக வாய்த்த பிறவி நோக்குக்கும் உரியது என்பதை உணர்ந்தாராய், ஒன்றனுள் இரண்டு வைத்து, உயரிய வாழ்வியல் ஓவியம் தீட்டிக் காட்டினார்.

மனையொடும் மக்களொடும் வாழும் வாழ்வு சிறத்தற்கு வேண்டும் நெறிமுறைகளை முதற்கண் வகுத்துத் தந்து, அவ்வாழ்வு வழிவழியாகத் தொடர்ந்து உலகுக்கு ஆக்கமாம் வகையால் படிப்படியே வழிமுறைக்கு வழிகாட்டி, அவர்கள் தக்கோர் நிலையுற்றபோது தாம் தமக்கும் தம் பின்னர் வருவார்க்கும் சிறப்பாம் வகையில் துறவு மேற்கொண்டு, பேராப் பெருநிலையுற மூலமாம் அவாவறுத்துச் செம் பொருள் வழங்கும் குருவராய் நிறைவுற வேண்டும் என்பாராய்த் துறவு நிலை கூறினார்.

அன்பின் பண்பும், அறத்தின் பயனும் தன்னகத்துக் கொண்ட இல்லறம், அருளின் தோய்வும், அவாவறுத்த நிறைவும் கொண்டதாய்த் திகழச் செய்த வள்ளுவ மூலம், அவர்கண்ட - கற்ற - தோய்ந்த தொல்காப்பிய ஆவணத் தின் பெருக்க விளக்கமேயாம்.

அது,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**

என்பது **(1142)**.

இல்லறக் கிழமையராம் கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றலிலும் உடனாகினரே அன்றித் தனித்தார் அல்லர். ஆதலால், வாழ்விடமாம் இல்லமும், வாழ்வு நலம் காட்டு வாராம் கிழவன் கிழத்தியரும், ஒருங்கே இருநெறிகளிலும் உடனாகி இருக்கும் உயர்மை தமிழ் நெறியாதல் கண்கூடு. மணவாத் துறவும் மறுக்கப்பட்டதில்லை என்பது, முன்னரே கூறப்பட்டது. இதனால் மகளிருக்கு வீடுபேறு இல்லை என்னும் புறச்சமய நெறி புறத்தே தள்ளப்பட்டமை அறிந்து கொள்ளலாம்.

ஆசிரியர் தொல்காப்பியர் அக்காலத்து அரசுகளின் பெயர்களைச் சூடிய பூவால்,

"போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர்" 1010

என்று குறிப்பிட்டார். வேந்தர் பெயர் சுட்டாமல் அவர் மாலை சுட்டினார், அவர்தம் வழிமுறையர் அடையாளப்பூவும் அஃதாகவே இருக்கும் என்பதால் இவ்வேந்தர் சிறப்பாகச் சுட்டிய சொல் **'மாபெருந்தானை'** என்பது. அத் தானைச் சிறப்பே அவர் சிறப்பில் தலைப்பட்டது. ஆதலால், அவ்வாறு குறிக்கப்பட்டார். திருவள்ளுவரோ, இறைமாட்சியின் தொடக்கச் சொல்லையே **'படை'** எனக் கொண்டார்.

படை மாட்சியின் முதற்பாடலில்,

"உறுப்பமைந்து ஊறஞ்சா **வெல்படை** வேந்தன்
**வெறுக்கையுள் எல்லாம் தலை"**

என்றும், அடுத்த பாடலில்,

"உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது"

என்றும் (761, 762) கூறினார். அடுத்த அதிகாரம் படைச்செருக்கு எனவும் வைத்தார் (78).

தானை என்பது எது? குடிமக்கள் இல்லாமல் தானை என்னும் ஒன்று உண்டா? இல்லை; ஆதலால், படையை அடுத்த சொல்லாகக் 'குடி' என்பதை அமைத்தார்.

குடிமை, குடிசெயல் வகை என இரண்டு அதிகாரங் களையும் வகுத்தார். (96, 103)

வீட்டு வாழ்வாம் பயிற்சிக் களத்தின் வெற்றியே, நாட்டு வாழ்வு என்பதைத் காட்டுவார் போல,

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை" 1027

எனக் குடிசெயல் வகையில் உரைத்தார்.

போந்தை வேம்பே ஆர் என அடையாளம் காட்டிய அளவு கூட, அகப் பொருளில் 'பெயர்ச்சுட்டு' இடம் பெறல் ஆகாது என்னும் தொல்காப்பியக் கட்டளை துலங்குதலை வள்ளுவர் கண்டார். விரிய விரிய எண்ணி, அவ்விரிவின் மூலமாக நூல் யாத்தலே உலகுக்கு உரியதாய், நாடு மொழி இனம் என்பவை கடந்த பொதுமையதாய் விளங்க உதவும் எனத் தெளிந்து தேர்ந்திருக்க வேண்டும்! அதனாலேயே தம்மையோ, தாம் வாழும் காலத்து வேந்தையோ சான்றோர் எவர்தம் பெயரையோ தம் நாடு மொழி ஊர் உறவு ஆகியவற்றையோ கூறா அக நெறியை மேற் கொண்டார். இவ்வகையால்தான், உலகப் பார்வைக்கு வள்ளுவம் ஒரோ ஒரு நூலாக அமைவுற்றது.

வள்ளுவர் கொண்ட இப்பார்வை, 'வரலாற்றுப் பார்வை அற்றது' என்பதால், அவர் காலம் இடம் முதலாம் எவற்றையும் அறிந்து கொள்ள இயலாது போயமை பெருங்குறை அல்லவா! அக் குறிப்புகள் நூலில் இடம் பெற்றிருந்தால் ஆய்ந்து காண முயன்றாலும் அரிதாகிய செய்திகள் எளிதாய் அவர் ஆக்கத் தாலேயே புரிந்து கொள்ள வாய்த்திருக்கும் என்பார் எண்ணம் மட்டுமில்லை, வினாவுதலும் நம் செவிக்கண் படவே செய்கின்றது.

**ஒரு பேராக்கம் உலகுக்கோ பொதுவுக்கோ ஏற் படும்போது ஒரு சில சிறு சிறு இழப்புகளுக்கு ஆட் பட்டே தீர்தல் உலகியல்.**

இந்நாளில் நான்கு வழிச்சாலை உருவாக்கத்தை நாடு மேற்கொண்டமையால், எத்தகு பழமையான பயன் மரங் கள் பல்லாயிரமாக வெட்டப்படுகின்றன. கையகலமாக வைத்திருந்தார் மனையும் நிலமும் தாமும் உள்ளடக்க மாகி விடவில்லையா? எத்தனை பொது விடங்கள் நினை விடங்கள் இடமும் தடமும் இல்லாமல் போய்விடு கின்றன என்பது கண் கூடுதானே. ஆனால், இவ்விழப்புகள் எல்லாவற்றையும் ஈடுசெய்யும் மேம்பட்ட நாட்டு நலம் காலமெல்லாம் வாய்த்துப் பொதுநலம் சிறக்கின்றது அல்லவோ! இப்படி எண்ணிப் பார்த்தால் அக்குறைபாடுகளின் இடையேயும் வள்ளுவம் **தன் பொதுமைத் தகவால் கொண்ட நிறைபாடு வளர்பிறை வளர்ச்சியெனப் பெருகி வருதல் விளக்கமாம்.**

தொல்காப்பியர் கூறும் வாகைத் திணையில் போர்க் கள வெற்றி மட்டுமன்றி, இல்லறக்கள வெற்றி என்பதை யும், இணைத்தே கூறுகிறார். இவ்வில்லற வெற்றி,

"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை"

எனப்படுகிறது (1026). ஆனால் அவர் காலத்தில் அக் கட்டமை ஒழுக்கத்துக்குக் கேடுகளும், பக்கம் பக்கமாக இருக்கவே செய்தன. அதனால், 'ஒழுக்கம் உடைமை குடிமை' எனத் தக்க, குடிமைக்கு ஆகாதன அவற்றுள் எவை என மக்கள் வாழ்வொடு பார்த்துக் தெளிகிறார் திருவள்ளுவர்.

அன்பொத்த காதல் மனையாளைத் தவிர்த்துப் பிறரொடு வாழும் வாழ்வினரையும் கண்டார்; ஆறறிவுப் பிறப்பியாம் மாந்தரை அவ்வறிவுப் பிறப்பி நிலையில் இருந்து தாழ்த்தும் கள் (மது) பருகுதலைப் பெரும் புகழ்ச் சான்றோரும் கொண்டிருத்தலைப் பார்க்கிறார்; இழக்கின்ற இழப்பை எல்லாம் இழப்பாக எண்ணாதவாறு மயக்கி வினைக் கேடாக்கும் சூதினைச் சான்றோரும் ஆள்வோரும் கொண்டிருத்தலும் காண்கிறார். அவற்றைச் சுட்டிக்காட்டி அறங்காத்தல் தம் தலைக்கடன் எனக் கொள்கிறார். அதனால்,

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு" 920

எனத் தொகுத்துக் கூறுவதுடன், வரைவின் மகளிர் (92), கள்ளுண்ணாமை (93) சூது (94) என மூன்று அதிகாரங்களாக வகுத்து விரித்துரைக்கிறார்.

வேள்வி செய்தலால் இம்மைப் பேறும் மறுமைப் பேறும் வேண்டிய வேண்டியாங்குப் பெறலாம் எனப் பொய்யும் புனைவும் கொண்டு வேந்தரை வேதநெறியர் மயக்குதல் கண்டார் வள்ளுவர்.

வேதநெறி வேள்வி, கொலைவேள்வி, புலை வேள்வி, **தெய்வப் பெயர் சொல்லிக் கொலை செய்தாலும் கொலை கொலையே; தெய்வப் பெயர் சொல்லிப்**

புலால் உண்டாலும், புலால் புலாலே என அறிவுறுத்து வாராய்,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்றார் (259).

மாறாக உயிர்களைப் பேணிக் காக்கும் அருளறம் பேணுக என்பாராய்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்றார் (322).

மேலும், இயற்கை இயக்கத்திற்கு இன்றியமையா தது எரிபொருள். அவ்வெரிபொருளாக உயிரிகளுக்கு உரியவை உணவு நீர் முதலியவை. உயிரிகளின் பசியாம் எரிக்கு, எரிபொருள் தட்டின்றி வழங்குதலே அவற்றின் வாழ்வுக்கு உதவுதல். அதனைச் செய்வதை விட்டு, வாளா எரித்துக் கரியாக்கும் வேள்விக்கு வழங்கும் எரி பொருள், பாழாக்கும் பாவச் செயல் என்பாராய்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றும் (81),

"இனைத்துணைத் தென்பதொான் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"

என்றும் (87), விருந்தோம்புதலே - பசிக்கு உணவு வழங்குதலே - வேளாண்மை என்றும், வேள்வி என்றும் உரைத்தார்.

ஆய்ந்து ஆய்ந்து கொள்ளுதலே உண்மை நட்பை ஆக்கும் என்பது போல் தள்ளுவனவற்றைத் கட்டாயம்

தள்ளவும், கொள்ளுவனவற்றைக் கட்டாயம் கொள்ளவும் ஆகிய **'கட்டமை ஒழுக்கம்'** காட்டியவர் வள்ளுவராம்.

"அறக்கழிவுடையன பொருட்பயன் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப"

என்பது தொல். பொருளியல் நூற்பா.

அறக்கழிவு என்பது அறத்திற்கு அழிவானது; அறத்திற்கு ஆகாது எனக் கழிக்கப்பட்டது. அது இன்பமும் பொருளும் ஆக்குவது போலத் தோன்றினாலும், அது வழி வழியே வருவது என்றாலும் பழிப்புக்கு உரியதே என்று அறவர் கூறுவர் என்கிறார். இத் தொடர் வகையால் அறியக் கிடக்கும் அறக்கழிவுடையவை எவை எவை? அடுக்கிச் சொல்கிறார் வள்ளுவர். அக்காலத்தில் காணப்பட்ட அறக் கழிவு, எக்காலத்தும் ஆகாவென அவரால் கருதப்பட்ட அறக் கழிவு, எத்தனை அதிகாரப் பொருளாக இடம் பெற்றுள்ளன என்பதை எண்ணின் எத்தனை பளிச்சீடுகள்!

பிறனில் விழைதல், அழுக்காறு கொள்ளல், வெஃகுதல், புறங்கூறல், பயனிலசொல்லல், தீவினைக் கஞ்சாமை, புலால் உண்ணல், கூடாஒழுக்கமுடைமை, களவு செய்தல், வெகுளல், இன்னாசெய்தல், கொலைபுரிதல், அவாவல் என அறக்கழிவுடையனவற்றை அறத்துப்பால் ஒன்றிலேயே சொல்லவில்லையா?

இவை, அந் நாள் நடைமுறையில் இருந்து வெகு தொலைவு விலகியவையா? நடைமுறையில் மட்டுமின்றி என்றுமே நல வாழ்வுக்கும் நல்வாழ்வுக்கும் ஆகாதவை எனக் கூறியவையாகிய இவை உயரிய உள்ளார்ந்த தீர்வுகள் அல்லவோ!

* * * * *

"நடைமுறையை ஒன்றியிருந்து வள்ளுவர் அறம் உரைத்தார் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், **தமிழ் அரசர்களும் தமிழ் மக்களும், ஏன் (ஒப்பிப்) பின் பற்றாமல் விட்டனர்**" என வினாவினால், மறுமொழி என்ன?

தமிழர் குறைகள் இவை இவை என உலகளாவிய பார்வையில் ஒப்பிட்டு ஒப்பிட்டுக் காட்டித் தமிழர் இழிமை களைப் பற்றுடைய தமிழர் தாமும், இவ்வாய்வுரை கேட்டுப் புண்படவும், படித்துத் துயருறவும் பேசவும் எழுதவுமாகவே தம் கடப்பாட்டில் தலைப்பட்டு நிற்கும் **அறவாணர்க்குத் தமிழவேந்தரும், தமிழர்களும் வள்ளுவத்தைப் பற்றிக் கொள்ளாமைக் காரணம், அறியாச் செய்தி அன்று.** மாந்தவியல் நோக்கில் மாப் பேராய்வு நிகழ்த்தும் அவர், வள்ளுவம் பற்றப் படாமைக் காரணம் **அறிந்து கொண்டே ஐயம் கிளத்துகிறார். இஃது** அறியார் ஐயவினா அன்று. அறிந்து எவரேனும் வெளிப்படுத்தட்டும் என்னும் **தட்டிக் கழிப்பு உத்தி இஃதென்னின் சாலும்.**

தமிழர் இந்நாளில் அயன்மையில் காட்டும் ஆர்வம் இன்று நேற்று ஏற்பட்டதா? வெண்ணிறத்தினரை மதிக்கும் மதிப்பும் கருமை நிறத்தவரைத் தாழ்த்தும் தாழ்த்துதலும் புதுவனவா? உழையாதாரின் உயர் வாழ்வில் கொண்ட மதிப்பு, உழைப்பார்பால் சிறிதாவது கொண்டது உண்டா? புரியா மொழியில் காட்டும் பற்றுமை புரியும் தாய்மொழி மேல் காட்டும் இயல்பு உண்டா? போலிமைச் சடங்கில் ஏமாறும் இன்பம், மெய்யாய வழிபாட்டில் ஏற்படுவ துண்டா? கொத்தடிமையாகக் கிடக்கும் இழிமையைப் பேறு எனக் கருதும் சிந்தனையிலாப் பிறப்பில் இருந்து விடுபட்டார் தமிழரில் அரியர் அல்லவா! காணும் இன்பத்திலும் காணா இன்பக் கற்பனையில் மூழ்கி, இழக்கக் கூடாதன எல்லாம்

இழக்கவும், போலித் துறவர், சோதிடர், பொன்மாற்றுச் செய்வேம் என்பார் ஏமாற்றுதலுக்கு இரையாகிக் கிடக்கவும் தமிழரைப் போல்வார் பிறர் உளரா? எப்பொதுக் கருத்திலேனும் ஒன்றுபட்டு நிற்கும் தலைமையர்களைத் தமிழகத்தில் கண்டதுண்டா?

இவற்றின் விடையும் விளக்கமும் ஓரளவு சிந்திப் பார்க்கும் புலப்படவே செய்யும். வள்ளுவம் ஏன் பின் பற்றப்படவில்லை என்பதைத் தெளிவிக்க வேறு வேண்டுவ இல்லை!

எனினும், வள்ளுவத்தின் வழியாகச் சுட்டுதல் நேர் விடை யாகவே இருக்கும். சில காண்போம்.

தமிழ் நெறிக் காவலும் தமிழ் நெறி மீட்டெடுப் பும் செய்யவல்லார் எனத் தமிழர்களால் கருதப்படும் அறவாணர், தாமே பின்பற்றத் தகும் குறிக்கோள்கள் என்று பகுத்தறிந்து பார்க்க வேண்டிய திருக்கிறது. என்றால், அவ்வேந்தரும் அம்மக்களும் அவ்வாறு பார்த்திரார் என முடியுமா? முற்றாகப் பின்பற்ற இயலாதவை எனத்தள்ளத் தானா முடியாது? தள்ளியே ஆக வேண்டும் என்று முடிவு கொண்டாரை வள்ளுவர் மீளவந்தா விளக்கம் தந்து ஒப்புக் கொள்ள வைக்க முடியும்?

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

"அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்"

என்னும் இவற்றை எச்சமயத்தார், எந்நெறியார், எத்தலைவர் கூறவல்லார்? என்னை - என் சொல்லை எனினும் எண்ணிப் பார்த்து உன் உள்ளத்திற்கு உண்மை எனப்பட்டால் அன்றி ஒப்புக்கொள்ளாதே என்று பறையறைந்தார்உலகில் எத்தனை பேர்!

ஒரு புத்தரை, ஒரு சாக்ரடீசரை, ஒரு வள்ளுவரை, ஒரு பெரியாரைப் போன்ற சிலரைத் தாமே அறிந்த அளவால் சுட்ட முடிகின்றது!

புத்தர் சமயவாணர் ஆக்கப்பட்டமையால் அவர் சொல் மூடிப் புதைக்கப்பட்டமை அல்லாமல், அத்துறவர் கள் எண்ணு பொருளாக உள்ளதா? அவர்கள் செய்யும் அடாச் செயலை நோக்கப் "புத்தரை இப்படி இழிவுக்கு ஆக்கவே இச்சமயம் தோற்றுவிக்கப்பட்டதா" என ஆறாத் துயர் ஏற்படவில்லையா?

திருவள்ளுவர் அறம், மனமாசின்மை! **மனத்தில் மாறா அழுக்கின் ஆளுமையால் - தன்னலத்தால் - தன் இனமே வாழும் வாழ்வு நோக்கால், தம்மைத் தெய்வப் பிறப்பாகவும் தம் மொழியைத் தெய்வ மொழியாகவும் கரவாக ஆக்கி, அந்நிலை எந்நாளும் தொடர ஆள்பவர் தம்மை ஆட்படுத்திக் கொள்ளலே ஆகும் வழி என்று** 'யாகம்' என்னும் ஒன்றைத் தமிழ் வேந்தரிடம் திணித்து, தமிழ் மக்களுக்கு ஆரியம் மூளைச் சலவையாக்கியது, வள்ளுவர் காலத்திற்கு முற்படவே ஆகிவிட்டமையின் சான்றுதானே,

'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என் னும் பெயரும், அவன் வேள்விக்கு உதவிய வேள்விக் குடி என்னும் ஊரும், அதுபற்றிய செப்பேடும்! இன்னும், இராசசூயயாகம் வேட்ட பெருநற்கிள்ளி என்ன, வேள்வி

வளர்த்துத்தானும் தன் மனைவியும் உடலோடு விண்ணகம் புகுவதாகக் குறிக்கப்பட்ட பதிற்றுப் பத்துச் செய்தி என்ன, இமயக்கல் எடுத்த வீறு ஒருபால் இருக்க அதனை நிறைவேற்றிய வேந்தன் செங்குட்டுவன், **வேள்விச் சாலைக்குள் தானே புகுந்தான்.** "வேள்விச் சாலையுள் வேந்தன் புகுந்த பின் யானும் சென்றேன்" என்பது தானே இளங்கோவடிகள் உரை.

இவ்வேள்வியை,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று கண்டிக்கும் வள்ளுவத்தை வேந்தர் ஏற்பரா? அவனே உயிர், அவன் வழியே வழி எனக் கொண்ட மக்கள் ஏற்பரா? வேள்வியைத் திணித்த வேதியர், தம் சூழ்ச்சி வலையில் சிறிது நைதலுண்டாகவும் தொய்வு ஏற்படவும் விடுவரா?

மண்ணகத்தில் இருந்து விண்ணகத்தின்பம் பெறலாம் என்னும் ஏமாற்று, இந்நாளிலும் செய்ய வல்லார்க்கு, அந்நாள் செய்திருத்தல் தானா அரிது!

பிரம்ம சத்திரிய வைசிய சூத்திர பஞ்சம என வண்ணப் பிரிவு செய்து, தாம் தகவார்ந்த மேலிடத்தில் இருக்க, தம் கண்ணசைவைக் கண்டு கடனாற்றற்குச் சத்திரியர்க்கும், கைநிறைய ஈட்டிய வெல்லாம் தானப் பெயரால் கொட்டிப் புண்ணியப் பேறு பெறுவதற்கு வைசியர்க்கும் - 'இரு பிறப்பாளர்' என்னும் பொருந்தாப் புனைவுப் பெருமை தந்தும், தம்மில் தாழ்ந்த எண்ணிக்கையில் நூல் அணிவித்தும், வேளாண்மைத் தொழில் புரியும் உலகு தொழும் குலத்தாரைக் கடை நிலையராய்ச் 'சூத்திரர்' என்னும் மீளா அடிமைக்கு ஆட்படுத்தும், அவ்வுழு தொழிலார்க்கு உதவும்

தொழில் வல்லாரை ஐந்தாம் கடைப்பிறவியாய்ப் 'பஞ்சமர்' என்று வைத்தும், அவரைத் தீண்டலே அன்றிக் காண்டலும் தீட்டு என்னும் கழிசடைக் கயமை நெறியைக் காட்டியும் இவற்றை அறநெறியாக வகுத்த உலகின் ஒட்டுமொத்தத் தீண்டாப் பிறவியின் நூலை 'மநுதருமம்' என நம்ப வைத்தும் செய்தவை இவ்வுலகக் கொடுமைகள் எவற்றினும் விஞ்சிய கொடுமைகள் அல்லவா! அக்கொடிய மநுநெறியே எம்நெறி என ஆள்வதே 'தெய்வநிலை ஆட்சி' என்று ஆக்கப்பட்ட இழிமை கண்டு நொந்து நொந்து,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என முழங்கினால், வேதியர் பொறுப்பரா? வேதியர் வழி அரசர் ஏற்பரா? அவரே மாலியத் தோன்றல் (காவற் கடவுள்) எனக் கொண்ட மக்கள், மாறி நடப்பரா? இன்னும் மேலே என்ன சொல்கிறது வள்ளுவம்?

"சிறப் பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" என்றும் கூறுகிறதே!

'நாமாவளி' சொல்வதும் 'யாகம்' புரிவதுமே உயர் தொழில்! அதற்கு உதவியாய் அரசு செய்தலும் பொருட் குவி தேடலும் வேண்டியே சத்திரியரும் வைசியரும் உள்ளமையால் அவர் தொழிலும் உயர்வுடையதே. உழவுத் தொழில் கைத் தொழில் செய்வார் பாவப் பிறவியர்! மேலே குறித்த புண்ணியப் பிறவியர்க்கு உதவுவதாலேயே பின்வரும் பிறப்புக்குப் புண்ணியம் தேடிக் கொள்ள வேண்டியவர் என்றிருந்த சூழ்ச்சியைச் சம்மட்டியால் அறைந்து வள்ளுவம் உடைப்பதே,

"தொழில் செய் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா"

என்ற தொடராம்.

தொழுகைக்கு இடமாக இருப்பதும் தொழுது தொடங்குவதும் தொழில் (தொழு + இல்) ஆகும்! அதில் உயர்வு தாழ்வு இல்லை. எத்தொழிலாயினும் அதனைச் செய்யும் செம்மை - நேர்த்தி - பயன் - என்பவற்றாலேயே சிறப்பு அமையும் என்றார் வள்ளுவர்.

பாரதியார் இவற்றுக்கு விளக்கம் தருவார் போலச் சொல்லிய குறிப்புகள் சில உள.

"வையகம் காப்பவ ரேனும் - சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே - புவி
போற்றிட வாழ்பவர் மேலோர்"

என்பது ஒன்று.

"தப்பாக வேதம் சொல்பவனைப் பார்க்கிலும்
நன்றாகச் சிரைப்பவன் உயர்ந்த சாதி"

என்பது மற்றொன்று.

"நந்தனைப் போல் ஒருபார்ப்பான் - இந்த
நானிலத்தில் பிறந்த துண்டோ?"

என்பது இன்னொன்று.

உள்ளொத்த உணர்வு இல்லாமல், உள்ளத்தே செருக்கும், தன்னலமும், பிறரை இழிமைப்படுத்தலும் உடையவன் இறையுறை கோயிலுள் இருந்து வழிபாடு செய்வானாயின் நாட்டு நிலை என்னாம்? ஆள்வோர் நிலை என்னாம்? என்பவற்றைத் திருமூலர் திருமந்திரம் மலைமேல் விளக்காகக் காட்டுகின்றது.

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சிக்கில்,
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்;

பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்று
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே"

என்பது அது.

"வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு" 552

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்" 567

"அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" 555

என்பவை போன்று இடித்துரைக்கும், வள்ளுவ நூலைக் கண்ணால் காணவும், கையால் தொடவும் வேந்தர் கருதுவரா?

அவரைத் தம் கையுள் வைத்து ஆட்டும் வேதியர் இவற்றை எடுத்துச் சொல்லிச் சொல்லி எரிச்சலை வேள்வித்தீ வளர்ப்பதுபோல் வளர்ப்பதே வாழ்வாக்கிக் கொண்டிருக்க மாட்டாரா?

"பார்ப்பார்க்கு நின்குடை பணிக" என்று வேந்தன் முன் நின்று துணிச்சலாக ஆணையிடுபவர்,

"இமயத் தாபதர்க்கு எவ்விடையூறும் செய்யற்க"

என்று குமரித் தமிழ் நாட்டில் இருந்து கொண்டே, இமயப் பனிமலை வேள்வியர்கருக் காவல் கடமை பூண்டு பனி உருகுவதுபோல உருகி, வேந்தரை உருக வைப்பவர் - வள்ளுவத்தை வாழ்வியலாக்க விட்டு வைப்பரா?

இன்னும் இரண்டு குறிப்புகளைச்சுட்டி மேலே செல்லலாம். மாவலி என்பான் வேந்தன்; அவன்முன் மால் 'வாமனன்' என்னும் பெயரில் குள்ளமான பிராமண வடிவில் வந்து வேள்வி செய்ய அவன் காலடி எடுத்து மூன்று எட்டு வைக்கும் அளவு நிலம்

வேண்டுகிறான். மாவலி வண்மையே வாழ்வாகிப் போன படியால் வாமனன் கேட்டவாறு வழங்குகிறான்.

வாமனன் குள்ளவடிவுமாறி வானுற நிமிர்ந்து நின்று ஓரடியால் மண்ணகவுலகையும் மற்றோரடியால் விண்ணக உலகையும் அளந்து விட்டு மூன்றாம் அடிக்கு இடம் இல்லாமையால் மாவலி தலைமேல் மிதித்துப் பாதலம் சேர்த்தான் என்னும் கதை தமிழ் மண்ணில் பரப்பப் பட்டது.

தெய்வப் பிறவியெல்லாம் நூல் பிறவியாம்; அதன் செயலெல்லாம் கரவாம்; கொடைக்கு - செய்ந்நன்றிக்குப் பயன் - நிரயக் கொடையாம்! இக்கதையைக் கூறிக் கூறி மாலின் புகழைப் பரப்பினர். வள்ளுவர் இதனைக் கேட்டார். **சோம்பல் என்பது அறவே இல்லாத வேந்தன் ஒருவன் முயன்றாலே மண்ணும் விண்ணும் தன் அடிக்கீழ்க் கொண்டு வந்துவிட முடியுமே! இதற்கு என்ன 'வாமனன்' வேண்டும்** என்பாராய்,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" 610

என்று புனைவைத் தகர்த்தார்.

இன்னும் ஒரு புனைவு செய்து உலாவவிட்டனர்; எங்கும் பரப்பினர்.

**"திருமால் உலகில் அடையும் இன்பத்திற்கு (வைகுண்ட இன்பத்திற்கு) இணையாம் இன்பம், உலகில் இல்லை"** என்று கண்டு வந்த காட்சியர்போல் உரைத்தனர்.

திருமால் படுத்திருப்பதாகக் கூறுவது, பாற்கடல்! அவர் படுத்திருப்பதோ, அரவணை! அவர் துயில்வதோ, உறங்கியும் உறங்கா **அறிதுயில்!** இவை இன்பத்தின் ஈடிலாப் பேரின்பம்!

ஆண்பால் பெண்பாலாம் கிழவன் கிழத்தியர்; எல்லா வகைகளாலும் ஒத்த பேரன்பினர்; அவர்கள் அரவணைத்து இமை திறந்தும் திறவாமலும் இன்பத் துயிலில் ஆழ்கின்றனர்! இவ் வின்பக் காட்சி மக்கள் வாழ்விலே காணும் காட்சி! இக் காட்சி மெய்க்காட்சி! இக் காட்சியைக் கண்டும் கொண்டும் இருப்பவர் காணாக்காட்சியைக் கதை கதையாகக் கூறிக் கூறி இறைமையை இழிவு படுத்துகின்றனரே! பொறிவாயில் ஐந்தவித்த இறைமேல் இப்படிப் பொய்ப் புனைவா? வேண்டுதல் வேண்டாமை இலா - அவா வறுத்த பேராப் பெரும் பொருள் மீதா இப் பெரும் புனைவு என நகைத் தாராய்,

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" 1103

என்று வினாவினார்.

காவல் கடவுள் எனப்பட்டான் கதையையே இப்படி எள்ளும் வள்ளுவத்தைக் காவல் கடனேற்றவர் ஒப்பிப் பரப்புவரா? ஏற்பரா? ஒப்பவோ ஏற்கவோ கதைப்பவர் விடுவரா? ஆதலால், வள்ளுவம் வேந்தரால் ஏற்கப்பட வில்லை! அவர் ஆளுகைக்கு உட்பட்ட மக்களாலும் ஏற்கப் படவில்லை! ஆனால் வேதியப் பொய்மையைப் புரிந்து கொண்ட புலமைச் செல்வர்களால் வள்ளுவம் தலைமேல் தாங்கப்பட்டு வழிவழியாக விளக்கமுற்றே வந்தது என்பதைப் பல சொல்ல வேண்டா ஒன்று சொல்லி அமைவோம். அது கம்பரால் சொல்லப் பட்ட அடியளந்தான் கதையே! அவரால் புனைகதை கொள்ளப்பட்டாலும், வள்ளுவ வாய்மொழி தள்ளப்படவில்லை!

காசிபன் - அதிதி என்பார் மகனாகப் பிறந்த வாமனன்,

"முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதோர் நாவன் அனல்படு கையன்
அற்புதன்"

*மாவலி முன் சென்றான்.*

"வேண்டினர் வேட்கையின் மேற்பட்ட வீசி
நீண்ட கையாய்! இனி நின்னுழைவந்தோர்
மாண்டவர்' என்றான் **வாமனன்!**

*மாவலி சிந்தை உவந்து, 'என்செய' என்றான்.*

"*மூவடி மண்அருள்" என்றான் வாமனன்.*

"*தந்தனென்" என்றான் மாவலி.*

*மாவலியின் அமைச்சன் வெள்ளி (சுக்கிரன்) "திரு மாலின் சூழ்ச்சி இது: தாராதே" எனத் தடுத்தான் மாவலியை.*

*ஆனால் மாவலியோ,*

"வெள்ளியை ஆதல் விளம்பினை; மேலோர்
வள்ளியர் ஆகில் வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில; இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது; கொடுப்பது நன்றால்'

*என்றான். மேலும்,*

"கொடுப்பவர் முன்பு, கொடேல்என நின்று
தடுப்பவரே பகை"

*என்று மாவலி கூறி, மேலும் தொடர்ந்தான்;*

"எடுத்தொரு வர்க்கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகிதோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோய் உனதுசுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடுகின்றாய்"

*என்றான்.*

"எடுத் தொருவர்க் கொருவர்" என்னும், இப்பாட்டின் மூல வைப்பகம் வள்ளுவம் தானே!

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்" 166

என்னும் வள்ளுவ வாய்மொழி அல்லவோ, கம்பர் தம் வாய்மொழியாய்த் துள்ளிவந்து நிற்கிறது! (கம்பர். பால. வேள்விப் படலம்; பாடல். 32) ஆதலால், புலமைச் செல்வர்களால் தள்ளப்பட்ட நூல் அன்று வள்ளுவம். தலைமேல் தாங்கப் பட்ட நூலேயாம். இதனை மேலே மேலும் சொல்ல நேரும்.

* * * * *

அறிஞர் அறவாணர், தம் குறிப்பாகச் சில சொல்கிறார். "திருவள்ளுவ ஆய்தலில் கிடைத்த புதிய செய்திகள் வழங்கப் பெற்றுள்ளன. சமூக இயல் உலக வரலாறு ஆகிய அணுகு முறையின் அடிப்படைகளால் இப்புதியன கிடைத்துள்ளன. இவை தொடர்ந்த விவாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உரியவை" என்கிறார்.

இக்கால இயலொடும் உலகொடும் வாழ்வியற்குத் தகவுற அமையுமாற்றை வினாவியும் விடை கண்டும் தெளிவு படுத்தும் நெறி நன்னெறியேயாம்.

அடுத்து அறிஞர் அறவாணர் கூறும் கருத்து;

**"திருவள்ளுவர் தம்கால அரசியல் சமூக பொருளியல் சூழலில் என்ன கருதியிருப்பார் எனும் நோக்கிலேயே உரைவரையப் பெற்றுள்ளது. இக்காலப் பார்வையில் உரை காணும் முயற்சி மேற்கொள்ளப்பெறவில்லை" என்பது.**

அறவாணர் தாம் வரைகின்ற உரையின் நிலை குறித்துக் கூறுவது இது. வள்ளுவர் தம் கால அரசியல் - சமூக - பொருளியல் சூழலில் என்னகருதியிருப்பார் என்னும்

நோக்கில் ஆய்தல் முறையே. ஆனால் அச் சூழல்களில் இருந்து தாண்டி மேனோக்கி நோக்குதலும், எதிரதாம் காலத்து எண்ணுவார் எண்ணங்களுக்கெல்லாம் வித்தாக இருந்து விழுமிய விளைவுகளை யெல்லாம் காலம் காலமாகத் தந்து கொண்டிருக்கும் கருவூலமாகச் செய்வதும் நூலாக்கிய மேதக்க புலமையர் நிலை அல்லவோ! அதனைப் புறம் தள்ளிய அவர் காலச் சூழல் முடிவே முடிவாகுமா?

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்"

"கொள்வாரும் இல்லை கொடுப்பாரும் இல்லை"

என்று கம்பர் உரைத்தமை கால அரசியல் சமுதாய நிலையில் கண்டனவா? கடந்தனவா?

"வரித்த வேதியின் ஆசைக் கரையின்மையைக் கண்டு இராமன் சிரித்த செய்கையைக்" கூறிய கம்பர் காட்டிய காட்சி என்ன? கருத்து என்ன? இவை மேம்பட்ட கால நோக்கு அல்லவோ!

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவர்' (தொல் 1025.)

கால - இட - அரச - சமூக - அளவில் அமைந்து நிற்பவரா? ஆதலால், வள்ளுவர் பார்வையை நாம் வரம்பிட்டுக் கொண்டு உரைத்தல் சாலாதாம்!

மூவகைக் காலத்துக்கும் பொருந்துவதாகவும், குற்ற மற்றதாகவும் அமையும் நெறிப்படி அமைந்ததாகவும் உள்ள அறிவர் நூலொன்றனைத் தம் கால - சூழல் - கருத்தொடும் காணாது ஒதுக்கிச் செல்லும் சுருக்கம் தேவையற்றது!

உரையின் மாண்பு எது?

நூலாசிரியன் உளம் உணர்ந்து அவனே உரை கண்டான் போல உரைப்பதே மாண்புரையாம்!

உரைப்பார் உரை, நூல் தெளிவு - விளக்கம் என்ப வற்றுக்கே அன்றித் தம் கருத்தை நூலாசிரியர் மேல் திணித் தற்கு அன்றாம்!

மநுநூலைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு திருக்குறளுக்கு உரைவரைதல் எத்தகு பிழையானதோ அத்தகு பிழையானதே, வள்ளுவத்திற்கு மாறாக நலித்தும் வலித்தும் திருத்தியும் பொருத்தியும் காட்டும் உரையும் என்க. அதனை அறவாணர் செய்திலேன் என்பது பாராட்டுக்கு உரியதாம்.

* * * * *

அடுத்தே,

"சில குறட்பாக்கள் வேறு வேறு அதிகாரங்களிலும் கொள்ளப் பெற்றுள்ளன" எனச் சுட்டுகிறார் அறவாணர். (17)

வள்ளுவர் ஓர் அதிகாரக் குறள்கள் பத்து என வரம்பு செய்து கொண்டார். அதனால் அவ்வதிகாரத்து அளவின் மிக்க கருத்து உளதாக அவர் கருதுவன வற்றை இன்னோர் அதிகாரத்தில் உவமைப் படுத்தியோ இணைப்புறுத்தியோ கூறுகிறார். அதிகாரப் பதின்ம எல்லைக்குச் செய்திகள் குன்றியிருப்பின், எதிர்மறையிலோ அணிவகையிலோ வேறுவகை உத்தியிலோ கூறி நிறைவு செய்கிறார்.

நட்பு அதிகாரத்திலே,

"நவில் தொறும் நூல்நயம் போலும்"

என்பதும் (783),

புணர்ச்சி மகிழ்தலில்,

"அறிதோ றறியாமை கண்டற்றால்"

என்பதும் (1110),

இதே புணர்ச்சி மகிழ்தலில்,

"பிணிக்கு மருந்து பிறமன்"

*என்பதும் (1102),*

"தம் இல் இருந்து தமது பாத் துண்டற்றால்" (1107)

*என்பதும் அணிநயம் பட வேறு அதிகாரப் பொருள் கூறுவதும், வலியறிதல் (475, 476) காலமறிதல் (481, 486, 490) இடனறிதல் (495, 496, 500) என்பவற்றில் வரும் சொல்லாமல் சொல்லுதல் (நுவலாநுவற்சி, பிறிதுமொழிதல்) உவமை என்பனவும் வரம்பு நிலைப்படுத்தக்கொண்ட வைப்பு முறையேயாம்.*

*ஒழுக்க முடைமையைக் கூறும் போதே, அழுக் காறாமையில் தாம் கூறப்போகும் கருத்துக்கு எழுப்பப் படும் வினாவுக்கு விடை தருவார் போல,*

"அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு" 134

*என்று கூறுவதை முற்படப் புரிந்து கொண்டு படித் தார்க்கு,*

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" 169

*என்பதன்கண் (நினைக்கப்பட்டால்) சிக்கல் உண்டா?*

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

*என்பதற்கு மழையைப் போல் நலம் செய்பவள் என்றால் இவ்வுவமை பகுத்தறிவுப் பார்வையது, பழம் புலமையாளர் கற்புடையாள் பெய்யெனச் சொன்னால் மழை பெய்யும் என்பதையே பல்கால் வலியுறுத்திப் பாடியுள்ளனர்; இக்காலப் பெரியாரியச் சிந்தனையொடு வள்ளுவத்தைப் பார்த்தல் ஆகாது*

என்பவர், "வள்ளுவரே இவ்வுவமையால் தான் சொல்கிறார்' என்பதை எடுத்துக்காட்டும் போதாவது ஒப்ப வேண்டும் அல்லவோ! அவர் காலப் பார்வை அஃதன்று என்று கூறி, அவர் பார்வையைப் புறந்தள்ளல் அறமாகாதே!

வள்ளுவர் எங்கே பெய்யெனப் பெய்யும் மழையை உவமையாகக் காட்டுகிறார்? என்பார் காண்க:

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி" 1192

என்பது அது.

வானம் பயந்து அற்றால் = மழை பொழிந்தது போன்றது. தலைவன் தலைவியர் ஒரொத்த உளக்காதலர் என்பது "வீழ்வார்க்கு வீழ்வார்" வீழ்தல் = விரும்புதல்.

வள்ளுவரால் சுட்டப்படும் "வாழ்வார் எவர்?" எனின், அவர் தரும் மறுமொழி,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' 1033

என்பது.

* * * * *

"அதிகாரப் பெயர் வேற்றுமையும் ஓரிரண்டு இடம் பெற்றுள்ளன" என்னும் முனைவர் காட்டும் சான்று: மக்கட் பேறு என்பது புதல்வரைப் பெறுதல் ஆயதைச் சுட்டுகிறார்.

பரிமேலழகர், நூலாசிரியர் நோக்குக்கும் முதல் உரையாசிரியர் மணக்குடவர் ஏட்டுக்கும் மாறாகத் தாமே தம் வேத நெறிப் படுத்தலுக்காக மாற்றி வைத்த அதிகாரப் பெயர் 'புதல்வரைப் பெறுதல்' என்பதாம்.

ஆறாம் அதிகாரம் வாழ்க்கைத் துணைநலம். அதன் நிறைவுக்குறள்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்பது.

ஏழாம் அதிகாரம்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

எனத் தொடங்குகிறது.

'மக்கட் பேறு' என நிறைந்து, 'மக்கட் பேறு' எனத் தொடரும் தொடர்ச்சிக்கு அப்பெயரை அன்றி எப்பெயர் இருக்கக் கூடும்?

திருக்குறளில் அவ்வதிகாரத்தில் மட்டுமின்றி நூலி லேயே இடம் பெறாத 'புதல்வர்' என்னும் சொல்லைக் கொண்டு 'புதல்வரைப் பெறுதல்' என அதிகாரப் பெயர் வைக்கிறார் பரிமேலழகர்.

புதல்வர் என்பதும் பழஞ்சொல்லே; சங்கச் சான் றோர் வழங்கிய சொல்லே. பரிமேலழகர் உட்கிடை போல அச் சொல் 'புதல்வன்' என ஆண்பாற் பெயராகக் கொள்ளப் பட வேண்டும் எனின், 'புதல்வற் பேறு', 'புதல்வற் பெறுதல்' என்றே இருக்க வேண்டும். மக்கள் என்பது எப்படி இரு பாலும் குறிக்கும் பெயரோ அப்படியே புதல்வர் என்பதும் இருபாலும் குறிக்கும் பெயரேயாகும். ஆதலால் பெயர் மாற்றம் செய்தும் தம் கருத்துக்கு உரிய வகையில் அமைத்தார் அல்லர். அவர் ஏன் அதிகாரப் பெயரை மாற்றினார்?

"அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் (பிராமணர், சத்திரியர், வைசியர்) இயல்பாக இறுக்கப்படூஉம் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன்

வேள்வியானும் தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின் அக்கடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல்' என்கிறார். அவ்வதிகாரத் தொடக்கத்தில் புதல்வரைப் பெறுதல் எனத் தலைப்புத் தந்த அவரே 'நன்மக்களைப் பெறுதல்' என்கிறார் அல்லரோ!

மக்கட்பேறு என்னும் பெயர் மணக்குடவர் உரை யில் உண்டோ எனின் காண்போம்.

திருக்குறளுக்கு உரைகண்டாருள் ஒருவர் நாகை. சொ. தண்டபாணிப்பிள்ளை என்பார். அவர் உரை 1933இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியாக வெளி வந்தது. அறத்துப் பாலுக்கு மட்டுமே அமைந்த உரை இது.

அதிகாரப்பெயரை 'மக்கட் பேறு' என்றே கொள் கிறார் அவர். அவ்வதிகாரத் தலைப்பில், இவ்வதிகாரம் புதல்வரைப் பெறுதல் என வழங்கு மாலோ எனின் (அதுவும் மக்கட் பேறெனவே பொருள் படுதலன்றிப் பிறிதில்லை ஆதலின்) ஒவ்வுமென்க.

அற்றேல், பயிற்சியில் உள்ள தொடரை ஒழித்து மற்றது கொண்டது என்னையோ எனின், வரும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்யப்பட்டதென மேற்குறித்த குறளில் மக்கட் பேறென்னும் அதிகாரப் பெயரும் பயிற்சியில் உள்ளது ஒன்றே என்பது மணக்குடவர் உரைப்பிரதியால் பெறப்படு கின்றமையானும் கொண்டாம் என்பது" என்கிறார்.

மக்கட் பேறு என்பது வள்ளுவ நூலமைதியின் படியே மணக்குடவரால் கொள்ளப்பட்டமைக்கு அவர் ஏட்டுச் சுவடியே சான்றாதலை இதனால் அறியலாம்.

96 ஆம் அதிகாரம் மணக்குடவர் உரையில் 'குடி' என்பது. பரிமேலழகர் உரையில் அது 'குடிமை' ஆகிறது.

119 ஆம் அதிகாரம் மணக்குடவர் உரையில் 'பசப் புறுதல்' என்பது. பரிமேலழகர் உரையில் அது, 'பசப்புறு பருவரல்' ஆகிறது.

வேறு மாற்றம் எதுவும் அதிகாரப் பெயரில் இல்லை.

வள்ளுவரே அதிகாரப் பெயரீடு செய்யா திருப்பின் பலப்பல அதிகாரப் பெயர்கள் மாற்றம் பெற்றிருக்கும் என்பதும், வள்ளுவர் இயற்பாகுபாடு செய்யாமையை அவ்வியல் பாகுபாட்டில் உரையாளர் கொள்ளும் அமைப்பு களால் அறிய முடியும் என்பதும் விளக்கமாம்.

* * * * *

"அறம் பொருள் இன்பம் என்னும் பால்வரிசை திருவள்ளுவருடையதே என்பது தெளிவு" என்கிறார் அறவாணர்.

திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் வரிசையைக் கொண்டாலும், அவ்வரிசையைத் தந்தவர் தொல்காப்பியர். வள்ளுவர் கால வழக்கில் அவ் வரிசைப்பாடே இருந்தமையால் புறநானூற்றிலும் காண இயல்கின்றது.

"அறம் முதலாகிய மும்முதற்பொருள்" என்று கூறி வைத்தவரும் "இன்பமும் பொருளும் அறமும்" என்று எதிர் நிரலில் கூறி வைத்தவரும் தொல்காப்பியரே என்பது முன்னரே கூறப்பட்டது. (தொல். 1366; 1014)

பழந்தமிழர் போற்றிய முப்பால் முறையை வள்ளு வர் போற்றிக் கொண்டார் என்பதை யன்றித் 'திருவள்ளுவ ருடையதே' என்பது பொருந்தாது.

அதிகாரப் பெயரீடும் வரிசையும் திருவள்ளுவரே செய்ததா என்று உறுதியாக முடிவு செய்ய முடியவில்லை என்கிறார். அதிகாரப் பெயர் திருவள்ளுவரே செய்தார் என்பதும், அவர் இயற்றி வைத்த முறைப்படியே குறள் களை உரையாளர் கொள்ளாமல் தத்தம் கருத்து வழியில் சென்றனர் என்பதும் தெளிவாகின்றன.

* * * * *

இந்நூலின் நோக்கம் வழக்கமான திருக்குறள் வரிசை முறையைப் போற்றுவதுடன் திருக்குறளைக் கருத்து அடிப்படையில் வழங்குவதும் ஆகும் என்கிறார். ஆற்றி லேயும் சேற்றிலேயும் நடையிடச் செய்யும் செயல் இது.

மூலத்தின் இடத்தை மாற்றாமல், அவ்விடம் பற் றியோ பொருள் பற்றியோ ஒவ்வாமை கூறவும் ஆய்வர்க்கு இடமுண்டு. ஆனால் மூலத்தின் இடத்தை மாற்றி மாற்றித் தத்தம் நோக்கும் போக்கும் குறியாகிச் செயல்படின் முழுதுறு மூலக்கேடே செய்தவர் அவர் ஆவார்.

திருவள்ளுவர்,

"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்"

என்றது முதலுக்கு மட்டுமன்று மூலத்திற்குமேயாம்! ஆவணச் செய்தியைத் தந்தவர் தம் காலத்தில் தாமே மாற்றி எழுத நேர்தலும் உண்டு. அவர் எழுதி வைத்துள்ள ஆவணம் அது! அவர் காலத்தில் வேறோர் சூழல் கருதி அவரே மாற்றி எழுத நேர்தல் உண்டு. ஆனால் எழுதி வைத்துப் பன்னூறு பதிப்புக் கண்ட செவ்வியல் சான்றாக இலங்கும் ஒப்பிலா ஒரு நூலைத் தானும் **'அச் செவ்வியல் கெடுப்பேம்'** என்பது எவர்க்கும் இல்லா உரிமைக்கேடாம்.

அகர முதல என்னும் முதற்குறள்

அறவாணர் பார்வையில் 1041 ஆம் குறளாக இடம் பெறுகின்றது.

ஒவ்வொருவரும் இவ்வாறு மூலஇடமாற்றம் புரிந்தால், எவர் எக்குறளை எவ்வெண் இட்டுப் பதிப்பார்? படிப்பார்?

பழைய உரைப்பதிப்புகள் அனைத்தும் விரும்பியோ, விரும்பாமலோ, 'ஓரொழுங்கு முறை கட்டாயம் வேண்டும் என்பதால் தானே, பரிமேலழகரை மறுத்து உரை கண்டாரும் அவர் எண் வரிசையை மாற்றாமல் போற்றினர் என்பதைக் குறள்மூல எண் மாற்ற நினைவார் எண்ணுதல் வேண்டும்.

இவ்வனைத்தும் அறவாணர் வள்ளுவத்தின் முகவுரை கொண்டு எழுதப்பட்டவையாம். நூலில் இச் செய்திகளே முற்பகுதியில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

* * * * *

நம் அறிஞர் அறவாணர் களப்பிரர் காலம் அமைதிக் காலம் என்றும், அவ்வமைதியே அக்காலத்து அறநூல்கள் பெருக்கமாக வெளிப்பட அடிப்படையாக இருந்தது என்றும் கூறுகிறார். களப்பிரர் காலம் அமைதிக் காலம் என்று அறுதியிடக் கிடைத்த சான்று அரிதின் முயன்று தேடியும் கிட்டாமையால் இக்கருத்தை ஏற்கவோ மறுக்கவோ இயன்றிலது (23), ஆனால் பின்னே (67), எங்கே அறநூல்கள் மிகுதியாகப் படைக்கப் பெற்றனவோ அங்கே அநீதிகள் மிகுதியாக இருக்கும்" என்று இவரே கூறுவது இவர் முடிவை இவரே முரண் படுத்துவதாகத் தோன்றுகின்றது. இனிக் 'களப்பிரர்' வேறானவர், 'களப்பாளர்' வேறானவர்; களப்பிரர் காலக்கேடு கணக்

கற்றவை என்பவை எல்லாம் எண்ணாமல் கூறமுடியுமா? தனியாய்வுச் செய்தி அது!

* * * * *

அறநூல்களைத் தமிழகம் பின்பற்ற வில்லை.

"தமிழர் அற இலக்கியம் இரசனைநூல் அளவே அமைந்தது"

"இனத்திற்கு ஊறு செய்யும் தொலைநோக்கு இல்லாப் பார்வை"

"உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது"

"தமிழர் கட்டுப்பாடு இன்மைக்குப் பெயர் போனவர்'

என்பனவெல்லாம் அறவாணர் வழக்கமாக உரைப்பனவும் எழுதுவனவுமே! இவற்றை மாற்றியமைக்கத் தமிழர் கிளர்தல் வெறி நீங்கி நெறி தாங்கி வாழ்தல் இன்றியமையாதனவே! அதற்கு வழிகாட்டியாக விளங்கும் நூலைத் தட மாற்ற முயலலாமா?

"ஆரியமும் தமிழும், தனித்தனி மனிதன் தன் சுய வீடுபேற்றுக்காகக் காட்டுக்குச் செல்வதையும் தவம் மேற் கொள்வதையும் முதன்மைப் படுத்தின" என்பதில் மேலும் அறவாணர்க்கு

ஆழிய பார்வை வேண்டும்.

தமிழக நெறித் துறவு இல்லறத் தொடர்புடையது; தலைவன் தலைவியர் வீட்டில் இருந்து கொண்டே அவா வறுத்து, சிறந்தது பயிற்றிக் கொண்டிருக்கும் துறவு நிலையது. அரிதாக மணவாத் துறவர் இருந்தமையால் இல்வாழ்வான் பேணத்தக்க அயலாருள் அவர் முதலிடம் பெற்றார் (42). **தமிழ் நெறி கொள்ளாது அயல்நெறி பற்றிக் கொண்டாரைத் தமிழ் நெறியார் எனல் தகாதாம்.**

* * * * *

திருவள்ளுவர் 1800 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்தவர் என்பது ஆய்வறிஞர் அறவாணர் குறிப்பு (49) 1800 ஆண்டுகளுக்கு முன்பு என்றால் எவ்வளவு முன்பும் கொள்ளலாம். ஆனால் ஏதோ ஓராற்றான் அந்நாள் அறிஞர்களால் முடிவு செய்யப்பட்ட கி.மு. 31 என்பதைத் தானும் அறவாணர் ஏற்றிலர் என்பது புலப்படுகின்றது. ஏனெனில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்றிலர் அல்லவா!

முதற்குறளிலேயே அகரம், ஆதி, பகவன், உலகு என்று நான்கு வட சொற்கள் உண்டு என்று கண்ட அறிஞர் ஒருவர் திருவள்ளுவர் காலத்தைக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கே கொண்டுவந்தமை நாடறிந்த செய்தி!

ஆனால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று பெரிதும் கணிக்கப்பட்ட சிலப்பதிகார மணிமேகலை ஆகிய காவியங்களின் ஆட்சியில் திருக்குறளும், திரு வள்ளுவர்க்குரிய பொய்யில் புலவர் என்னும் பெயரும் இருப்பதால் அக்காலத்திற்கு முற்பட்டது திருக்குறள் என்றனர்.

ஏன்? திருக்குறள் ஆட்சியும் திருவள்ளுவர் பெயரும் தெளிவாகச் சுட்டப்பட்டிருப்பதால்! அவ்வாறே புறநானூற்றுப் பாடலில் திருக்குறள் பாடலும் திருக்குறளின் பெயர்களுள் தலைநின்றதாகிய அறம் என்னும் பெயரும் இடம் பெற்றிருப்பது காணின், அப் புறப் பாடலுக்கு முற்பட்டதாகத் திருக்குறள் இருக்குமா? பிற்பட்டதாக இருக்குமா?

சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடிய புறப்பாடலில் (34),

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ!"

என்று விளித்துத் தொடர்கிறார்.

இப் பாடலில், "செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென" எனவரும் தொடர் எதனைச் சார்ந்தது என்று வினாவினால் திருக்குறள் கற்றார்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் குறளைச் சுட்டத் தவறார். 'அறம்' என்னும் பெயருடைய நூல் எது எனின் அவ்வாறே திருக்குறள் எனவும் தவறார். ஆதலால், திருவள்ளுவர் கிள்ளி வளவன் காலத்திற்கு முற்பட்டவர் அல்லரோ! கிள்ளிவளவன் சிறுகுடிகிழான் பண்ணனைப் பாடியவன். கோவூர் கிழாரும் பண்ணனைப்பாடியவர். கோவூர்கிழார், நலங்கிள்ளி நெடுங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆகியோரையும் பாடியவர். இம் மன்னர்களின் காலத்திற்கும் ஆலத்தூர் கிழார் கோவூர்கிழார் ஆகியோர் காலத்து வாழ்ந்த புலவர்களுக்கும் முற்பட வாழ்ந்தவர் திருவள்ளுவர் என்பது தெளிவாம்.

"புறநானூற்றில் உள்ள ஒரு பாடலைக் காண்போம். அப்பாடல்,

"உண்டால் அம்ம இவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவிலர்,
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்

அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

என்பது. இதனைப் பாடியவன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டிய வேந்தன்.

இப்பாடலின் முதலடியும் இறுதியும் இயைந்து,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்"

என்னும் குறளின் விரிவாக்கமாக இருத்தலை நோக்குக. இக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதிக்கு முந்தியவர் அல்லரோ வள்ளுவர் (புறம் - 182).

தொகை நூல்களுள் எட்டாவதாக எண்ணப்பட்டது புறநானூறு.

முதலாவதாக எண்ணப்பட்டது நற்றிணை.

அதன் முதற்பாட்டு கபிலர் பாடியது.

அப் பாடலில், "நீரின் றமையா உலகம் போல" என்று வரும் தொடர் நினைவுபடுத்துவது என்ன?

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்னும் தொடர் 355 ஆம் பாடலில் வருகின்றது. இத் தொடர் நினைவூட்டும் குறள், குறள் கற்றார்க்குச் சொல்லவோ வேண்டும்? முன்னது,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு" (20)

என்னும் குறளையும்,

பின்னது,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (580)

என்னும் குறளையும் முன்வைப்பன அல்லவா! இந் நற்றிணைப் பாடலைப் பாடியவர் பெயர் தானும் தெரிந்திலது. அவர் காலத்திற்கு முந்தையிருந்து குறள் தந்தவர் வள்ளுவர் என்பது மட்டும் தெளிவாகின்றது. ஆனால் கபிலர் பாடலில் இடம் பெற்றது என்ன சொல்கிறது. அவர் காலத்துக்கு முற்பட்டதுடன் பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் பாரிவேள் முதலோர் காலத்திற்கு முற்பட்டவர் என்பதைப் புலப்படுத்த வில்லையா? இன்னவற்றால் தெளிவதென்ன?

தொல்காப்பியர்க்குப் பிற்படவும், சங்கச் சான்றோர் பற்பலர்க்கு முற்படவும் வாழ்ந்தவர் வள்ளுவர் என்பது தெளிவாம்.

* * * * *

**"காமத்துப்பாலில் இடம் பெற்ற கணிசமான அதிகாரங்கள் உலக மக்கள் அனைவருக்கும் பேரளவு பொருந்தாமல் இருக்கலாம்" என்கிறார் பேராசிரியர் (50)**

நாடக வழக்காம் புனைந்துரை வழக்கு அஃதாதலால் அப்படியே நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தி வாராதது தான். இல்லறம் நடைமுறை வாழ்க்கை. காமத்துப்பால் நூன் முறைப்பட்ட நாடக வழக்கு. அதனாலேயே தொல்காப்பியர் வகுத்தவாறு கூற்று வகையில் கூறினார்.

அன்றியும் அகத்திணை அமைதியின்படி அதன் உரிப்பொருள் ஆகிய புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் ஐந்திற்கும், ஒவ்வொன்றுக்கு ஐந்து அதி காரங்களாய் இருபத்து ஐந்து அதிகாரங்களைப் பாடினார்.

உலகியல் வழக்கு நாடக வழக்கு ஆகிய இருவகை வழக்கு களையும் போற்றி நூலாக்குவார்க்கு நெறிமுறையாக்கப் பட்டது காமத்துப்பாலாம். ஆதலால், உலகியல் வாழ் வொடு பெரிதும் பொருந்தி வாராமல் நிற்றல் இயல்பே! **வாழ்க்கை என்பது நடிப்பு ஆகாதே!**

நாட்டு நடப்பையே நாடக மேடையில் ஏற்றி நடித்த வரும் தம் நடிப்பு முடிந்ததும் நாடக வேடத்தைக் களைந்து விட்டு, நாடக நடிப்பு உரையாடல் ஆகியவற்றை விட்டு விட்டுத்தானே வீதிக்கும் வீட்டுக்கும் வருகிறார். அப்படியே வந்தால் அவர் வேடிக்கைப் பொருளாகி விடுவார் அல்லரோ!

* * * * *

**"இறைமாட்சி மக்கட்பேறு ஆகிய அதிகாரக் கருத்துகள் குடியாட்சியமைப்பு, குடும்பக் கட்டுப்பாடு இவற்றுக்குப் பொருந்தாதனபோல் தோன்றலாம்"** என்கிறார் அறிஞர்.

வள்ளுவர் நாளில் இருந்த ஆட்சி கோனாட்சி. நாம் இன்று கொண்டிருக்கும் ஆட்சி குடியாட்சி. இரண்டும் அரசுகளே - ஆட்சிகளே!

அங்கே அரசர் தலைமையர்! இங்கே முதல்வர் தலைமையர். அவ்வரசர்க்கு எவ்வெத்தன்மைகள் இருத் தல் வேண்டும் என்றாரோ அவ்வத் தன்மைகள் முதல் வர்க்கும் வேண்டும்! அரசர், முதல்வர் என்னும் பெயர் மாற்றமே அன்றித் தன்மைகள் மாற்றம் இல்லையே! மாற்றம் இருத்தலும் கூடாதே! இறைமாட்சியில் அரசின் ஆளுமைப் பண்புகள் சொல்லப்பட்டனவே அல்லாமல் குடை கொடி வீற்றிருக்கை கட்டட அமைப்பு விழாக்கள் விருந்துகள்

தோற்றப் பொலிவுகள் என்பனவா கூறப்பட்டன? மாறா அகவியலைக் காட்டுவதுதானே வள்ளுவம்.

குடியரசுக்கு, 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்" வேண்டாவா? ஆளும் தலைமையர்க்கு அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் வேண்டாவா?

அவர்க்கு, அயராமை கல்வி துணிவு வேண்டாவா?

அவர்க்கு, அறமும் மானமும் வேண்டாவா?

இயற்றல் ஈட்டல் காத்தல் வகுத்தல் என்பவை இல்லாமல் அரசு இயலுமா?

. காட்சிக்கு எளிமை கடுஞ்சொல் இன்மை ஆள் வோர்க்குப் பெருமை சேர்ப்பவைதாமே!

இனியவை கூறல் ஈதல் இன்றியமையாதவை என்பது கண்கூடுதானே!

முறைமை பேணா அரசுக்கு இறைமாட்சி உண்டா?

அலைப்புக்கு ஆட்பட்டோர் அவலச் சொல்லைக் கேட்கும் இயல்பு வேண்டும்தானே!

கொடை அருள் முறைமை குடிநலம் காத்தல் என்பவை ஆட்சிக்குப் பெருமை சேர்ப்பவை என்பதில் என்ன தடை?

வேந்தன் அரசன் மன்னன் ஆள்பவன் என்னும் ஆட்பெயர், அவர் ஆளுமை வழிப்பட்ட பெயர்கள் தாமே! இதில் என்ன சிக்கல்? பொருந்தாமை என்பது பொருந்தாமை ஆகின்றதே!

நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால், யானுயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"

என்பதொரு பாட்டு (புறம்.186)

இதற்கு உரை :

"நெல்லும் உயிராகாது; நீரும் உயிராகாது; ஆள்பவனை உயிராகக் கொண்டது விரிவமைந்த நாடு; அதனால், யானே நாட்டின் உயிர் என்பதை அறிந்து கொள்ளுதல் வெல்லும் படையுடைய ஆள்வோர் கடமையாம்" என்பது.

இப் பாடலையும் உரையையும் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தம்முன் இருந்தோரிடம் படிக்கிறார். "இதுவே மக்கள் பதிப்பு", "மக்கள் உரை" இப் பாடலையும் இப் பொருளையும் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு ஆட்சியில் இருக்கும் அனைவருக்கும் விடுக்க வேண்டும் என்கிறார்.

பாடலில் உள்ள மன்னனும் வேந்தனும், 'ஆள்வோர்' ஆகின்றார்! இது பொருந்தாமை ஆகுமா? உரைகாண்பார் கடமை பொருந்தச் செய்வதுதானே!

இனி மக்கட்பேறு பற்றிக் காணலாம்.

* * * * *

அறிவறிந்த மக்களைப் பெறுவது போல் வேறொரு பேறுஇல்லை. பழியில்லா மக்களைப் பெற்றால் தீயவை இல்லை.

பெற்றோர்தம் பெருமை மிக்கபொருள் மக்களே; அம் மக்களுக்கு வேண்டும் பொருள் அவர்கள் முயற்சியால் கிட்டும்.

மக்கள் கையில் பட்ட உணவு அமிழ்து
மக்கள் தம்மைத் தழுவுதல் உடலுக்கு இன்பம்; அவர்கள்
சொல்லைக் கேட்டல் செவிக்கு இன்பம்
குழலினும் யாழினும் இனியது குழந்தைகளின் மழலை.

தந்தை மக்களுக்குச் செய்யும் நற்செயல் அவர்களை
அறிவர் அவையில் இருக்கச் செய்தல்
தம்மினும் தம்மக்கள் அறிவராக இருப்பது உலகுக்கு
வாய்த்த உயரிய இன்பம்.

பெற்ற பொழுதிலும் தாய்க்குப் பேருவகையாவது,
தம் மக்கள் மேலோர் பாராட்டுக்கு உரியவராகும் போது.
மக்கள் தம் பெற்றோர்க்குச் செய்யும் நன்றிக்கடன்
இவர்களைப் பெற்றவர் பேறுபெற்றவர் எனப்பிறரால் பாராட்டுதல்

*அதிகாரத் தலைப்பு மக்கட்பேறு என்பதைப் போற்றி எழுதினால் 'மகன்' 'மகள்' சிக்கல் உண்டா?*

*"இக் காலப் பார்வையில் உரைகாணும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை" என்னும் (16) பொருந்தா முடிவு வகையால் ஏற்பட்ட பொருந்தாமை இதுவாம்.*

* * * * *

*"பிறன் இல் விழையாமை வள்ளுவரே வகுத்தது; ஏன் இது ஓதப்பட்டது" என்பது வினவத் தக்கது என்கிறார் ஆய்வறிஞர்.*

"ஒழுக்கம் விழுப்பம்"

"ஒழுக்க முடைமை குடிமை"

"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்"

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை"

*என்று ஒழுக்கத்தின் மேம்பாட்டை உரைத்த திருவள்ளுவர்,*

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்"

என்ற அளவில் அமையாமல் "தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என அதன் எதிரிடையைச் சுட்டினார். அத் தீயொழுக்கத்தில் எல்லாம் தலைப்பட்டது 'பிறன் மனை நயத்தல்' ஆதலால், அதனை விலக்கப் பிறன்மனை நயவாமை என ஒழுக்கமுடைமையை அடுத்தே (அதி. 14, 15) கூறினார்.

அத்திறத்தை - பிறன்மனை நயவாமைத் திறத்தை -எப்படி எவரிடம் பெறுவது என்றால், கட்டமை ஒழுக்கத்துக் காரிகையர் தம்மை நோக்கியேனும் கற்றுக் கொள் என்பாராய்,

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு" என்றார். (974)

காதற்பரத்தை, சேரிப்பரத்தை, இற்பரத்தை என வழக்கிருந்த நாளிலே 'பரத்த' என ஆடவனை விளித்துச் சுட்டிக் காட்டிய ஒரே ஒருவர் திருவள்ளுவரே. (1311)

ஒழுக்கம் இருபாலும் காக்கப்பட வேண்டும். இல்லாக்கால் ஒருபாற்கேடு என்பது இல்லதாய், இருபாற் கேடாக அமைதல் உறுதியே. கெட்டாள் ஒருத்தி என்றால், கெடுத்தான் ஒருவன் என்பது இல்லாமல் தீராதே. ஆதலால், காதற் பொருளை இருபாற் சமன் பொருளாக எடுத்துக் காட்டினார் திருவள்ளுவர். (1196)

பெண்டிர்க்குக் 'கற்பு' என்னும் திண்மையை வலியுறுத்தியது போல, ஆடவர்க்கு 'நிறை' என்பதோர் நிலை நிறுத்தற் பண்பை வலியுறுத்தினார். எப்பாலும் வள்ளுவம் 'சமன்மைச் சால்பு' காத்தலில் கண்ணாக இருப்பது என்பதை வெளிப்படுத்துவனவற்றுள் 'பிறன் மனை நயவாமை' தலைப் பட்டதாம்.

'அறத்தாறு இது' என்பவர் அதன் மறுதலையாம் 'புறத்தாறு இது' என்று சுட்டிக் காட்டினார் என்க.

* * * * *

**"திருவள்ளுவர் பக்தி இயக்கத்தவரால் போற்றப் படவில்லை"** என்கிறார் ஆய்வர். பக்தி இயக்கத்தவர் என்பார் மூவர் முதலிகள், மணிவாசகர், ஆழ்வார்கள், சேக்கிழார், திருவிசைப்பா முதலன படைத்தோர்.

திருவள்ளுவர் 'அறம்' பாடியவர். பக்தி இயக்கத் தவர் 'இறை' பாடியவர். காப்பியப் புலவர்கள் போலவோ, அறநெறிநூல் இயற்றுவார் போலவோ அவர்கள் திரு வள்ளுவப் பயனை அள்ளிக் கொள்ளல் கட்டாயம் இல்லை! இவ்வுலக இனிய வாழ்வு அல்லது வையத்து வாழ்வாங்கு வாழ்தற்கு வழிகாட்டுவது அறநூல் நோக்கு! இம்மையில் மறுமையின்பம் நோக்கியே வாழ்தல் பிறவிநோக்கு என்பது பக்தி நோக்கக் கடைப்பிடி. ஆதலால், பக்தி இயக்கத்தார்க்கு வள்ளுவம் கட்டாயத் தேவைப் பொருள் அன்று. ஆயினும் பக்தி இயக்கத்தவரும் சமய அழுத்தம் உடையவரும் திருக்குறளைப் புறந்தள்ளினர் என்பதற்குச் சான்று இல்லை! **அப்படிப் புறம் தள்ளிய ஓரிருவர் அறியக் கூடினும் அவர்கள் தாமும் திருக்குறளைப் புறம் தள்ளாமை மட்டுமன்றிப் போற்றிக் கொள்ளவும் செய்தனர்.**

சைவ இலக்கிய வரலாறு என்பதொருநூல் உரை வேந்தர் ஔவை. சு.து. அவர்களால் எழுதப்பட்டது. அதில் மூவர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ள திருக்குறள் ஆட்சி களைச் சுட்டுகிறார்:

"சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று"

என்னும் திருக்குறள், திருவோமாம் புலியூர்ப் பதிகத்தில்,

"சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
தன்மையார்"

என ஞானசம்பந்தரால் ஆளப்படுதலைச் சுட்டுகிறார் (95)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் குறள், "ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்" என நாவுக்கரசரால் ஆளப்படுகிறது. இதன்கண் அகரமுதல் னகர இறுவாயாகிய எழுத்து அனைத்தையும் ஆனம் என வழங்கியது. திருநாவுக்கரசரது செஞ்சொற்றிறமாகும்" என்கிறார். மேலும்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்பது திருக்குறள். இதன் ஈற்றடியை வாங்கி,

"ஆரூரரைக் கையினால் தொழாஅ தொழிந்து
கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" என்பார்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

எனவரும் திருக்குறளை உளத்திற் கொண்டு,

"வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக"

என்பார்.

"இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"

என்பது திருக்குறள். திருநாவுக்கரசர்,

"நினைவார்க்கெலாம் ஊற்றுத்தண் டொப்பர்போல்
ஒற்றியூரரே"

என்றார்.

இவை போலும் பலதிருக்குறட் கருத்துக்களையும் கருத்துடைய சொற்றொடர்களையும் இடைஇடையே

தொகுத்துப் பாடும் நம் திருநாவுக்கரசர் அத்திருக்குறட் காலத்தை அடுத்து வந்த சங்க இலக்கியக் கருத்துக் களையும் கவினுடைய சொற்களையும் கையாளுதலில் பின்னிடுகின்றார் இல்லை" என்கிறார் (169-170)

நம்பியாரூரர் ஆளும் திருக்குறள் ஆட்சிகளையும் ஔவை சுட்டுகிறார்.

திருவள்ளுவனார், இறைவனைப் பொறிவாயில் ஐந்தவித்தான் என்று குறித்தாராக, நம்பியாரூரர் 'பொறி வாயிலிவ் வைந்தனையும் அவியப் பொருதுன் அடியேற் கும் சூழல் சொல்லே' என்றார்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி,
பகவன் முதற்றே உலகு' என்ற திருக்குறள்,

'அகர முதலின் எழுத்தாகி நின்றாய்
அடியேன் உய்யப்போவதோர் சூழல் சொல்லே'

என்றும்,

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

என்ற திருக்குறள்,

'ஓடுபுனற் கரையாம் இளமை உறங்கி
விழித்தாலொக்கும் இப்பிறவி'

என்றும் வரும் திருப்பாட்டுகளில் அமைந்துள்ளன" என்கிறார்.

மேலும் விரியாமல் சுருக்கம் கருதிப் பெரிய புராணம் ஒன்றனைச் சுட்டி அமைவோம்.

"பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய" புலமையர் சேக்கிழார் எனப் பாடப்பட்ட பெருமையர்.

இளமைப் பருவத்திலேயே திருக்குறள் தோய்வின ராக விளங்கினார் என்பது அவர் பற்றிய குறிப்புச் செய்தி.

அவர் 'பெரிய புராணம்' எனத் திருத்தொண்டர் புராணத்திற்குப் பெயரிட்டது எதனால்?

திருவள்ளுவர் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று பெரியார் இலக்கணம் கூறினார். செயற்கரிய செய்த சிவனடியார் செயல்களை நினைந்து அப்பெயரிட்டார் எனின், அதற்குச் சான்றென்ன என வினா எழும்!

அடியாருள் ஒருவர் இயற்பகை நாயனார். இல்லற வாழ்வினர்; இல்லறத்தார் கொடைச் சிறப்பு புறநானூற்றில் புகழப்படுகிறது. அஃது 'அரிவை தோள் அளவு அல்லது' எல்லாம் ஈயும் என்பது. இவரோ அரிவையையும் கொடை யாக வழங்கியவர்! வழங்கப் பெற்றவர் குரலாக வெளிப் பட்டது 'செயற்கரிய செய்தாய் போற்றி' என்பது. இத் தொடர் திருக்குறள் வழியது இல்லை எனலாமா?

திருவள்ளுவனார் என ஏட்டில் இருந்தும், 'திரு வள்ளுவ நாயனார்' ஆக்கிப் பதிப்பித்தவர் உண்டு. 'நாய னார்' என்று சிவனியர் சொன்னால் 'நயினார்' எனச் சமணர் கூறியதும் உண்டு. 'எம் ஓத்து' எனப் பல்கால் பதித்துரைத் தாரும் உண்டு. (ஓத்து = வேதம்)

" தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என நல்வழிப் பாடல் உண்டு

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - ஒள்ளிய சீர்த்

தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்"

என்று பாடியவர் - உமாபதி சிவாசாரியார் - உண்டு.

கடைசியாக ஒருவரைச் சுட்டுவோம். அவர் சுவாமி நாத தேசிகர். இலக்கணக் கொத்து ஆசிரியர்.

(திருக்கோவையாரை) "சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேள் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்து ஒன்றாக்குவர்" என வருந்து கிறார்.

திருக்கோவையாரொடு ஓரிருக்கையில் வைக்கக் கூடாதவை, இவையாம்! செம்மொழியாகத் தமிழ் ஆக்கப் பட்டும், ஆரியத்தொடு உடன் இருக்கையில் இருக்க அரசு ஒப்பவில்லை அல்லவா அதுபோல், தேசிகர் ஒப்பவில்லை.

(தொல்காப்பியம், திருக்குறள், இறையனாரகப் பொருள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல்) இருக்கவும், "நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை அலங்காரம் முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர்பொருளாக எண்ணி வாணாள் கழிப்பர். இவைகள் இருப்ப அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப் பாலை விரும்பாது வேறுபலவற்றை விரும்புவது போல அவரது இயற்கை என்க என்கிறார்.

*ஆதி சங்கரர், வியாகரணம் கற்றுக் கொண்டிருந்த ஒருவரை நோக்கி, நாமாவளி சொல்வதை விட்டுவிட்டு வியாகரண முதலிய ஓதுதல் பாழ்வேலை என்றாராம்! அவர்க்கு இளையவர் போலும் தேசிகர்! ஏன் இளையவர்? சைவநூல் களையாவது ஓதச் சொல்கிறாரே! சமய அழுத்த வெறியில் நின்ற சுவாமிநாத தேசிகரும் திருக்குறளையும் தொல் காப்பியத்தையும் தள்ளினார் அல்லர் என்பதை எண்ணலாம்!*

*இனி நாலாயிரப் பனுவல் மேல் நாட்டம் செலுத்தலாம்.*

*பெரியாழ்வார் திருமொழியில்,*

*உன்னைக் கண்டார்,*

"என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப் பெற்ற வயிறுடையாள்"

*என்னும் வார்த்தை என்பது எக்குறள் வழியது என்பது சொல்ல வேண்டுமா? (133)*

"*தார் வேந்தன்,*

கோல் நோக்கி வாழும் குடி போன்றிருந்தேனே"

*என்னும் இக் குலசேகரர் திருமொழி எக்குறள் வழியது என்பது தானே புலப்படுத்துமே!*

"அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே"

*இது குறளை நினைவூட்ட வில்லையா? (2690)*

*"இப், பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே, அம் மூன்றும் ஆராயில்தானே அறம்பொருள் இன்பமென்று"*

இச்சிறிய திருமடல் திருக்குறள் முப்பாலை அன்றி, அவ்வரிசைப் பாடலையும் நினைவூட்டுகிறதே.

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு"

என்னும் பெரிய திருமடல் சுட்டும் தென்னுரை வாசகம் திருக்குறள் அல்லவோ! திருமாலின் ஒரு பெயரே 'குறளப்பன்' (திருப்பதிசாரம்). 'மாண்குறள்' எனப் பெருமை ஒட்டுண்டு! "ஆலமர்வித்தின் அருங்குறள்" என்று கல்வியில் பெரியவர் காட்டிய இரட்டுறலும் உண்டு!

* * * * *

நிற்க: புதைக்கப்பட்ட புன்மை ஒன்றை நூல் முகப்பு இடை பிற்பால் என விடாமல் சுட்டுகிறார் அறவாணர்! அவ்வாறு காட்டுதலை அவர் எண்ணியிருக்கவும் கூடாது! பல்லோரால் பழிக்கப்பட்டும் ஒழிக்கப்பட்டும் போன ஒன்றை எடுத்துக் காட்டப் பிறந்த பிறவியர் அல்லாராகிய அவர் காட்டுதல் அறக் கொடுமை மட்டுமன்றி, ஐயுறவும் ஏற்படுத்து கின்றதாம்! கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வருத்தவே செய்கின்றது. அஃதென்ன?

திருக்குறள் ஓதுதல் செய்யக்கூடாத செயலாகக் கருதப் பட்டது. ஆண்டாள் திருப்பாவையில் "தீக்குறளைச் சென்றோதோம்" என்கிறார். தீக்குறள் என்பது திருக்குறளே. காஞ்சி சங்கராச்சாரியார் கூறியது இதனையே என்கிறார்.

கோதையார் பாடலையும் அவர் நோன்பு நோக்கையும் குறிக்கொண்டு பாடும் அமைவையும் ஓரளவாலேனும் உணர்வார்க்கு மாறு பொருள் தோன்ற இடமே இல்லை. முந்தைக் காஞ்சிச் சங்கரர் சொன்னார் என்றால் அதற்கு மறுமொழி யான்

கூற வேண்டாதே தொல்காப்பியப் பேராசிரியரே பிறரெவரும் உரைத்தற்கு இயலா நெறியிலே உரைத்தார்:

"நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாவது

ஆரியர் கூறும் தமிழ்" என்பது அது.

ஆதலால், சங்கரரைக் கொண்டு ஓட்டைபட்டுப் போன புடைப்பானை (பலூனை) மீண்டும் அறவாணர் ஊதிப் பருக்கவைக்கும் முயற்சி முற்றிலும் தேவையற்றது.

கோதையர் பாடிய பாவைப்பாடல் எத்தகு தூயது! நோன்புப் பொலிவுடையது! கட்டமை ஒழுக்கம் நிற் பிப்பது! 'விலாப்புடைக்க உண்டு' விரதம் இருக்கிறேன் என்பதா அது? பாட்டு வருமாறு;

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்; நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றோ தோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்"

(திருப்பாவை :2)

என்பது இப்பாடலில் நாட்காலே என்பதற்கு நாட்காலை எனப்பாட வேறுபாடு மட்டுமே உள்ளது. பலப்பல பதிப்புகளிலும் இப்பாடமே உண்டு.

வையத்து வாழ்பவர்களே,

நாம் நோன்புக்குச் செய்யும் காரியங்களைக் கேளுங் கள். நாம் பரமன் அடிபாடி, தக்கவர்களுக்குக் கொடுக்கும் பொருளையும் துறவியர்க்கு வழங்கும் பிச்சையையும்

அவர்கள் கொள்ள வல்லவராய் இருக்குமளவும் கொடுத்து நெய் உண்ணமாட்டோம்; பாலும் அருந்த மாட்டோம்; விடியற் காலையில் நீராடிவிட்டு கண்ணில் மையிட்டு அழகுபடுத்திக் கொள்ள மாட்டோம்; பூக்களைக் கொண்டு குழலிலோ முடிய மாட்டோம். பெரியோர்கள் செய்யாத வற்றைச் செய்யமாட்டோம். **“பிறர்க்குத் தீங்கை விளை விக்கும் பொய்வார்த்தைகளைப் பேச மாட்டோம்”** என்பது இப் பாடற்பொருள்.

இறைவனைப் பாடுதல்; ஈகைபுரிதல்; உணவில் கட்டுப்பாடு; உடல் தூய்மை; ஒப்பனை செய்து கொள்ளாமை; செயல் செம்மை; சொல் தூய்மை ஆகியவை ஒன்றனோடு ஒன்று பொருந்தி நிற்றல் வெளிப்படை.

“தீக்குறளை சென்றோதோம்”

“தீக்குறளைச் சொன்றோதோம்”

குறளை = குறுமொழி, சிறுதனமான சொல்

குறள் = நூற்பெயர்; குறள் + ஐ = குறளை.

“தீக்குறளைச்” என ஒற்றுப் பெற்று வந்தால் அன்றிக் குறளைச் சுட்டாது.

ஒற்றுப் பெறாமல் குறளைச் சுட்டும் எனக் கொள்வதை
மொழியயில் அறியார் அன்றி அறிந்தார் சொல்லார்;
எப்பதிப்பிலும் ஒற்றுடன் அப்பாடம் இல்லை!
பெரியவாச்சான் பிள்ளை முதலோர் உரை
எவற்றினும் திருக்குறட் குறிப்பு இல்லை.
நூலறிந்தார் எவரும் அப்பொருள் கொள்ளவும் கொள்ளார்!

இவ்வகையால்,

“செய்தக்க அல்ல செயக் கெடும்”

என்பதற்கு எடுத்துக் காட்டாகிவிடுதல் ஆகாது என்பதே எம் எண்ணம்!

* * * * *

பெரியாழ்வார் பெயர் விட்டுணுசித்தர். அவர் வில்லி புத்தூரினர் ஆதலால 'வில்லியாழ்வார்' எனவும் பெயர் பெற்றார். அவர்தம் அருமை பெருமை என்ன?

அவர்க்கு முன்னர் மதுரைப் பெருநகரில் ஒரு பெண் தெய்வம் வினா எழுப்பியது.

"சான்றோரும் உண்டு கொல்!
சான்றோரும் உண்டு கொல்!
ஈன்ற குழவி
எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்!
சான்றோரும் உண்டுகொல்!....

என அலமந்து வினா எழுப்பியது. யான் அவர் கூறிய கடப்பாட்டைச் செய்வேன் என்பார்போல் செயற்கரிய செய்வாராய், பூந்தோட்டத்துக் கிடந்த பூமலர் அன்னவளை எடுத்துத் தம்மை அன்பால் ஆண்டாளாகக் கொண்டு வளர்த்த பேறு கருதியே தமிழ் மாலிய (வைணவ) உலகம் அவர்க்குப், 'பெரியாழ்வார்' எனப் பெயரிட்டது. பெரியாழ்வார்' வளர்ப்பு மகளாய்த் தெய்வத் திளைப்பிலே வளர்ந்து தெய்வப்பாமாலை பாடியவர், திருக்குறளைப் பயின்றிருந்தாலும் பயின்றிராவிடினும் வெறுக்கும் நூலாகக் கொள்வார் என்பதில் எள்ளத்தனைப் பொருளாவது இருக்க முடியுமா?

பாவை ஆண்டாள் பெயரால் ஆழ்வாரே பாடினார் என்றாரும் இருந்தனர். அப்படி அவரே பாடியிருப்பர் என ஒப்பாமல் ஒப்பினாலும் அவர் திருக்குறளைத் 'தீக்குறள்' என்று பழிக்க - ஒதுக்க என்ன நேர்ந்தது. அப்படி ஒதுக்கிய

ஒருவர் சான்றோர் மதிக்கும் சான்றோராக இருந்திருப் பாரா? 'இன்னான் எனக் காட்டுவது சொல்' என்ப தன்றோ வள்ளுவம்.

திருவள்ளுவ மாலையைச் சான்றாகச் காட்டி ஆவணப் படுத்துதல் பொருந்தாச் செயல். ஏனெனில், புனையப்பட்ட தொரு நூல். புனைவு மூலங்கள் பலரால் பல காலங்களில் செய்து உருவாக்கப்பட்டுத் தனித்தனி முகங்களைக் காட்டிப் புராணப் புனைவாக நின்றன. ஆனால் பழம் பெருமைமிக்க புலவர்கள் தலைமேல் வைக்கோல் புரியை வயிரமணி முடிபோல் சூட்டி வைத்துத் தெருக்கோலம் காட்டிய தாயிற்று. சமயச் சார்பினர் அதன் மெய்ம்மையைக் காண வல்லாராய் இருந்தும், ஒப்பிப் போற்றுதலும் தொடர் வதாயிற்று. இட்டுக் கட்டப்பட்ட புனைவு என்பது தெள்ளத் தெளிவாக எடுத்த எடுப்பிலே தோற்றம் தந்தும் அதனைச் சான்றாவணமாக அறவாணர் கொண்டிருத்தல் ஆகாது என்பது எம் கருத்து.

'அசரீரி' (உருவிலி) உரை கேட்டுச் செயலாற்றல் புறப்பொருள் வெண்பா மாலையில் இடம் பெற்றுள்ளது. குறிபார்ப்பவர் செயல் அது.

"இன்னே வருகுவர் தாயர்" என்போள் நன்னர் நன்மொழி" என்பது முல்லைப்பாட்டு.

"குடக்கள் நீ கொண்டுவா" என்று தெருவில் போகின்றவன் கூறினான். போருக்குக் கிளம்புபவன் செவியில் பட்டது இது. அதனால்,

"தடக்கையாய் வென்றி தரும்" புறப்படு என்றான், அவனொடும் இருந்தவன் என்பது புறப்பொருள் வெண் பாமாலை!

இவை மனிதர் குரல்! திருவள்ளுவமாலையோ,

"திருத்தரு தெய்வத் திருவள்ளுவரோடு
உருத்தகு நற்பலகை ஒக்க - இருக்க
உருத்திர சன்மர் எனஉரைத்து வானில்
ஒருக்கவோ என்றதோர் சொல்"

என அசரீரியைக் கூறுகிறது.

திருவள்ளுவமாலைக்கு உரையெழுதி வெளியிட்டவர் திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர். அவர்,

"இவ்வசரீரி வாக்கியம் கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தனர் என்று அறிக" என்றார்.

அசரீரி கேட்டு எழுதிய புலவர், நாமகள், இறையனார், உக்கிரப் பெருவழுதியார் பெயரால் எழுதினார். உக்கிரப் பெருவழுதியார் கடைச்சங்கத்தில் வீற்றிருந்தவர் என இறையனார் களவியல் கூறுவது. அவரைக் கூறிய பின் அக்காலப் புலவர்களாகப் பெயர் அறியப் பட்டார், இட்டுக் கட்டிக் கொள்ளப்பட்டார் என்பார் பெயர்களில் பாடி வைத்தார். திருவள்ளுவமாலை என்னும் பெயர் சூட்டினார். சரவணப்பெருமாள் ஐயர் உரை எழுதிப் பதிப்பித்தார்.

திருக்குறளை இறைவன் ஏற்றுக்கொண்டு சிறப்பித்தார் என்பதைக் கல்லாடர் சுட்டுவதால் இப்புனைவு அவர்காலம் தொட்ட தொடர்ச்சி எனல் விளக்கம்.

கபிலர், பரணர், நக்கீரர், மாமூலர், அரிசில்கிழார், பொன்முடியார், நல்லந்துவனார், தொடித்தலை விழுத் தண்டினார், வெள்ளிவீதியார், கோவூர்கிழார், மாங்குடி மருதனார், மோசிகீரனார், முதலோர் சங்கச் சான்றோர்,

வரிசையில் உள்ளவர். அவர்கள் ஒரு காலத்தார் அல்லர்; ஓரிடத்தார் அல்லர்! அவர்கள் எப்படி ஒன்றுகூடி நின்றனர்?

இப் புலமைத் தோன்றல்கள் இத் திருவள்ளுவ மாலையில் அனைவரும் வெண்பாவே பாடவேண்டும் என்னும் கட்டளை கொண்டு பாடினரா?

இச் சான்றோர்கள் பாடிய சங்கப் பாடல்களில் ஒன்றானும் வெண்பா உண்டா?

தொடித்தலை விழுத்தண்டினார் என்பார் பெயர் அறியக் கூடாமை கொண்டு தானே அவர் வழங்கிய தொடரால் பெயர் சூட்டப்பட்டார்! அவர் பெயரால் எப்படிப் பாடல் உண்டாயது?

'குலபதி நாயனார்' என்பார் பெயரில் உள்ள 'நாயனார்' பெயரீடு சங்கக் காலத்ததா?

இட்டுக்கட்டப்பட்ட புனைவு, சான்றாவணம் ஆகாது, இட்டுக்கட்டிப் பாடினாலும்,

"தினையளவு போதா" (5)

"பரந்த பொருளெல்லாம்" (13)

"ஆயிரத்து முந்நூற்று" (16)

"அறம்தகளி" (47)

"பொய்ப்பால" (49)

"வெள்ளிவியாழம்" (52)

ஆகிய இவை வள்ளுவச் சீர்மையை வடித்துக் காட்டுவனவாம்.

ஊழ் பற்றிய உரையாளர் தெளிவில்லாமையை மூலப் பொருளாய்க் கொண்ட ஆய்வு முற்றிலும் பொருந் தாதது. இது பற்றிய முடிவும் கொள்ளத் தக்கது அன்று.

தமிழர் முயற்சி இல்லாமல் முறிந்து போனதற்கு இத் தத்துவத்தின் பங்கு மிகப் பெரிது என்று ஆசிரியர் கூறுவது அவர் முடிவுக்கு முரணானது. "வள்ளுவம் ஆள்வோராலும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை" என்பது அவர் முடிவு. ஊழ்க்கொள்கையால், முயற்சி இல்லாமல் தமிழர் கெட்டார்கள் என்றால் வள்ளுவத்தால் கெட்டார் அல்லர். ஊழ்வினை, தலைவிதி, 'கர்மா' என்று சொல்லிச் சொல்லிச் செயற்பாட்டை ஒழித்துக் கட்டிய சமயவாணர் சமணர் - பௌத்தர் - வேதவழியர் - சிவனியர் - மாலியர்; கணியர் - தொன்மர் (புராணத்தர்) - பூசகர் (அருச்சகர்) என்பார் ஒட்டுமொத்தமாகக் கெடுத்த கேடேயாம்!

* * * * *

கார்ட்டு என்பார் எழுதிய உலகப் பெருமக்கள் நூறு பேர் பற்றிய நூலில் இந்தியாவைச் சேர்ந்த எவரும் இடம் பெறவில்லை; திருவள்ளுவம் பின்பற்றப்படாமையால் அதுவும் இடம்பெறவில்லை என்கிறார்.

நூறுபேருள் ஒருவராக வள்ளுவர் இடம் பெறா மைக்கு வள்ளுவரோ வள்ளுவமோ காரணமாக முடியாது. அதனை உலகுக்கு வழங்காக் குறை தமிழ் மண்ணின் - மக்களின் குறை! இங்கேயுள்ள அரசாலும் மக்களாலும் கொள்ளப்படாதது எனப்பட்ட வள்ளுவத்தை கார்ட்டு அறிந்திருக்க வழி என்ன?

வீரமாமுனிவர் காலம் வரை திருவள்ளுவம் என ஒரு நூலுண்மையை வெளிநாட்டவர் எவர் அறிந்தார்; இங்

கேயே பரவவிடாமல் தடுத்த வேதமதத்தார் வெளி நாட்டில் உலாக்கொள்ள வழிகாண்பாரா?

பிராமணர் அல்லாதாருள் எத்தனைபேர் கற்றார் இருந்தனர்?

ஆங்கிலர் ஆட்சியின் பின் தானே அவர்களுக்கு ஆட்சிக்கு ஆள் வேண்டும் என்னும் ஒரு நோக்கில் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன.

ஆயிரக்கணக்கில் வேதப்பாடசாலைகள் தெலுங்குப் பள்ளிகள் ஏற்படுத்திய திருமலை நாயக்கர், ஒரே ஒரு தமிழ்ப் பள்ளி தானும் அமைத்த வரலாறு இல்லையே!

49 வழி முறை ஆண்டதாகக் கூறப்படும் பாஞ்சாலங் குறிச்சி வரலாற்றில், வீரபாண்டியன் என்னும் ஒரே ஒரு புலவன் பெயரை அன்றி மறுபெயர் காட்டற்கு உண்டா?

ஆல்பிரட் சுவைட்சர் எழுதிய - திருக்குறளை மதிப் பிட்டுக் கூறிய - மெய்யியல் நூலை, மெய்யியல் கலையில் மேலோங்கி நின்ற இந்தியத் தலைவர் தடைப்படுத்தி விட்டது உண்டே!

திருக்குறள் தேசிய நூல் ஆகத்தடையாக இருக்கும் ஒரே ஒரு நூல் வருணப் பிரிவு காட்டும் கீதை நூல்தானே! அதனைப் பற்றிக் கொண்டுள்ளவர் வன்குரல்தானே தடை! வேறென்ன தடை?

இவையல்ல; இன்னும் பலப் பல அறிந்தவரே அற வாணர்! ஆயினும் இதனைச் சுட்டியமையால் இவ்வளவு எழுத வேண்டியது ஆயிற்றாம்!

அதிகாரப் பகுப்பைப் பாராட்டும் ஆசிரியர்,

"பொருள் : கயமை தான் இறைமாட்சி

இறைமாட்சி கயமைதான்.

அறம் : மக்களைக் கட்டுப்படுத்துவது ஒன்று கடவுள்;
இல்லை எனில் கர்மா; அல்லது இரண்டும்.

இன்பம்: சண்டை இல்லாமல் வாழ்க்கை இல்லை.
சண்டைதான் வாழ்க்கை" என்கிறார்.

. எங்கே அற நூல்கள் மிகுதியாகப் படைக்கப் பெற்றனவோ, அங்கே அநீதிகள் மிகுதியாக இருக்கும் (67)

வினைக் கொள்கை இருந்தால் கடவுள் கொள்கை தேவை இல்லை (70) என்பவற்றையும் சுட்டுகிறார்.

இவற்றைப் பற்றிய சிந்தனையை இதனைக் கற்பவர்க்கே விட்டுவிட்டு மேலே செல்கிறேன்.

* * * * *

"எல்லாக் கடவுள்களைப் பற்றிய கருத்துகளும் திருவள்ளுவத்தில் இல்லாமல் இல்லை" என்கிறார்.

திருவள்ளுவத்தில் இருப்பதைத் தங்கள் சமயக் கருத்தாகப் பிற சமயத்தவர் கொண்டிருக்கக் கூடாதா?

சடங்கு மதத்திற்கு அடங்கு கொள்கை உண்டா?

'அவாவறுத்தல்' என்பது அதற்கு ஏது?

சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் கடவுட் கொள்கை உண்டா? வினைக் கொள்கை இருந்தால் கடவுட் கொள்கை வேண்டுவது இல்லை அல்லவோ?

* * * * *

திருவள்ளுவர் காலத்து இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட **மதத்தை வற்புறுத்தும்** இலக்கியங்களாக இருந்தன (76) என்கிறார்.

திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றினவே மத இலக்கியங்கள். முதற்காப்பியமாம் சிலப்பதிகாரம், அதனோடு ஒட்டிப் பிறந்த மணிமேகலை, இவற்றின் பன்னூற்றாண்டுகட்குப் பின் வந்த பெருங்கதை, சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, பெரியபுராணம் கம்பராமாயணம் என்பவை வள்ளுவர் காலத்தவும் அல்ல; அவர் காலத்தை ஒட்டியவும் அல்ல. சங்கப் பாடல்களில் வைப்பு மணிபோல் பயன்படுத்தப்பட்ட திருக்குறளைக் காப்பியக்காலப் பகுதிக்குக் கொண்டுவருதல் ஆகாது.

சமயம் மதம் என்பவை இடம் பெறாதவை சங்க இலக்கியம். அதற்கு முற்பட்டது திருக்குறள். ஆதலால் அவர் காலத்தில் சமணம் புத்தம் வைதிகம் புகுந்திருந்தன. எனினும் தமிழில் சமய இலக்கியம் தோற்றமாயின அல்ல என்க.

* * * * *

“முதன் முறையாகக் கடவுள் வாழ்த்துப் பாடப் பட்ட நூல் திருக்குறள்” என்கிறார் அறிஞர்.

தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இடம்பெற வில்லை. ஆனால் கடவுள் வாழ்த்தை வாழ்த்து வகையுள் ஒன்றாகவும், அதுவே தலைப்பட்டதாகவும் உரைத்தவரும் அவரே. அவர் தந்த கடவுள் என்பதோ வாழ்த்து என்பதோ தாம் தம் நூலில் எவ்விடத்தும் ஆளாமல் இருந்தும் முதல் அதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்து எனப் பெயர் சூட்டியவர் திருவள்ளுவர்.

கருப்பொருள் வகையில் முதற்கண் தெய்வம் என்று தொடங்கியே உணவு முதலாகக் குறிக்கிறார் தொல் காப்பியர். மாயோன், சேயோன், வேந்தன், வருணன் எனத்திணைத் தலைமையரைக் குறிக்கிறார். கொற்றவை சுட்டப்படுகிறார். வேலன் வெறியாட்டும் இடம் பெறுகிறது.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

என்பது அது.

'கடவுள் வாழ்த்து' என்பதனொடு 'கொடிநிலை', 'கந்தழி', 'வள்ளி' என்பவை தொடர்ந்து வரும் என்கிறார்.

இவ்வரிசையில் திருவள்ளுவர், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு (கொடிநிலை), (நீத்தார் பெருமை), கந்தழி வள்ளி (அறன் வலியுறுத்தல்) எனப் பாயிரம் பாடினார் என்பதை மூதறிஞர் மு. இராகவ ஐயங்கார் தெளிவித்துக் கட்டுரை வரைந்தார். ஆகவே, தொல்காப்பியர் வழியில் நூல்யாத்த திருவள்ளுவர், அவர் வழியிலேயே பாயிரம் அமைத்துக் கொண்டார் எனலாம்.

* * * * *

தெய்வத்திற்கு எதிர்க்குரல் கொடுத்தவர் திருவள்ளுவர் என்னும் பேராசிரியர் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்" என்னும் குறளைக் குறிக்கிறார். இயற்றியான் ஆள்பவனே அன்றிக் கடவுள் அல்லது தெய்வம் அன்று என்பது முன்னரே விளக்கப்பட்டது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்பதில் உள்ள 'இயற்றல்' 'அரசு' என்பவை காண்க.

"தேவர் கயவரைப் போன்று இருப்பர்; கயவர் தேவரைப் போன்று இருப்பர்" என்கிறார் திருவள்ளுவர். "தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடப்பது பிழை; தேவரிடத்தும் அத்தகு பிழை உள்ளது" என்கிறார் ஆய்வறிஞர்.

கயவர் அறச் சட்டத்திற்குப் பணிந்து நடக்க மாட்டார். தேவரோ அறச்சட்டம் இல்லாமலும் நடக்க வேண்டிய முறை தவறாது நடப்பார். ஆதலால், முன்னவர்க்குச் சட்டம் இருந்தும் பயனில்லை. பின்னவர்க்கோ சட்டமே தேவை இல்லை. ஆதலால், இருவரும் இவ்வகையால் ஒப்பானவரே என அங்கத வகையால் பாடிய குறள் இது என்பது அறிஞர் அறிந்தது.

தேவர் என்பார் விண்ணவராகக் கொள்ள வேண்டு வதில்லை. திருவள்ளுவர் பெயர்களுள் ஒன்று 'தேவர்' என்பது. 'தேவர் குறளும்' என்பது முன்னே காட்டப்பட்டது. திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர், அருண்மொழித்தேவர், இராசராச சோழ தேவர், நக்கீர தேவர் என வருவாரெல்லாரும் விண்ணவரா? ஒரு சாதியரா? ஒரு சமயத்தரா? இல்லை? உயர்ந்தோர்க்கு இட்டு வழங்கிய ஒருபட்டப் பெயர், அவ்வளவே!

* * * * *

இந்திரனை மருத நிலத் தெய்வமாக உரைக்கும் தொல்காப்பிய உரையாசிரியர்க்குத் திருவள்ளுவர் எதிர்க் குரல் கொடுப்பதாகக் கொள்ளத்தகும் என்பது பொருந் துவதன்று.

திருவள்ளுவர் தொல்காப்பியர்க்குப் பின்னவரே அன்றித் தொல்காப்பிய உரையாசிரியர்களுக்குப் பின்ன வர் அல்லர் என்பது வெளிப்படை.

தொல்காப்பியர் வேந்தன் என்றே கூறினார். வேந்தன் என்பதற்கு இந்திரன் என உரையாளர் உரைகாண்பர் என்பது அவர் அறிவராச் செய்தி ஆயிற்றே! ஆதலால், 'எதிர்க் குரல்' என்பதற்கு இடமில்லையாம்.'

* * * * *

"தம் காலத்தில் உருவத்தைப் போற்றிய பல்வேறு மதங்கள் இருந்தமையால்... அவை சண்டை இட்டமையால்... உருவ வழிபாட்டைத் திருவள்ளுவர் ஏற்கவில்லை" (84) என்கிறார்.

அவர் காலத்தில் சமயப் பெயரால் இருந்தவை சமணம், பௌத்தம், வைதிகம் என்னும் மூன்றே. அவற்றுள் கொள்கை முட்டல் இருந்தன. உருவ வழிபாட்டின் வழியாக முட்டல் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனெனில் திருவடி வழிபாடே முன்னிரு சமயங்களும் கொண்டவை. வேதவழிபாடு எரி வளர்த்தல். திருவள்ளுவர் விலக்கத்தக்கன என ஆழ்ந்து எண்ணி விலக்குகிற "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்" என்பவற்றையும் புலால் மறுத்தல், கொல்லாமை முதலிய வற்றையும் விலக்கியது போல, உருவ வழிபாட்டையும் ஒதுக்கினார். அந்நாளினும் இந்நாளுக்கு அந்நெறி இன்றியமையாதது ஆயிற்று.

* * * * *

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (580)

என்னும் குறள் சாக்கிரடீசரை உட்கொண்டு கூறியதாகலாம் என மூலம் காட்டுகிறார் முனைவர். (86)

கண்ணோட்டத்தின் நிறைவுக் குறள் இது. கண்ணோட்டமே இல்லார், கொல்லத் திட்டமிட்டே - கொல்லவே தந்தது அந்த நஞ்சு. வள்ளுவர் சொல்வதோ, உலக உய்வுக்கு அடிமூலம் எனப்படும் கண்ணோட்டத்தின் வழியது.

"கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை" (571)

"கண்ணோட்டத் துள்ள துலகியல்" (572)

"கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்" (577)

என்பவை கண்ணோட்டச் சீர்மை. இக் குறள் விளக்காக அமைந்த நற்றிணைத் தொடர்,

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

என்பது முன்னே காட்டப்பட்டது.

"ஆக்கரிய மூக்குங்கை அரியுண்டாள் என்பாரை
நாக்கரியும் தயமுகனார் நாகரிகர் அல்லாமை"

என்பது கம்பர் காட்டும் அன்மைச் சான்று ஒப்பது சாக்கிரடீசர் சான்று.

நஞ்சுண்டமைக்கு 'நீலமணிமிடற்று ஒருவனை'ச் சுட்டுவாரும் உளர்! வள்ளுவர் உள்ளம் தொன்ம வழிப் பட்டதன்று. அதனைக் கண்டித்து மெய்ம்மம் காட்டுவது.

* * * * *

பெண் சொல்வதைக் கேட்டு ஆட்சி செய்தலாகாது என்று வள்ளுவர் கூறுகிறார் என்கிறார் பேராசிரியர் (92).

பல நாடுகளில் பெண்களே ஆட்சி நடத்திவரும் காலம் இது என்பதை எவருக்கும் சொல்ல வேண்டுவதில்லை.

திருக்குறள் 91 ஆம் அதிகாரம் பெண்வழிச் சேறல் என்பது. அதில் சொல்லும் செய்தி கொண்டு சொல்லு வது இக்கருத்து. இப் பெண் எப் பெண்?

அப் பெண் எப் பெண் என்பதை அறிய, வள்ளுவர் முன்னும் பின்னும் முட்காடு அமைத்துக் காட்டுவார் போலக் காட்டுகிறார். அப் பெண், இல்லறத்துக் காவல் கடன்பூண்ட வாழ்க்கைத்துணை அல்லள். அவ்வில்லறத்தை அழித்தொழிக்கும் கயமையனை அக் கயமையால் பற்றிக் கொண்டவள் அப்

பெண் என்பதை அறிந்துகொள்ள அருமையான அமைப்புச் செய்துள்ளார் வள்ளுவர். அதனை நோக்காமல் பொதுவாகப் "பெண் சொல்வதைக் கேட்டு ஆட்சி செய்தல் ஆகாது" எனல், ஆகாது. அதிகார வைப்புக் காண்க:

தீ நட்பு (82), கூடா நட்பு (83), பேதைமை (84), புல்லறிவாண்மை (85), இகல் (86), பகைமாட்சி (87), பகைத்திறம் தெரிதல் (88), உட்பகை (89), பெரியாரைப் பிழையாமை (90), **பெண் வழிச் சேறல் (91)**, வரைவின் மகளிர் (92), கள்ளுண்ணாமை (93), சூது (94) என்பவை அவை.

"மக்களே போல்வர் கயவர்" (1071)

"உறுப்பொத்தல் மக்கள் ஒப்பு அன்றால்" (993)

"போஒம் அளவும் ஓர்நோய்" (848)

என்னும் ஆடவரை ஒத்த பெண்டிர் அவர்.

பெரியாரைத் துணைக் கோடல் பிளேட்டோவின் கருத்து என்கிறார் பேராசிரியர்.

"மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே "என்னும் மெய்யுணர்வாளர் இருந்த மண்ணிலே, ஒரு பெரியாரைக் காணாமல் கிரேக்கம் போய்த் தேடிக் காண வேண்டிய தில்லை!

* * * * *

திருக்குறளைத் திருவள்ளுவரே மறுக்கு முகத்தான் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை என்னும்அதிகாரங்களை எழுதி யிருக்க வேண்டும் என்கிறார்.

*தம் நூலைப் பிறர்பிறர் மறுக்க வேண்டும் என்றா வள்ளுவத்தை எழுதினார் பேராசிரியர் அறவாணர். தம் நூலைத் தாமே மறுக்க வேண்டும் என்று எவரேனும் எழுதுவாரா?*

*சங்கோத்தர விருத்தி என்பதொரு நூல். சிவஞான முனிவரால் எழுதப்பட்டது.*

*"நாடிய பொருள் கை கூடும்" என்னும் கம்பர் பாடல் முற்றிலும் பிழையானது என்று எழுதிமுடித்துப் பின்னர் அப்பாடல் எப்பிழையும் அற்றது என்று நிறுவினார் என்பது அது. தம் புலமையை வெளிப்படுத்திக் காட்டும் தருக்க வேலை அது! திருவள்ளுவரா அப்படிச் செய்பவர்? (60-63)*

*இதனைச் சுட்டிய பேராசிரியர் "ஊழ் என்ற அதிகாரத்தைத் திருவள்ளுவர் முழுமனத்துடன் உடன்பட்டு எழுதியிருப்பாரா? என்று ஐயம் மேலிடுகிறது" என்கிறார். (99)*

*திருவள்ளுவரை இது எழுத வேண்டும்; இது எழுத வேண்டா என்று கட்டளை இட்டார் எவர்? அவர் முழு மனத்துடன் எழுதாமல் அரைமனத்துடன் எழுத வேண்டுவது என்ன? எழுதாமலே விட்டால் அவரைக் கேட்பார் எவர்?*

*கல்வியின் இலக்கணம் 'ஒரு முகப்பட்டுக் கற்பது' என்பதை "ஒருமைக்கண்தான்கற்ற கல்வி" என்றவர் ஒருமையிலாச் செயலா செய்வர்?*

*ஊழுக்கு உரைகாரரும் ஆய்வரும் படுத்திவைத்த பாடுகள்,*

*அலைக்கழிய வைக்கிறது அருமை அறவாணரை!*

* * * * *

"காமத்துப் பால் தனிநடையால் வேறொருவர் எழுதியிருக்க வேண்டும்" என்பர் என்கிறார்.

பிறர் கூற்றாக இருப்பினும் தமக்கும் ஓர் ஐயம் இன்றி இதனைச் சுட்ட நேர்ந்திராது.

சில நூல்கள் ஒருவரால் தொடங்கி இன்னொரு வரால் வளர்ந்து மற்றொருவரால் குடும்பத் தொடர் பணி போல நிறைவேற்றப்பட்ட வரலாறு உண்டு.

நூலாசிரியரே நூலும் மேற்கோளும் காட்டிய நூலில் நூற்பா முற்றிலும் முடித்து மேற்கோள் ஒரு பகுதி முடிந்த நிலையில் நின்று விட உரையாசிரியர் மேற்கோள் இயற்றி முடித்த நூல் உண்டு.

திருவள்ளுவர் முப்பாலும் பாடாக்கால் இரு பாலாகவே நின்றிருப்பதன்றி முப்பால் பெயர் எப்படி அதற்கு ஏற்பட்டிருக்கும்.

முப்பால் என்பதும் பழமைப் பெயர்களுள் ஒன்று தானே! காமத்துப்பால் இல்லாமல் வீரமாமுனிவர் மொழி பெயர்ப்பில் விட்டிருப்பது போல் முதற்பதிப்பு முதல் முப்பால் அன்றி இருபாற்பதிப்பு இல்லையே!

திருவள்ளுவ மாலைபோல நூலொடு சேராதிருந்து எவரேனும் ஒட்டிய ஒட்டாக என்றும் இருந்ததில்லையே!

தனித்தொருவர் காமத்துப் பால் பாடியிருந்தால் இறையனார் களவியல் போலத் தனிநூலாக நிற்க என்ன தடை?

'களவியல் காரிகை' என்பதொரு நூல் அப்படி நிற்றல் கண்கூடுதானே!

வள்ளுவர், நூன்முறையில் கூற்றுவகையால் காமத்துப் பாலை இயற்றினார் என்பதன்றி வேறொன்றும் இன்றாம்!

ஒருவர் தாமியற்றிய பாவிகத்தில் எத்தனை வண்ணங்கள்!

நடை மாற்றங்கள்!

உரைநடைகளிலேயே எத்தனை உத்திகள்!

தொழிலாளரை நோக்கி இந்நூலை எழுத இந்த நடையைக் கொண்டேன் என்கிறாரே திரு.வி.க. இவ் வையம் பரப்பப் படக்கூடாத ஐயம் எனத்தள்ளலாம்.

* * * * *

"கவனமாகச் சொற்களைக் கையாளும் திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி அதிகாரங்களில் ஆண்பாலையே முன்வைக்கிறார்; கல்விபெண்ணுக்கு மறுக்கப்பட்டது" எனக் காண்கிறார் பேராசிரியர். (122 - 123)

விருந்தோம்பல் என்னும் உயரிய பண்பை நினைக்கும்போது முதற்கண் தோன்றுவார் எவர்? ஆடவரா, மகளிரா? விடுதிகள் மிக்க இக் காலத்து விருந்தோம்பலே எனினும், மகளிர் பங்களிப்பை விலக்கிவிட முடியுமா?

"வருவிருந்து வைகலும் ஓம்புவான்" (83)

"முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான்" (84)

"விருந்தோம்பி மிச்சில் மிசைவான்" (85)

"வருவிருந்து பார்த்திருப்பான்" (86)

அதிகாரப் பத்துப் பாடல்களில் நான்கு பாடல்கள் ஆண்பாலாகவே உள்ளன. எப் பாடலிலும் பெண்பால் ஈறு இல்லவே இல்லை.

இது காட்டி, வள்ளுவர் நாளில் விருந்தோம்பல் மகளிர் கடமை - பண்பு - என இருக்கவில்லை. ஆண்களே ஆக்கிப் படைத்து ஆகும் வகையால் எல்லாம் விருந்து செய்தனர்.

மகளிர் கடமையில் விருந்தோம்பல் என்பது இருந்தது இல்லை என நம் பண்பாடும் வரலாறும் அறியாத ஒருவர் ஆய்ந்து எழுதினால் எப்படி இருக்கும்?

பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், உவமை இல்லாதான், அந்தணன், எண்குணத்தான் என்பனவெல்லாம் - பத்துப் பாடல்களிலும் ஆண்பாலாகவே இருத்தல்கொண்டு பழந்தமிழர் கிறித்தவரும் இசுலாமியரும் போலவே ஆண் பால் இறைவனாகவே கொண்டிருந்தனர்; பின்னே புகுந்தது தான் பெண்பால் (அம்மை) வழிபாடு என ஆய்வது பொருந்து வதாகுமா?

"ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப"

என்பது அறவாணர் அறியாதது அன்றே.

நஞ்சுண்டவன் சாவான் என்றால், நஞ்சுண்டவள் சாவாள்; நஞ்சுண்டவர் சாவார்; நஞ்சுண்டது சாகும்; நஞ்சுண்டவை சாகும் என ஐம்பாலும் தழுவும் என்னும் உரை அவர் அறியாதது அன்றே.

வள்ளுவர் வாழ்ந்த காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும், மகளிர் கல்வி வல்லாராய்த் திகழ்ந்தமைக்குச் சங்கப் பாடல்களே சான்று இல்லையா?

பொன்முடியார், மாசாத்தியார், வெண்ணிக் குயத்தியார், நச்செள்ளையார் இளவெயினியார், காவற்பெண்டு, கோப்பெருந்தேவி என எத்தனை பேர்கள் இருந்து சங்கத் தமிழ்க்கொடையாட்டியராக விளங்கினர்.

அந்நாளிலேயே இலக்கணம் செய்த காக்கை பாடினியாரும் சிறுகாக்கை பாடினியாரும் இருந்தனரே!

ஒளவையாரை மறந்து விட முடியுமா? அவர்தம் தூதை நினையாமல் முடியுமா?

பால் வேறுபாடு இல்லாமல் கற்ற காலம் சங்கக்காலம். (397)

கல்வி அதிகாரத்தில் என்னொருவன் (397), ஒருவற்கு (398, 400) என்னும் மூவிடங்களை அன்றி ஏழிடங்களிலும் இருபாற் பொதுமையிலேயே கூறியுள்ளார்.

எப்பொழுது, "வாழும் உயிர்க்குக் கல்வி கண்" "கண்ணுடையவர் என்பவர் கற்றோர்" என்று கூறினாரோ அவ்வுவமை வழியாலேயே இருபாற்பொதுமையாக் கினார் அல்லரோ!

கல்லாமையில் நான்கு பாடல்களில் ஆண்பால்; மற்றை ஆறு பாடல்களும் இருபாற் பொதுமைய! கேள்வியில் ஒரே பாடலில் மட்டும் ஆண்பால்; மற்றைஒன்பது பாடல்களும் இருபாற்பொதுமைய! அறிவுடைமையிலுள்ள பத்துப் பாடல்களுமே இருபாற் பொதுமைய!

* * * * *

வருணப் பிரிவு என்னும் கொள்ளை நோய் படிப் படியாகத் தமிழ் மண்ணைக் கவர்ந்து ஆடவர் கல்வியைக் கெடுத்து, அவ்வாடவரும் வருணப் பிரிவினரொடு சேர்ந்து மகளிர் கல்வியைக் கெடுத்து வைத்த கேட்டை மெய்யாக மாற்றிய ஒன்று உண்டானால், மனச் சான்றுடையார் முன் பளிச்சிட்டுக் காட்டுவது மேலையாரியராம் ஆங்கிலர்க்கு நாம் அடிமைப்பட்டதே! அவ்வடிமைப் பாட்டின் விளைவே "கேட்டிலும் உண்டோர் உறுதி" என நாலாங்கடை, ஐந்தாங்

கடை மக்களுக்கும் மகளிர்க்கும் கல்விக்கண் தந்ததாம். இல்லையேல் இன்றும்,

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" என மகளிர் கல்வியும்,

"காட்டுக்கம்பை எடுத்து மாட்டை ஓட்டுபவனுக்கு ஏனடா கல்வி?" என ஆடவர் கல்வியும் இல்லாமலே இருந்திருக்கும். கீழையாரியர் கற்கவிடார் என்பதற்கு, ஆசிரியனை முன்வைத்துத் தானே பயின்ற ஏகலைவன் கட்டைவிரல் இழப்பே சான்று!

* * * * *

"திருவள்ளுவர் தம் கருத்துகளைச் சித்தர்போல் பதிவு செய்ததுடன் அமைதி கொண்டிருக்க வேண்டும். உணர்ந்ததையும் அறிந்ததையும் தாமே பரப்பாமை தமிழ்ச் சித்தர் மரபாக இருந்தது. திருவள்ளுவம் பரவாமைக்கு அது முதன்மைக் காரணம்" என்கிறார் (141)

திருவள்ளுவர், "சித்தர்போல் தம் கருத்தைப் பதிவு செய்துவிட்டுப் பரப்பாது அமைந்தார்" என்பதும், "அதுவே திருக்குறள் பரவாமைக்கு முதன்மைக் காரணம்" என்பதும் இவண் கூறப்படும் குறைகளாம்.

திருவள்ளுவர் மேல் காணும் குறை சித்தர்கள் மேலும் தாவுதல் எண்ணத்தக்கது.

சித்தர் என்பார் பெரிதும் மணவாத்துறவர்; முழுதுறு தொண்டுக்குத் தம்மைத் தாமே ஆட்படுத்தி,

"காமம் வெகுளி மயக்கம்"

என்னும் மூன்றன் பிணிப்பும் அற்றவர். சித்தமலம் அறுத்தமையால் சித்தர் எனப்பட்டவர்.

தம் உடலையே ஆய்வுச் சாலையாகக் கொண்டு கடிய மருந்துகளையெல்லாம் ஆய்ந்து கண்டவர்.

அவருள் பலர் குறியிறையராய் (கோவணம் கட்டிய வராய்)க் காடே மேடே மழையே பனியே பசியே நோயே என்பன பாராமல் மருத்துவப் பணிபுரிந்தவர்.

பணத்திற்கு மட்டுமன்றிப் பரிவுக்கும் பணிவுக்கும் கூட மயங்காமல் முழுதுறு ஆன்ம நேயராய்த் திகழ்ந்தவர். சாதி சமயம் சடங்குக் கட்டுகளை விட்டவர்.

அந்நாள் பதிவாவணமாக இருந்த பனை ஓலையில் பதிவு செய்த அளவில் அமையாமல் தக்கார்க்குக் கற் பித்தும் மருத்துவம் புரிந்தும் வாழ்ந்தவர்.

நஞ்சின் சேர்க்கையொடு மருந்து செய்யும் முறையைத் தெளிந்தவர். அம்முறை அறியாமல் செய்தால் நேரிடும் எதிரிடைக்கு அஞ்சிப் பாதுகாப்பில் வைத்திருந்தவர். தங்களை ஒத்தாரொடு கலந்து மேலாய்வு செய்யச் சில குறியீடுகளைக் கொண்டிருந்தவர். இந் நாளில் வழங்கும் தெரிவியல், புரிவியல் ஆகிய இருவகைகளாலும் கடனாற்றியவர்.

அவர்கள் அரும்பணியின் அடையாளமாக இன்றும் கூடப் பாதுகாக்கப்பட்டு வரும் ஏட்டுச் சுவடிகளில் இலக்கண இலக்கியச் சுவடிகளிலும் பன்னூறு மடங்கு கிடைப்பது மருத்துவச் சுவடிகளே என்பது நேரில் நின்று மெய்ப்பிக்கும்.

ஆங்கிலவர் வரவு, கல்விக்கூடம், ஆய்வுச்சாலை, அச்சீடு, கணினி, செய்தி ஊடகம் ஆகிய கண்கொண்டு அவர்கள் பணியைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது என்பதே இவ் விரிவிளக்கச் செய்தியாம்.

திருவள்ளுவர் கருத்தின் அளவு தமிழ்மண்ணில் எப்புலவர் கருத்தும் விரிவாக்கமாகப் புலமையரால் போற்றப்படவில்லை. சமயச் சார்பு, நம்பிக்கை, மாந்தர் நிலைக்கு மேம்பட்ட புனைவுக்காட்சி, மோட்சம், நரகம், புண்ணியம் பாவம் என்பவற்றால் தொன்மக் கதைகள் கல்லா மக்களிடத்தும் பரப்பப்பட்டாலும், கோயில் மணியொலிப்பதுபோல் பொதுமக்கள் செவியில் புனைவுகள் புகுந்துகொண்டிருந் தாலும், தமிழர் அறமாகத் திருக்குறளே இருந்துவந்திருக் கிறது, இருந்து வருகிறது என்பது மாற்றருஞ் செய்தியாம்.

அந்நூலுக்கு உரைகண்டார் பதின்மர் என்பது எந்நூலுக்கு வாய்த்தது?

அந்நூல் பாடல் மின்னுமாறு கிளர்ந்த நூல்கள் எத்தனை? பிற்காலப் புனைவு வகையால் தானும் திரு வள்ளுவமாலை போல் பிறிதொரு நூலுக்குத் தோற்ற முற்றதில்லையே! ஆதலால் திருவள்ளுவர் பரப்பாமல் பதிவு மட்டும் செய்துவிட்டு அமைந்தார் என்னும் முடிவு சாலாதாம்.

* * * * *

“திருக்குறள் சைன நூல் - புறச் சமயநூல் - எனப் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும்” என்கிறார் (162)

இதனால் என்ன புரிகிறது? திருக்குறள் சமண நூல் என்பது அறவாணர் முடிவாகின்றது.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடியவர் என் பதை ஒப்புக் கொண்டால் அவர் சமணர் என்பதை ஒப்பக்கூடாதே.

திருக்குறள் முக்குடை, பிண்டி, அசோகு என்பவை இடம் பெற்றிருக்கவாவது வேண்டுமே!

அப்படி இடம் பெறவில்லை என்றாலும் நிலையாமையைச் சொல்லியல்லவோ நூல் விரிவுற வேண்டும்!

நிலையாமையை 34 ஆம் அதிகாரமாக்கிப் பத்துக் குறள்களோடா நிறுத்த முடியும்? இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்பவை எல்லாம் விரித்துரைக்கும் 'நாலடியார்' நூல் விரிவு எங்கே? நிலையாமை துறவு என்பவை, பற்றே பற்றாய்ப் பற்றிக் கிடப்பானையும் உளநெகிழ - உருக - அல்லவோ பாடப் பட்டுள்ளன! வசை என்பதே இல்லையே! 'காமத்துப் பால்' என ஒன்று இடம் பெறல் கூடுமா? காலால் தேய்த்துப் போட்ட வாழைப்பழத்தோல் போல அல்லவோ நாலடியாரில் காமம் கடைநிலையில் நிற்கின்றது. உழவுக்கும் பெண்மைக்கும் இவ்வளவு பெருமை ஏற்பட்டிருக்குமா?

கொல்லாமையும் புலால் உண்ணாமையுமாகிய ஈரறங்களைக் காட்டி மட்டும் சமண நூல் எனலாமா?

'குந்த குந்தர்' திருவள்ளுவர் என்றோ,

'வல்லபாசாரியார்' திருவள்ளுவர் என்றோ,

உறுதிப்படுத்த முடியுமா? "புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரமாம்" என்பதற்கு ஒப்பிலாச் சான்றாக விளங்கியவர் மகாவீரர்! 'தயாமூலம்' என்பதன் வடிவர் அவர். சமணமோ சால்பு மிக்க சமயம்! அருளிரக்கமே உயிர்ப்பு ஆகிய சமயம்! தமிழுக்குப் பல்வளம் சேர்த்த சமயம்! எள்ளத்தனையும் ஐயமில்லை! ஆனால், தொல் காப்பியத்தையும் திருவள்ளுவத்தையும் அக்கூட்டிலே வைப்பது இன்று அன்று; என்றும் ஆகாச் செயலாம்.

சமண நூல் எனத் தமிழர் புறம் தள்ளியிருந்தால் சைவமடங்கள், சிவனியர் இல்லங்கள் ஆகியவற்றில்

அவ்வேடுகள் இருந்திருக்குமா? பரிமேலழகர் போலும் வேதநெறியரும், சிவனியர் மாலியர் என்பார் தாமும் முன்பே உரைகண்டிருப்பரா?

வீர சிவனியராம் சிவப்பிரகாச அடிகள்,

"எம் அடிகள் இணையடி நேர் ஈரடிகள்"

என்று பாராட்டி இருப்பாரா? திருக்குறள் உரைக்களஞ்சியம் உரைக்கொத்து என்பவற்றை வழங்கியவை சிவனிய மடங்கள் அல்லவோ!

* * * * *

"அறநூல்கள் வாசகனை முன்னிலைப் படுத்தாமையால் மக்களைச் சென்றடையவில்லை" என்பதொரு செய்தியை முன்வைக்கிறார் நிறுத்துரைக்க வல்ல அறவாணர்.

திருக்குறள் முதல் நான்கு அதிகாரம் பாயிரம். அடுத்த மூன்று அதிகாரங்கள் தலைவன் தலைவி மக்கள் என்பார். அவர்களைமுன்னிலைப்படுத்தியே அன்புடைமை தொடங்கி வாழ்வியல் ஓதுகிறார் வள்ளுவர்.

"உங்களிடம் அன்பு உண்டா? அன்பு இருந்தால் உங்களால் எப்படி மறைக்க நினைத்தாலும் மறையாமல் வெளிப்படுவது அன்பு" எனத் தொடங்குபவர், அன்போடு கூடிய உடலே உயிரோடிருக்கும் உடல்! ஆதலால் அன்பைப் பெருக்குக! ஒருவருக்கு ஒருவர் ஆர்வத் தளிர்ப்பு உண்டாம் அவ்வார்வம் ஒருவரோடு ஒருவராகி இயைந்துவிடும் நட்பை உண்டாக்கும்! வாழ்வில் எண்ணற்கரிய சிறப்புகள் ஏற்படும் என்கிறார்.

இப்படித் தம் நூலைக் கற்பவரையே முன்னிலைப் படுத்திக் கூறுகிறது. கற்பவர் கேட்பவர் பற்றிக் கொள்பவர்

ஆகியவர்களைத்தழுவிக் கூறுதல் நயந்து கூறுதல் கனிந்து கூறுதல் கடிந்து கூறுதல் கண்டித்துக் கூறுதல் ஆகிய வற்றை எல்லாம் தாய், தந்தை, ஆசான் நண்பன் ஆகிய நிலைகளில் நின்று கூறுகிறது.

அறநூல்கள் என்னும் பொதுமைச் சுட்டு, வள்ளுவத்தை மட்டுமே குறியாதே எனின், அதனைக் குறியாமல் ஒதுக்கியதாகக் கொள்ளவும் முடியாதே!

மேடைதோறும் கேட்கும் ஒருகுரல்! பெரிய கண்டு பிடிப்புப் போல் முழங்கும் குரல்! போலிமைக் குரல்!

"தெய்வம் மனிதனுக்குக் கூறியது கீதை!

மனிதன் தெய்வத்திற்குக் கூறியது திருவாசகம்!

மனிதன் மனிதனுக்குக் கூறியது திருக்குறள்!"

என்பது அது.

மனிதர் எனப்படுபவர் எவர்?

அதனைப் படிப்பவர்தாமே!

**பத்தாம் அதிகாரம் இனியவை கூறல்.**

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" (99)

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (100)

**இருபதாம் அதிகாரம் பயனில சொல்லாமை;**

"பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்" (196)

"நயனில சொல்லிலும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று" (197)

"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்"

**உழவு அதிகாரம் (104)**

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" (1040)

**இரவச்சம் (107)**

"இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று" (1067)

*- இவை கூட வாசகனைத் தொட்டுச் சொல்லாதவையா?*

* * * * *

*பொது மக்கள் அனைவருக்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமான கருத்து" என்கிறார் (144).*

*முன்னே அவர் கூறிய கருத்துக்கு முரணானது இச் செய்தி எனினும், அழுத்தமாகச் சொல்ல வேண்டிய கருத்தையே அருமையாகக் கூறுகிறார் எனப் பாராட்டுதல் வேண்டும்.*

"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்"

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

*என்னும் குறள்களை உட்கொண்ட தெளிவின் முடிவு இஃதாம்.*

* * * * *

*அறிஞர் அறவாணர் தாம் நூல் செய்த நோக்கம் இன்னதென முன்னுரையிலேயே தெளிவிக்கிறார்.*

"இந்நூலின் நோக்கம் வழக்கமான திருக்குறள் வரிசை முறையைப் போற்றுவதுடன் திருக்குறளைக் கருத்து (பொருள்) அடிப்படையில் வழங்குவது ஆகும்" என்கிறார்.

இந்நோக்கம் அரியது தேவையானது என எவரும் பாராட்டத்தக்கது. பொருள் அடிப்படையில் அறம், அறிவு, அன்பு என எடுத்துக் கொண்டு அப் பொருள் முறையை அகராதி முறையில் செய்திருந்தால் பல்லோரால் வெளிப் படுத்தப்பட்டுள்ள சொல்லடைவினும் அரிய பெரிய பயன் செய்யக்கூடியதாய், கருதிய அளவில் கையில் வாய்க்கும் கனியெனப் பயன்பட்டிருக்கும். ஆனால் அப்பொருள் அடைவுக் குறள் தன் வரிசை மாறா வாய்மை வழக்கைத் தவறாமல் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அப்படியொரு நூல் யானே அடைவு செய்து எழுபதின் கவனகர் செல்வர் கலை. செழியனால் படி எடுக்கப்பட்டு அச்சிடப்படும் நிலையில் அமைந்துள்ளது. அச் செயலை அறிஞர் அறவாணர் செய்திருந்தால் பிறரொருவர் செய்யத் தேவையில்லாமல் நின்றிருக்கும்.

* * * * *

திருக்குறள் கருத்து அடிப்படையில் ஆகிய மாற்றத் தையும் அம் முன்னுரையிலேயே குறிக்கிறார்.

"14 தலைப்புகளில் இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஏற்றவாறு அந்தந்த இயல்களில் அதிகாரத் தலைப்பு களும் குறள்களும் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு ஏற்றவாறு வரிசை எண்கள் அமைந்துள்ளன" என்கிறார்.

சான்றாக அகரமுதல எனத் தொடங்கும் முதற்குறள் அறவாணர் பொருளடைவின்படி 1041 ஆம் குறளாக அமைந்துள்ளது.

பதின்மர் பழையரும், புதுமையர் நூற்றின் மேலரும் அவரவர் மனப்போக்கில் அறிவுத் துணிவில் குறள்களை மாற்றி எண் கொடுத்தால் எக்குறளை எவர்கண் கொண்டு எண்ணி எடுப்பது? பழைய எண்ணும் தரப்பட்டாலும் உள்ள எண்ணுக்கே அச்சீட்டில் இடமாறிப் போகக் காணும் நாம், ஒவ்வொருவர் எண் படியும் எடுப்பது எப்பொழுது? முடிப்பது எப்பொழுது?

"கு.ச. ஆனந்தனார் திருக்குறள் எண்"

"சாலமன் பாப்பையனார் திருக்குறள் எண்"

"அறவாணனார் திருக்குறள் எண்"

என இப்படித் தொடர்ந்தால், 'சிவமயம் நாலடியார், நமசிவாய நாலடியார், நமோ நாராயண நாலடியார், சரவணபவ நாலடியார் என ஒரே ஒரு நாலடியார் 'ஏட்டுச் சுவடி அட்டவணையில் பன் முகம் காட்டுவது போல் திருக்குறளும் பன் முகம் காட்ட வேண்டிவந்துவிடும்.

* * * * *

ஆய்வின் பேரால் எதுவும் செய்யுங்கள்!

மூலத்தைத் திரிக்காதீர்கள்!

மூலத்தை இடம் மாற்றாதீர்கள்!

"இந்நூற்பா இவ்வியலில் இடம் பெற்றிருக்க வேண் டும்; ஆனால் இவ்விடத்தமைந்துள்ளது" என்று, உரை வல்லார் தம் உரையில் சுட்டிச் சென்ற நனிநாகரிகத்தைக் கைவிடுதல் ஆகாது. ஆகவே ஆகாது!

நில அளவை எல்லைக் கல்களை மாற்றிப் போடுவதும்,

பட்டாவில் உள்ள பெயரைத் திரித்து மாற்றுவதும்,

கள்ளப்பணத்தாள், போலி முத்திரைத்தாள் அச்சிட்டு வழங்குவதும், போலிப் பெயரில் கடவுச் சீட்டு வழங்குவதும் ஆகியவற்றை ஒப்பது அவரவர் மனம் போல் மூலத்தை மாற்றுவதும், மூல இடம்மாற்றுவதும் என்று தள்ளிவிட வேண்டியது. ஆதலால், அறவாணர் கருத்து அடிப்படையில் வழங்கிய பகுதியை ஆய்வுக்குக் கொள்ளாமல் தள்ளுதலே நயன்மை எனத்தள்ளப்பட்டதாம்.

ஒன்றுமட்டும் புரியவில்லை! அறவாணர் போல்வார் இத்தகு செயலில் ஈடுபட என்ன நேர்ந்தது? என்ன ஆயது? என்பது மட்டும் புரியவில்லை! எவ்வளவு மதிப்புக்குரியவர் அவர்!

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்" (447)

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" (448)

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (784)

என்பவை நம் பொய்யாமொழிப் பொருளுரை!

• • •

பின் இணைப்பு

# திருக்குறள் தேசியநூல் ஆகட்டும்

திருக்குறளுக்கு 'அறம்' என்பது பழம் பெயர். அது புறநானூற்றில் காண்பது. ஆசிரியர் தொல்காப்பியர் வழியில், முப்பால் கொண்டது திருக்குறள் என்றாலும், 'அறத்தொடும் அமைவதே பொருள், அறத்தொடும் அமைவதே காமம்' எனவும், முப்பாலும் அறமாக அமைந்தது திருக்குறள்.

அறமானது சொல்லுக்கும் செயலுக்கும் முன்னை நிலையாம் மனநிலையிலேயே அமைந்தது என்றும், மன மாசில்லாமையே அவ்வறம் என்றும், அதனை வலியுறுத்திக் கூறுதலே அறன்வலியுறுத்துல் என்றும், அறவாழ்வே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலையுறுதல் என்றும், அத்தெய்வ நிலை இல்வாழ்வின் நிறைநிலையாம் புகழாலும், துறவு மேம்பாடாம் அவாவறுத்துப் பேராப் பெருநிலை யுறுதலாலும் கூடும் என்றும், இவ்விரு வகை வாழ்வின் அரணமாய் அமைய வேண்டியது அரசு என்றும் கூறுவது திருக்குறள்.

வீடாயினும் நாடாயினும் அமைப்பாயினும் பிறபிற ஆயினும் அவற்றின் மூல அலகாம் தனிமாந்தர், ஒத்ததறிந்த வராய் ஒப்புரவு பேணுபவராய்த் தாம் பெறும் நலங்கள்

யாவும், பிறரும் பெறுவதற்கு உரியர் என உணர்ந்து வாழுதல் பெருமையராய்த் திகழ வேண்டும் என்னும் அடிப்படை அறமே அறமாய் அமைந்த நூல் திருக்குறள்.

அதனால், குறுநாடுகள் பெருநாடு எனக் காணும் எல்லா நாடுகளுக்கும் உரிய கூட்டமைப்பாகிய உலக ஒன்றிய நிறுவனத்திற்கும் மேலாணை நூலாகக் கொள்ள வேண்டிய தகவமைந்த திருக்குறள், தான் பிறந்த மண்ணின் ஆணை நூலாக ஆக்கப்பட வேண்டும் என அம்மண்ணின் மைந்தராய் ஆட்சியில் இருக்கிறோம் என்பார்க்கும் எடுத்துரைக்க வேண்டிய நயனிலா நிலை தொடராவாறு, உடனடியாகத் தமிழக அரசும், இந்திய அரசும் தத்தம் தேசிய நூலாக அறிவித்தல், காலம் கடந்தேனும் செய்த கடப்பாடாக அமைந்து பெருமை கொள்ளும் பேறு எய்தும்.

"திருக்குறள் தேசிய நூலாதற்குரிய தகுதியைத் தன்னகத்துக் கொண்டதா?" என அதனை மேலோட்டமாகக் கற்றாரும் கருதார். அத்தகுதியுடைய தன்று என்று ஒருவர் கொண்டால், அவர்அறியாமையால் கூறுவாராக இரார்! நன்றாக அறிந்தே வன்கண்மையாக எதிர்ப்பதே வாழ்வாகிப் போன பிறவியராக இருப்பார் என்பது உறுதியாம்! ஏனெனில், அதனை ஒத்ததொரு நூலைக் காட்டக் கூடாமல் இருந்தும், தடுப்பார், தடுப்பாரா? கெடுப்பாரா? "திருக்குறள் தேசிய நூலாதற்குரிய தகுதியைத் தன்னகத்தே கொண்டது என்பதை மெய்ப்பிக்கும் சான்றுகள் காட்டப்பட வேண்டும் அல்லவோ?" எனின் அது முறையான வினாவுதலாம்.

தேசியநூல் என்பதற்குரிய முதல் அடிப்படை. அது 'சார்பின்மை' என்னும் பொதுவறம் போற்றும் நூலாக இருத்தல் வேண்டும் என்பதே.

ஒரு தேசியப் பரப்பில் சமயம், சாதி, கட்சி, அரசியல், மொழி, இனம், தொழில், மண் எனப் பலப்பல சார்புகள் இருக்கும்; இருக்கவே இருக்கும். இவற்றுள் எவ்வொரு சார்புக்கும் இடம் தராததாய் ஒத்த தறியும் சால்பின தாய் இருத்தல் வேண்டும். சார்பின்மையாம் சால்பே தேசிய நூல் ஈதென நிறையிட்டுக்காட்டும் சமன் கோல்!

தனி மனிதனை விடுத்த உலகத்தையோ, உலகத்தை விடுத்த தனிமனிதனையோ பாராத செவ்வியல் பார்வை யில் அமைக்கப்பட்ட நூல் திருக்குறள். ஆதலால், பிரித்தும் பிளந்தும் பிணங்கியும் பார்க்கும் பார்வை அதற்கு இல்லை ஆயிற்று. தமிழ் மண்ணில் தோன்றியது என்பது தானும் அஃது இயற்றப்பட்ட மொழியால் அறிவதை அன்றிச் சுட்டுவகையால் அறியாப் பெற்றியதாம்.

மாறுவதை மாறா இயல்பாகக் கொண்ட வாழ் வியலில், மாறாத் தன்மைய எவையோ அவற்றையே உரைக்கும் கடப்பாட்டை மேற்கொண்டமையால், கால-இட-பழக்க-வழக்க-நிலைகளைக் கடந்து, என்றும் எங்கும் எவரும் ஏற்றுப் போற்றும் நீர்மையதாய் நிலவக் கூடி யதாம் திருக்குறள். அது, சமய ஒப்புரவு, பிறப்பு ஒப்புரவு, கல்வி ஒப்புரவு, செல்வ ஒப்புரவு, பால் ஒப்புரவு, பதவி ஒப்புரவு, அறநிலை ஒப்புரவு, உரிமைத் துய்ப்பு ஒப்புரவு எனப்பலப்பல எவருக்கும் விலக்கில்லாமல் வழங்கும் இயங்கியல் சிறப்பால், நாட்டியல் சட்டமாம் நெறி முறையில் அமைந்து உலகுக்கொரு தனிமாமணி நூலாகத் திகழ்கிறதாம்.

"இந்திய நாட்டின் குடிமக்களாகிய நாம் நமது நாட்டை மக்களாட்சி நிலவும்கோன்மை நிறை குடியரசாக

அமைத்துக் கொள்ளுவதென உறுதிபூண்டு குடிகள் அனைவருக்கும் :

சமூகம், பொருளாதாரம், அரசியல் இவற்றில் நீதி, சிந்தனை, கருத்துரை வெளியிடுதல், நம்பிக்கை சமயம் வழிபாடு இவற்றில் தன்னுரிமை, தரத்திலும் வாய்ப்பிலும் சமநிலை, தனிமனிதன் மாண்பையும் நாட்டின் ஒற்றுமை யையும் வளர்க்கும் ஒப்புரவு - இவைகளைப் பாதுகாத்துப் பேணி வளர்ப்பதற்கென்று இந்த அரசியலமைப்புச் சட்டத்தை நமக்கென நாமே வகுதது அளித்துக் கொள்கிறோம்" என்னும் நயனார்ந்த முன்னுரையுடன் நம் அரசியலமைப்புச் சட்டம் தொடங்குகிறது. (குறள் கூறும் சட்டநெறி. மா. சண்முக சுப்பிரமணியம் பக்.26-27).

அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் எதுவோ அதுவே, அதனினும் மேம்பட்ட தெளிவான மக்கள் நடைமுறை வாழ்வொடு பின்னிப்பிணைய அமைக்கப் பட்ட நெறிமுறைகளைக் கொண்டது திருக்குறள்.

> " நீதி என்பது வழக்குகளைத் தீர்ப்பதில் மட்டுமே
> பயன்படும் கொள்கைஅன்று;
> மக்களின் சமுதாய வாழ்வில் நீதி வேண்டும்;
> பொருளாதார நிலையில் நீதி வேண்டும்;
> அரசியலில் நீதி வேண்டும்;
> மக்கள் வாழ்வில் பலதுறைகளிலும் நீதி நிலவுவது உயர்ந்த
> சமுதாய வாழ்வாகும்.

'பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை' என்பது சமுதாய நீதிக் கொள்கைகளில் ஒன்று.

'தனி ஒருவருக்கு உணவு இல்லை என்ற நிலை கூடாது' என்பது பொருளாதார நீதிக் கொள்கைகளில் ஒன்று.

'அரசை நடத்துவதில் அனைவருக்கும் பங்கு வேண்டும் என்பது அரசியல் நீதி'. இந்நெறிமுறைகளின் அடித்தளம், கட்டுமானம், (கூஷ நூல் பக். 28) முகடு, உள்பகுப்பு, வனப்பு என்பவற்றில் குறைவிலா நிறைவாய் அமைந்த அறமாளிகை திருக்குறள் என்பதை அதனைக் கற்றார்க்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இல்லை'.

'சாமானிய மனிதன் மனிதனாக வாழ, இல்லறத்தில் ஈடுபட்டு ஏற்றமுற, துறவறத்தில் தோய்ந்து ஆன்மிக அனுபவம் பெற, சமுதாய வாழ்வில் தனிமனிதன் பிறரோடு நல்லதொரு மனித உறவைப் போற்றி வளர்க்கத் திருவள்ளுவர், தம் வான்மறையை வகுத்தளித்துள்ளார்.

"அவர் பாடும் மனிதன் - தமிழகத்தில் வாழ்பவன் மட்டுமன்று; கங்கைக் கரையிலும் காவிரிக் கரையிலும் வாழ்பவன் மட்டுமன்று; அவன் அனைத்துலக மனிதன்; புகழ்மிக்க பண்டைக்கால மனிதன் மட்டுமன்று; பொலிவு மிக்க புதுமைக்கால மனிதன் மட்டுமன்று; எதிர்கால விண்வெளி மனிதனும் ஆவான். இந்த அனைத்துலக மனிதப் பண்பு திருக்குறளின் உயிர் மூச்சாகும்" என்னும் க.த. திருநாவுக்கரசு மதிப்பீடும்,

"வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக - நலமாக -வாழ் வதற்கே! மகிழ்வுடன் வாழ்வதற்கே! அன்புடன் வாழ் வதற்கே! முயற்சியுடன் வாழ்வதற்கே! என்னும் அறக் கொள்கை திருக்குறளின் உயிர் நாடியாகும்.

"பண்டைக் காலத்திய இந்தியாவில் திருக்குறளில் காணப்படுவதைப் போன்ற அன்புவழிப்பட்ட செயல் முறை வாழ்க்கையும், வாழ்க்கை மறுப்பு இன்மைக் கோட் பாடும் பிராமண சமயத்திலோ, புத்த சமயத்திலோ (சமண

சமயத்திலோ); பகவத்கீதை வழி வளர்ந்த இந்து சமயத்திலோ இடம் பெறவில்லை!" என்னும் ஆல்பர்ட்டு சுவைட்சர் தேர்ச்சியுரையும் (திருக்குறளும் இந்திய அறநூல்களும் பக். 95-96).

**எண்ணின், உலகுக்கு ஒரு நூலாக உயர்ந்து விளங்கும் திருக்குறள் தேசிய நூல் ஆதற்கு அவ்வாறு ஆக்க விரும்பாதார், ஆக்க முடியாதார் தடையன்றி, வேறு என்ன தடை இருக்க முடியும்?**

'எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேல்மிதக்கும்" என்பது பாவாணர் பல்கால் வழங்கும் பழமொழி.

"**வாய்மையே வெல்லும்** என்னும் தேசிய முத்திரையை நிலைநாட்டுதற்கு வாய்ந்த **வாயுறை வாழ்த்தாம்** திருக்குறள் போலும் தகுதி வேறு. எந்நூலுக்கு உண்டு?

வாய்மையே வெல்லுமா, வாயுறை வாழ்த்தாக!

❑ ❑ ❑

# குறிப்புகள்

புண்படுத்தக் கூறும் வழக்கம் எனக்கு இல்லை!

பண்படுத்தக் கூறுவதைத் தவிர்வதும் இல்லை!

வருந்தக் கூறுவதை ஒருநாளும் கொண்டது இல்லை!

திருந்தக் கூறுவதை எந்நாளும் விட்டதும் இல்லை!

இரா. இளங்குமரன்